கல்கி



KALKI மே 4, 1952 4 அணா



துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்கிறது!

S. 179-50 TM

கல்கி பொருளடக்கம்

மலர் 11 | இதழ் 40

1952 மே 4

நந்தன ௵ சித்திரை 22

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

கல்கி

மலர் 11 | தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 40

மந்திரிசபை நீடிக்குமா?

"சென்னை மக்களின் அதிர்ஷ்டவசத்தினால் புதிதாக ஏற்பட்டிருக்கும் ராஜாஜி மந்திரி சபை இதே முறையில் அதிக காலம் நீடித்திருக்க முடியாது; சீக்கிரத்தில் பொதுத் தேர்தல் நடத்தவேண்டி வரலாம்" என்று நாம் முந்தைய இதழ் ஒன்றில் எழுதியிருந்தோம். அதைக் குறித்துச் சில நேயர்கள் தங்கள் வருத்தத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த மந்திரி சபையே நீடித்திருக்க வேண்டும் என்றும், அதற்குரிய முயற்சிகளை எல்லாரும் செய்ய வேண்டுமென்றும் மேற்கூறிய நண்பர்கள் கருதுகிறார்கள்.

இப்போதைய ராஜாஜி மந்திரி சபை நீடித்துச் சில வருஷ காலம் நடக்கக் கூடுமானால், அது இம்மாகாணத்துக்குப் பெரிதும் நன்மை பயக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. சென்னை மாகாணத்து மக்கள் அதையே விரும்புகிறார்கள்; நாமும் அதையே விரும்புகிறோம்.

மதுரையில் நடந்த மாபெரும் பொதுக் கூட்டத்தில் ராஜாஜி பேசுகையில், "உங்களுடைய முக மலர்ச்சியைப் பார்க்கும்போது எனக்கு இப்பொறுப்பில் ஏற்பட்டிருந்த தயக்கம் நீங்கி விட்டது!" என்றார். சென்னை மக்களின் உணர்ச்சி விஷயமாக ராஜாஜிக்குச் சந்தேகமும் தயக்கமும் இருந்திருக்கலாம். நமக்கோ அதைக் குறித்துச் சிறிதும் சந்தேகமும் இல்லை; தயக்கமும் இல்லை. சென்னை மாகாண மக்களின் மிக மிகப் பெரும்பான்மையோர் எப்போதும் ராஜாஜியின் தலைமையையும் நிர்வாகத்தையும் விரும்பியே வந்திருக்கிறார்கள்.

அதை விரும்பாதவர்களும் ஆட்சேபித்தவர்களும் அரசியல்வாதிகளேதான்.

இவ்வளவும் உண்மையாக இருப்பினும், இப்போதைய ராஜாஜி மந்திரி சபை வெகு காலம் நீடித்திருக்குமா என்பது பற்றி வேறு காரண காரியங்களையும் சந்தர்ப்பச் சூழ்நிலைகளையும் மனதில் வைத்துக்கொண்டு ஆராய வேண்டும். எந்த நன்மையையும் அளவுக்கு அதிகமாக எதிர்பார்த்தால் ஏமாந்துபோக நேரிடலாம். அளவாக எதிர்பார்த்தால், அல்லது எதிர்பார்க்காமலே இருந்தால், நன்மை நேரும்போது இரட்டிப்பு மகிழ்ச்சி உண்டாகும்.

*   *   *   *

இந்த ராஜாஜி மந்திரிசபை நீடித்திருக்குமா என்று சிந்திக்கும்போது, இப்போதைய சட்டசபையின் அமைப்பு எத்தகையது என்பதை மனதில் வைத்துக்கொண்டு யோசிக்க வேண்டும்.

காங்கிரஸ் கட்சி இந்தச் சட்ட சபையில் பெரும்பான்மை பெற்றிருக்கவில்லை. மொத்தம் 375 ஸ்தானங்களில் 152 ஸ்தானங்களைத்தான் காங்கிரஸ் அடைந்தது. புதிதாகச் சேர்ந்தவர்களையும் சேர்த்துக் கணக்கிட்டால், 160 அங்கத்தினர் ஆகலாம். இவர்கள் பெரும்பான்மையோர் ஆகமாட்டார்கள். இன்னும் குறைந்த பட்சம் 60 அங்கத்தினர் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு நடக்க உறுதி கொண்டால் காங்கிரஸுக்குத் திடமான பெரும்பான்மை ஏற்படும். எதிர்க்கட்சி பலமாயிருந்தாலும், அதாவது 150 பேர் வரையில் எதிர்க்கட்சியில் இருந்தாலும், பாதகமில்லை. எதிர்ப்பு ஓரளவு பலமாயிருக்கும் போதுதான் ராஜாஜியின் உற்சாகமும் அதிகமாகும். அந்நிலையில் ராஜாஜி மந்திரி சபை நீடித்துப் பல நன்மைகளைப் புரிந்து சென்னையை மீண்டும் உலகின் முன்னணியில் உயர்த்துவது சாத்தியமாகும்.

ஆனால் சிறுபான்மைக் கட்சியை வைத்துக்கொண்டு மந்திரி சபையை நீடித்து நடத்துவது இயலாத காரியம். சிறிது காலம் நடத்துவதிலே கூடப் பல இடையூறுகள் ஏற்படத்தான் செய்யும். சிறிய அளவிலாவது பெரும்பான்மை பலம் சட்ட சபையில் ஏற்பட வேண்டும். அப்போதுதான் மந்திரி சபை நீடித்திருக்க முடியும். நல்ல திட்டங்களையும் அவசரமாக நடத்தி வைக்க முடியும். இதற்கு இன்னும் 60 அங்கத்தினர் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தாக வேண்டும். அவ்விதம் 60 அங்கத்தினர்கள்

புலியா? பிரமையா?



இந்தியாவில் உள்ள வகுப்புவாதம் காஷ்மீரை விழுங்கப் பார்ப்பதாக காஷ்மீர் பிரதமர் ஷேக் அப்துல்லா கூறுகிறார்.

காங்கிரஸ் கட்சியில் உறுதியாகச் சேர்வார்களா என்பதுதான் கேள்வி.

கம்யூனிஸ்டுகள் ஒருநாளும் சேரமாட்டார்கள்.

ஸ்ரீ பிரகாசம் அவர்களுக்கு மனம் மாறுதல் ஏற்படும் என்று தோன்றவில்லை. ஆகையால் அவரைத் தலைவராகக் கொண்ட பிரஜா கட்சி காங்கிரஸுடன் சேர்ந்து ஒத்துழைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

ஸ்ரீ ரங்காவின் கிருஷிகர்—லோக்—கட்சியாரும் சோஷலிஸ்டுகளும் கவரின்மேல் பூனையாகத்தான் இருப்பார்கள்.

பிரஜா கட்சிக்கு அடுத்தபடியாக உழைப்பாளர் கட்சி பலம் பொருந்தியது. இந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இப்போதைய நிலையில் ராஜாஜி மந்திரி சபையைப் பூரணமாக ஆதரிப்பதற்கு எல்லாவிதக் காரணங்களும் இருக்கின்றன.

இந்தக் கட்சி ஏற்பட்டதின் நோக்கம் என்னவென்பது முக்கியமானது. தென்னாற்காடு, வடாற்காடு ஜில்லாக்களிலும், செங்கற்பட்டு—தஞ்சாவூர் ஜில்லாக்களில் சில பகுதிகளிலும் வன்னியகுல க்ஷத்திரியர்கள் பெரும்பான்மையானவர்கள். பழமையான பல்லவ குலத்தில் வந்தவர்கள். படையாட்சி, நாயகர், கண்டர் முதலிய வெவ்வேறு பட்டப் பெயர்களை உடையவர்கள். ஜனநாயக வெள்ளம் அலை மோதிக் கொண்டு பெருகி வரும் காலத்தில் இந்தப் பெரும் சமூகம் விழிப்படைந்திருப்பது இயல்புதான். அத்தகைய நியாயமான சமூக உரிமை உணர்ச்சிகளை ஜனநாயக யுகத்தில் புறக்கணிக்க முடியாது. இச் சமூகத்தார் தங்களுக்கு நியாயம் செய்யப்படவில்லை என்ற குறையைப் பல தடவைகளில் வெளியிட்டார்கள். மூன்று வருஷங்களுக்கு முன்னால் நடந்த தென்னாற்காடு ஜில்லா போர்டு தேர்தலில் அவர்களுடைய உணர்ச்சி எவ்வளவு வலிமை பொருந்தியது என்று தெரிய வந்தது. அதைக் குறிப்பிட்டு எச்சரிக்கையும் செய்யப்பட்டது.

ஆயினும் காலா காலத்தில் அவர்களுக்கு நீதி வழங்கப்படவில்லை.

இதன் காரணமாகவே உழைப்பாளர்—காமன்வீல் கட்சிகள் உருப்பெற்று வளர்ந்தன என்றும் தேர்தலிலும் வெற்றி பெற்றன என்றும் கூறுவது மிகையாகாது.

ராஜாஜி மந்திரி சபை ஏற்பட்டதின் மூலம் அந்தக் காரணம் அடிபட்டுப் போயிற்று. பிற்பட்ட சமூகங்களுக்கு நியாயம் வழங்குவதில் ராஜாஜியை மிஞ்சக் கூடியவர்கள் யாருமில்லை. மற்றச் சமூகத்தார் அதிருப்தி கொள்ளும் அளவுக்குப் பிற்பட்ட வகுப்பினருக்குச் சலுகை காட்டுவதே ராஜாஜியின் வழக்கம். ஆனால் அத்தகைய சலுகைகளின் மூலம் அரசியல் நிர்வாகம் சீர்குலையும்படி மட்டும் அவர் விடமாட்டார்.

சென்னை மாகாணத்தில் இரட்டையாட்சி ஏற்பட்ட காலத்திலிருந்து வன்னியகுல க்ஷத்திரியர் யாரும் மந்திரியாக இருந்ததில்லை. இந்த மந்திரி சபையில் ஸ்ரீ மாணிக்கவேலு நாயகர் அந்தப் பொறுப்பை முதன் முதலில் பெற்றிருக்கிறார். மிக முக்கியமான ரிவின்யூ இலாகா அவரிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. வன்னிய குலத்தாரில் மிகப் பெரும்பான்மையோர் நிலத்தில் பாடுபடுகிறவர்கள்: உழவுத் தொழிலோடு நெருங்கிய தொடர்புடையவர்கள். உழவுத் தொழில் உரிமை சம்பந்தமாக நியாயமாகச் செய்ய வேண்டிய சீர்திருத்தங்களையெல்லாம் ரிவின்யூ மந்திரி ஸ்ரீ மாணிக்கவேலு நாயகர் செய்யலாம்.

உழைப்பாளர் கட்சிக்கு இனி உண்மையில் அவசியம் ஒன்றும் கிடையாது. அக்கட்சியார் காங்கிரஸுடனே சேர்ந்து விடலாம்; ராஜாஜி மந்திரி சபையுடன் உறுதியாக ஒத்துழைக்கலாம்.

இப்படிச் செய்வார்களா என்பது கேள்வி. கட்சி என்று ஆரம்பித்த பிறகு வேறு ஏதேதோ சம்பந்தமில்லாத விஷயங்கள் அதில் சேர்ந்து விடுகின்றன. பதவி எனக்கா உனக்கா என்பதில் போட்டி ஏற்பட்டு விடுகிறது.

உழைப்பாளர் கட்சியின் காரியதரிசியாயிருந்த சேலம் ஏ. சுப்பிரமணியம் தேச சேவையில் பல தியாகங்களைச் செய்த நெடுநாளையக் காங்கிரஸ்வாதி. அவர் பிற்பட்ட சமூகத்துக்கு நியாயம் கிடைக்கவில்லை என்பதற்காக உழைப்பாளர் கட்சியில் சேர்ந்து அதன் காரியதரிசியாகவும் பணி செய்தார். இப்போது அவர் மேற்படி காரியதரிசி வேலையை ராஜீனமா செய்துவிட்டார். ராஜாஜி மந்திரி சபையை ஆதரித்து வேலை செய்வதற்காகவே ராஜீனமா செய்து விட்டதாக அறிவித்திருக்கிறார். அந்தக் கட்சியைச் சேர்ந்த மற்றவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பது போகப் போகத்தான் தெரிய வேண்டும்.

சுயேச்சையாக நின்று தேர்தலில் வெற்றிபெற்றவர்கள் எவ்வித வேலைத் திட்டத்தையும் ஜனங்கள் முன்னால் வைத்து வெற்றி பெறவில்லை. பல காரணங்களினால் காங்கிரஸ் நிர்வாகத்தின் பேரில் மக்கள் கொண்டிருந்த அதிருப்தியைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் வெற்றி பெற்றார்கள். ராஜாஜி முதன் மந்திரியானதன் மூலம் மக்களின் அதிருப்தி போய்விட்டது. ஆகையால் சுயேச்சைவாதிகள் பலரும் காங்கிரஸ் கட்சியில் சேரலாம்; ராஜாஜி மந்திரி சபையை ஆதரிக்கலாம். சுய நலமும் பதவி மோகமும் அற்றவர்களாயும் பொது நன்மை ஒன்றையே கருதுபவர்களாயும் உள்ள சுயேச்சை வாதிகள் கட்டாயம் சட்டசபைக் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து விடுவதே முறை. அப்படிச் சேர்ந்துவிடுவார்களா, சேர்ந்து காங்கிரஸ் கட்சியில் நீடித்து நிற்பார்களா என்பது இனித்தான் தெரிய வேண்டும்.


காங்கிரஸ் கட்சியில் ஏற்கெனவே உள்ளவர்கள் கூட எவ்வளவு தூரம் ராஜாஜியுடன் பரிபூரணமாக ஒத்துழைப்பார்கள் என்பதும் பொறுத்துப் பார்க்க வேண்டிய விஷயம். அவர்களில் சிலர் முன்னம் ராஜாஜியின் தலைமையை மூர்த்தண்யமாக எதிர்த்தவர்கள். அதையெல்லாம் ராஜாஜி மறந்து விடுவார். அப்படிப்பட்டவர்களிடம் அதிக அபிமானமும் காட்டுவார். ஆனால் அவர்கள் பழைய கதையை அடியோடு மறந்து விடுவார்களா என்பது தெரிய வேண்டும். இத்தலைவர்களில் ஒருவரான ஸ்ரீ டி. ஜி. விஷம மூர்த்தி, எம். எல். ஸி. யின் கண்டன அறிக்கையை நேயர்கள் பத்திரிகையில் படித்திருப்பார்கள். சென்னைக் கடற்கரையில் ராஜாஜியின் பிரசங்கத்தை இரண்டு லட்சம் ஜனங்கள் கேட்டார்கள்; ஆமோதித்து மகிழ்ந்தார்கள். அதைத்தான் மேற்படி விஷம மூர்த்தியார் ஆட்சேபித்து அறிக்கை விடுத்தார்.

ராஜாஜி கூறியது என்ன! காங்கிரஸ் ஆட்சியானது காங்கிரஸ்காரர்களுக்கு மட்டும் நன்மை செய்யும் கட்சியாயில்லாமல் மக்களின் பொது நலத்துக்குரிய ஆட்சியாக மாற வேண்டும் என்றார். அதாவது காங்கிரஸ் உண்மையான ஜனநாயக ஆட்சியை நடத்த வேண்டும் என்றார்.

"மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் மக்களின் ஆட்சியே ஜனநாயகம்" என்பது உலகம் ஒப்புக் கொண்ட உண்மை.

அதற்குப் பதிலாக "காங்கிரஸ்வாதிகள் சிலருடைய நன்மைக்காகக் காங்கிரஸ்காரர்கள் சில

இந்தச் சிறை எத்தனை நாள்?



எல்லைப்புற காந்தி கான் அப்துல் கபார்கானை இன்னமும் பாகிஸ்தான் சர்க்கார் சிறையில் வைத்திருப்பது பற்றிப் பல கண்டனக் கூட்டங்கள் நடந்து வருகின்றன.

"ரால் நடத்தப்படும் காங்கிரஸ் ஆட்சி" சென்னையில் நடைபெற்று வருகிறது என்கிற எண்ணம் மக்களின் மனத்தில் எப்படியோ தோன்றிவிட்டது. இதனாலேதான் சென்ற தேர்தலில் காங்கிரஸுக்குப் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

இந்த எண்ணத்தை மக்களின் மனத்திலிருந்து அகற்ற வேண்டும் என்று ராஜாஜி சொன்னார். "மக்களின் நலத்துக்காக மக்களால் நடத்தப்படும் மக்களின் ஆட்சியே காங்கிரஸ் ஆட்சி" என்ற எண்ணம் வளர்வதற்கு ராஜாஜி அடிப்படை அமைத்தார்.

உடனே "ஐயோ! அநியாயம்! காங்கிரஸை அழிப்பதற்காகவா உம்மை முதன் மந்திரியாக்கினோம்!" என்று ஸ்ரீ டி. ஜி. விஷம மூர்த்தியார் அலறத் தொடங்கி விட்டார்.

இப்படிப்பட்ட மனப்பான்மை கொண்டவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களில் எத்தனைபேர் உண்டு என்பது நமக்குத் தெரியாது; தற்சமயம் தெரிந்து கொள்ளவும் முடியாது. போகப் போகத்தான் தெரியும்.

* * *

இதையெல்லாம் நினைக்கும்போது, இப்போதைய ராஜாஜி மந்திரி சபை எவ்வளவுதான் நேர்மையாகவும் திறமையாகவும் நிர்வாகம் நடத்தினாலும், எவ்வளவுதான் பொது மக்களின் அன்பையும் மதிப்பையும் பெற்றாலும், சட்டசபையில் நீடித்த உறுதியான ஆதரவைப் பெறுமா என்று யாரும் நிச்சயமாகச் சொல்ல முடியாது.

ஆனால் ஒன்று மட்டும் சர்வ நிச்சயமாகச் சொல்ல முடியும்.

இப்போதைய ராஜாஜி மந்திரி சபை கலையும்படி நேர்ந்தால், இந்தச் சட்டசபையில் வேறு மந்திரி சபை ஒருகாலும் ஏற்பட முடியாது.

உடனடியாக, மறுபடியும் பொதுத் தேர்தல் நடந்தே தீரும்.

அந்தப் பொதுத் தேர்தலைக் காங்கிரஸின் சார்பாக ராஜாஜியே முன்னால் நின்று நல்ல முறையில் நடத்தி வைப்பார்.

அவ்வாறு நடக்கும் பொதுத் தேர்தல் நாளைக்கு நடந்தாலும், ஆறு மாதத்தில் நடந்தாலும், ஒரு வருஷத்தில் நடந்தாலும், காங்கிரஸ் தமிழ் நாட்டில் 100-க்கு 100 வீதம் பரிபூரண வெற்றியடையும். ஆந்திர தேசத்திலும் காங்கிரஸுக்குக் கணிசமான வெற்றி கிடைக்கும்.

புதிய சட்டசபையில் காங்கிரஸ் மகத்தான பெரும்பான்மை பலம்பெற்று உறுதியான மந்திரி சபை அமைப்பது சாத்தியமாகும்.

ஆதலின், இப்போதைய ராஜாஜி மந்திரி சபை நீடிக்குமா என்பது பற்றித் தேசபக்தர்கள் கவலைப்படவேண்டிய அவசியமில்லை.

இந்த மந்திரி சபையே நீடித்தால் மிக்க நல்லது; நீடிக்காமல் பொதுத் தேர்தல் சீக்கிரத்தில் வந்தால் அதுவும் இம்மாகாணத்துக்கு நன்மையே பயக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

கண்மூடி தர்பார்

துரியோதனின் கண்களுக்கு மேடு பள்ளமாகவும் பள்ளம் மேடாகவும் தோன்றியதாம்; வாசற்படி சுவரைப் போலவும் சுவர் வாசற்படியைப் போலவும் காட்சி அளித்ததாம்.

கண்மூடித்தனமான எதிர்ப்பும் துவேஷமும் வெறியும் கொண்டவர்களுக்கு நீதி அநீதியாகத் தோன்றும்; அதர்மம் தர்மமாகத் தென்படும்; சத்தியம் அசத்தியமாகவும் பொய் உண்மையாகவும் தோன்றும்; உத்தமர்கள் துஷ்டர்களாகவும் அயோக்கியர்கள் நல்ல மனிதர்களாகவும் காட்சி அளிப்பார்கள் என்பதைத் துரியோதனின் வரலாறு சித்திரிக்கிறது.

மானிடருக்குள் ஒரு தெய்வமாகத் திகழ்ந்த காந்தி மகானின் பிரதம சீடரான எல்லைப்புற காந்தி அப்துல் கபார்கான் இரண்டு மூன்று வருஷங்களாகப் பாகிஸ்தான் சிறையில் பரிதவித்து வருகிறார். அதன் விளைவாக அவரது தேக நிலைமை சீர்குலைந்து, சில தினங்களுக்குள்ளாக அவருக்கு இரண்டு தடவை சத்ர சிகிச்சையும் நடந்திருக்கிறது.

அரசியல் கைதிகள் கொடிய நோய்வாய்ப்பட்டால் அவர்களை விடுதலை செய்வது என்பது உலகில் நாகரிக அரசாங்கங்களின் அனுஷ்டித்து வரும் கொள்கை. பாரதநாட்டில் சுதந்திரப்போரும் அடக்கு முறைகளும் வெகு தீவிரமாக இருந்த காலத்தில் கூட, நோய் காரணமாக மகாத்மா காந்தி, பண்டித மோதிலால் நேரு, சுபாஷ்சந்திர போஸ், ஜவாஹர்லால்ஜி முதலியோரைப் பிரிட்டிஷ் சர்க்கார் விடுதலை செய்தது உண்டு. ஆனால் பாகிஸ்தான் சர்க்கார் விஷயத்திலோ, அப்துல் கபார்கான் சம்பந்தமாக எழுந்த கண்டனங்கள், சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள், நிறைவேறிய தீர்மானங்கள் எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காக முடிந்திருக்கின்றன.

கான் அப்துல் கபார்கானுக்கு அடுத்தபடியாக எல்லைப்புற மாகாணத்தில் மிகுந்த செல்வாக்குள்ள காஜி அதாவுல்லா பாகிஸ்தான் அடக்கு முறைக்குப் பலியாகி விட்டார். அவர் செஞ்சட்டைப் படைத் தலைவராகவும் பாகிஸ்தான் ஏற்படுவதற்கு முன் அம்மாகாணத்தில் காங்கிரஸ் சர்க்கார் மந்திரியாகவும் இருந்தவர். நோய்வாய்ப்பட்டுச் சிறையில் கஷ்டப்பட்ட அவரை இறக்கும் தறுவாயில்தான் பாகிஸ்தான் அதிகாரிகள் விடுதலை செய்தனர்.

* * *

சாத்வீகத்தில் பூரண நம்பிக்கையுள்ளவர்களும் சுதந்திர வீரர்களும் தியாகிகளுமான கான் அப்துல் கபார்கான், கான் சாகிப், காஜி அதாவுல்லா முதலிய தலைவர்களுக்கு எதிராக அடக்கு முறைகளைக் கைக்கொண்ட பாகிஸ்தான் பிரமுகர்கள், முன்பு சிட்னி காட்டன் என்ற விமானத் திருடனுக்கு அடைக்கலம் அளித்தது ஞாபகம் இருக்கலாம். இப்போது முபாரக் அலி என்ற ஒருவருக்காகப் பரிந்து பேச முன் வந்திருக்கிறார்கள்.

முபாரக் அலி பொய்க் கையெழுத்திட்டதாயும் மோசடி செய்ததாயும் இந்தியாவில் குற்றம் சாட்டப்பட்டு ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டிருந்தார். பிறகு அவர் ஒருவருக்கும் தெரியாமல் பிரிட்டனுக்கு ஓடிவிட்டார். அவர் மீது கிரிமினல் குற்றம் சாட்டப்பட்டிருப்பதால் அவரை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பிவிட வேண்டும் என்று இந்திய சர்க்கார் பிரிட்டிஷ் சர்க்காருக்கு விண்ணப்பம் செய்து கொண்டனர். மேற்படி கோரிக்கையை முபாரக் அலி எதிர்த்தார். தாம் ஒ

முஸ்லிம் என்பதற்காக இந்திய சர்க்கார் தமக்கு எதிரான நடவடிக்கைகளைக் கைக் கொண்டிருப்பதாகச் சாதித்தார். இந்தியாவில் தமக்கு நீதி கிடைக்காது என்று வாதாடினார்.

ஆனால் மேற்படி வழக்கை விசாரித்த பிரிட்டிஷ் கோர்ட்டார், "இந்தியக் கோர்ட்டுகளில் நீதி கிடைக்காது என்று கூறுவது அபாண்டம்; இந்தியாவில் உள்ள நீதிபதிகளின் பாரபட்சமற்ற தன்மையிலும், யோக்கியப் பொறுப்பிலும், திறமையிலும் எங்களுக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது" என்று கூறி வழக்கைத் தள்ளி விட்டனர். அதற்கு இணங்க முபாரக் அலியைப் பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பி விட்டார்கள். அதுதான் நீதிநெறி, அரசியல் தர்மம்.

ஆனால் மேற்படி நேர்மையான நடவடிக்கையைக் கண்டித்து பாகிஸ்தானில் பெரும் கூக்குரல் ஏற்பட்டிருக்கிறது. பாகிஸ்தான் பிரிட்டிஷ் காமன்வெல்த்திலிருந்து விலகிக் கொண்டு விட வேண்டும் என்று பாகிஸ்தான் வர்த்தக ஐக்கிய சங்கத்தினர் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். முபாரக் அலி விஷயத்தில் பாகிஸ்தான் அதிகாரிகளும் தங்கள் பரிவைக் காட்டியிருக்கிறார்கள்.

பாகிஸ்தானில் தியாக சீலர்கள் துன்பத்துக்கு ஆளாகின்றனர். கிரிமினல் குற்றம் சாட்டப்பட்டுள்ள நபர்கள் பரிவுக்கும் பாராட்டுதலுக்கும் பாத்திரமாகின்றனர். இது விசித்திரமான அரசாங்க தர்மமாக இருக்கிறது!

தீயில் குதித்தனர்

உலக நீதிக்கும் ஜனநாயக தர்மத்துக்கும் அணுவளவும் முரண்படாத தங்களுடைய ஜீவாதார உரிமைகளைப் பெறுவதற்காக இலங்கை இந்தியர்கள் சமாதான முறையில் இரண்டு ஆண்டுகளாக எவ்வளவோ பாடுபட்டார்கள். ஆனால் இறுதியில் அவர்கள் சத்தியப் போரை ஆரம்பிப்பதைத் தவிர, தியாகத் தீயில் குதிப்பதைத் தவிர, வேறு யாதொரு வழியும் இராமற் போனது மிகவும் வருந்தத் தக்கது.

இலங்கை இந்தியத் தலைவர்களும், இலங்கைப் பார்லிமெண்டு அங்கத்தினர்களுமான ஸ்ரீ தொண்டமான், ஸ்ரீ ராஜலிங்கம், ஸ்ரீ அஸிஸ் உள்பட பலர் இலங்கைப் பிரதமரின் காரியாலயத்துக்கு எதிரே சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். உண்ணாவிரதத்தைத் தொடங்கியிருக்கிறார்கள்.

இலங்கை இந்தியர்களாகப் பதிவு செய்து கொள்ள விரும்பிய இந்தியர்களுக்கு இந்திய சர்க்கார் உதவி புரிய முன்வந்தபோது, "இலங்கை இந்தியர் எங்கள் தேசப் பிரஜைகள். அவர்கள் விஷயத்தில் தலையிடாதீர்கள்" என்று காலஞ்சென்ற பிரதமர் ஸ்டீபன் சேனநாயகா எச்சரித்தார். அந்த வார்த்தையை நம்பி இந்திய ஹை கமிஷனர் இலங்கை இந்தியர்களுக்கு உதவியாகச் செய்திருந்த ஏற்பாடுகளையெல்லாம் அமுலுக்குக் கொண்டுவர விரும்பவில்லை.

எனவே இலங்கை இந்தியர்கள் தங்கள் கோரிக்கைகளை இலங்கை சர்க்காரிடம் நேரில் தெரிவித்துக் கொண்டு பரிகாரம் தேட முற்பட்டனர்.

இந்தியாவைத் தாய் நாடாகக் கொண்டுள்ள இந்தியர்களுக்குப் பிரஜா உரிமை அளிக்க வேண்டாம் என்று இலங்கை இந்தியர் கூறினர். இலங்கையைத் தாய் நாடாகக் கொண்டு இலங்கையிலேயே வாழும் இந்தியர்களுக்கு மாத்திரம் பிரஜா உரிமை அளித்தால் போதும் என்று கேட்டுக் கொண்டார்கள். இலங்கைத் தீவினிடத்திலும் காலஞ்சென்ற பிரதமரிடத்திலும் இந்தியர்களுக்குள்ள விசுவாசத்தையும் அன்பையும் ஸ்டீபன் சேனநாயகா மரணம் அடைந்த போது எல்லோரும் தெரிந்து கொண்டார்கள்.

தங்களுடைய நல்லெண்ணத்தையும் விசுவாசத்தையும் பல வழிகளில் காட்டியும்கூட இலங்கை இந்தியர்களின் தர்ம நியாயமான கோரிக்கை நிறைவேறவில்லை. எனவே இந்திய சர்க்காரின் உதவியை நாடாமலே அவர்கள் சத்தியப் போரில் ஈடுபட்டுத் தங்களுடைய உயிருக்கு ஒப்பான அரசியல் உரிமையை ஸ்தாபித்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

இப்போது இலங்கை இந்தியர்கள் ஆரம்பித்துள்ள சத்தியாக்கிரகம் இலங்கைக்கு விரோதமாகவோ, இலங்கை மக்களுக்கு விரோதமாகவோ ஆரம்பிக்கப்பட்டதல்ல; உண்மையில் இலங்கைப் பிரஜைகளான, ஆனால் இலங்கைப் பிரஜைகள் என்று ஒத்துக்கொள்ள இலங்கை சர்க்காரால் மறுக்கப்படும் இந்தியர்கள் தங்களுடைய நியாயமான உரிமைகளைப் பெறுவதற்காக ஆரம்பித்துள்ள சாத்துவிகப் போராட்டமாகும். இதில் அரசியல் சூழ்ச்சிக்கோ, துவேஷத்துக்கோ, மத மாற்சரியங்களுக்கோ சிறிதும் இடமில்லை.

எனவே, ஜனநாயகத்தில் பற்றுள்ள, மானிட நீதியில் நம்பிக்கையுள்ள சகலரும் மேற்படி போராட்டத்தை ஆதரிப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. இந்த சத்தியப் போரை நீடிக்க விடாமல், இலங்கை சர்க்கார் தங்களுடைய பிடிவாதத்தைக் கைவிட்டு, பெருந்தன்மையுடன் இலங்கை இந்தியர்களுக்குப் பிரஜா உரிமை அளிக்க முன் வருவார்களாக.

குதிரை முட்டை வாங்கி வந்தார்!

எத்தனையோ வருஷங்களாகத் தீராமல் இருந்த பாலஸ்தீனப் பிரச்னை தீர்ந்துவிட்டது. இன்னும் கொரியா யுத்தம் முடியாவிட்டாலும், கொரியாவில் ஆக்கிரமிப்புக் குற்றம் புரிந்தது யார் என்பது பல மாதங்களுக்கு முன்பே சந்தேகமின்றி நிர்ணயமாகிவிட்டது.

ஆனால் காஷ்மீர் பிரச்னை ஐக்கிய நாடுகள் சபையின் பரிசீலனைக்கு வந்து நாலு வருஷங்கள் ஆகின்றன. அந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்காகப் பல கமிஷன்கள் நியமித்தாகி விட்டது. மகா நிபுணர்களான மத்தியஸ்தர்களும் பெரு முயற்சி செய்து பார்த்து விட்டார்கள். ஆனால் அவ்

விஷயமாக ஐ. நா. சபை அன்றிருந்த இடத்தி லிருந்து ஓர் அடிகூட முன்னேறவில்லை.

காஷ்மீரில் ஆக்கிரமிப்புக் குற்றம் புரிந்தது யார் என்ற அடிப்படையான விஷயத்தை ஐ. நா. சபை முதலிலேயே நிர்ணயித்திருந்தால், மேற்படி பிரச்னையில் இத்தனை சிக்கல்கள் ஏற்பட்டிராது. அஸ்திவாரத்தில் ஏற்பட்ட அந்தத் தவறுதான் காஷ்மீர் பிரச்னையை இன்றைய அலங்கோலமான நிலைமைக்குக் கொண்டு வந்திருக்கிறது.

காஷ்மீரில் ஆக்கிரமிப்புக் குற்றம் புரிந்தது யார்! அங்கு சர்வதேசச் சட்டத்துக்கு விரோத மாக நடந்து கொண்டது யார்!

இந்த இரண்டு கேள்விகளுக்கும் ஐ. நா. சபையினால் நியமிக்கப்பட்டவரும் உலக நீதி நிபுணரு மான சர் ஓவன் டிக்ஸன் பதில் அளித்திருந்தார்.

ஆக்கிரமிப்புக் குற்றம் புரிந்தது யார் என்பது நிர்ணயமாகி விட்டால், அவர்கள்தான் முதலில் தங்கள் துருப்புகளை வாபஸ் செய்து கொள்ள வேண்டும் என்று ஏற்பட்டுவிடும். பிறகு காஷ் மீர் சம்பந்தப்பட்ட வரையில் இந்தியாவையும் பாகிஸ்தானையும் சம நிலையில் வைத்துப் பேசுவது தவறு என்பதும் தெளிவாகி விடும்.

மேற்படி அநீதிக்குப் பரிகாரம் ஏற்பட்டு விட் டால், காஷ்மீரில் உள்ள நாற்பது லட்சம் ஜனங் களின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பை ஒரு தனி நபருடைய அதிகாரத்துக்கு விடுவது எவ்வளவு அக்கிரமம் என்பதையும் ஐ. நா. சபை உணரும்படியான சூழ் நிலை ஏற்படலாம். காஷ் மீர் மக்களுடைய அரசியல் விதியை நிர்ணயிக்கும் அதிகாரமும் உரிமையும் அவர்களைத் தவிர வேறு யாருக்கும் இல்லை என்ற சர்வ தேச நீதியைக் குட்டை குழப்புவதற்கு இடமிராது.

ஆனால் சர் டிக்ஸனின் தீர்ப்பு அந்தச் சபையின் செவியில் ஏறவில்லை; அதை ஆட்டி வைக்கும் வல்லரசுகளின் காதில் விழவில்லை!

எனவே, காஷ்மீரிலிருந்து யார் முதலில் துருப்பு களை வாபஸ் செய்து கொள்ள வேண்டும், எத்தனை துருப்புகளை வாபஸ் செய்து கொள்ள வேண்டும் என்ற விஷயமே, காஷ்மீர் பிரச்னை தீருவதற்குப் பெரும் முட்டுக் கட்டையாக இருந்துவருகிறது.

அந்தப் பிரச்னையைத் தீர்க்கும் வழியைக் காட் டும்படி கடைசியாக நியமிக்கப் பட்ட டாக்டர் கிரஹாமும் சர். டிக்ஸனைப் போலவே கராச்சிக் கும் ஸ்ரீநகருக்கும் டில்லிக்குமாகப் பிரதட்சிணம் செய்தார். பிறகு அமெரிக்காவுக்குப் போனார். ஜினிவாவில் தமது ரிப்போர்ட்டை எழுதினார்.

பின்னர் பாரிஸ் நகருக்குப் பறந்து சென்றார். அங்கு விஜயம் செய்திருந்த இந்தியா—பாகிஸ் தான் பிரதிநிதிகளுடன் பேசினார். காஷ்மீர் பிரச் னையைத் தீர்க்க முடியும் என்பதில் தமக்குத் தள ராத நம்பிக்கை இருப்பதாக முழங்கினார். அதைத் தீர்க்கும் வழியைக் கண்டு பிடிக்கத் தமக்கு மறு படியும் சில வாரங்கள் தவணை கொடுக்கும்படி ஐ. நா. சபையைக் கேட்டுக் கொண்டார்.

அச் சபையும் அவ்விதமே தவணை கொடுத்து, கிரஹாம் மீண்டும் பாகிஸ்தானுக்கும் இந்தியா வுக்கும் விஜயம் செய்து விட்டுச் சென்றார்.

இப்போது அவர் தயாரித்துள்ள மூன்றாவது அறிக்கை, சிஷ்யர்கள் தங்களுடைய குருவுக்கு அதிசயமான ஒரு குதிரை முட்டை வாங்கி வந்த கதையாக முடிந்திருக்கிறது!

காஷ்மீர் பிரச்னையைத் தீர்க்க அவருக்கு மற்றும் ஒரு தவணை கொடுக்க வேண்டுமாம். மேற்படி முயற்சியில் அவருக்கு உதவியாக அட்மிரல் நிமிட்ஸை நியமிக்க வேண்டும் என்றும் டாக்டர் கிரஹாம் யோசனை கூறியிருக்கிறார்.

காஷ்மீரில் சர்வஜன வாக்கு எடுப்பை மேற் பார்வையிடுவதற்காக மேற்படி சபை அட்மிரல் நிமிட்ஸை நியமித்ததும், அவரது நியமனத்தை இந்திய சர்க்கார் ஏற்க மறுத்ததும் டாக்டர் கிரஹாம் அறியாத விஷயமல்ல. அப்படியிருக்க அவர் காஷ்மீர் பிரச்னையைத் தீர்க்கும் விஷயத்தில் சர் டிக்ஸனைப் போல் தமது தோல்வியைப் பகிரங்க மாக ஒத்துக் கொள்ளாமல், அட்மிரல் நிமிட்ஸின் துணையைக் கோருவது கலங்கிய குட்டையை மேலும் குழப்பும் செய்கை அல்லவா! காலங் கடத்தும் வித்தை அல்லவா! போகாத ஊருக்கு வழி அல்லவா!

அட்டைப்பட விளக்கம்

அவள் பேரானந்தத்தில் மூழ்கி யிருந்தாள். அந்த ஆனந்தத்தைப் பற்றிப் பிறருக்குச் சொல்லிப் பகிர்ந்து கொள்ளவும் முடியவில்லை. நாணம் வந்து குறுக்கிட்டது.

ஆம், முருகப் பெருமான் வந்து அவளுடன் அந்தரங்கமாகப் பேசியதைப் பற்றிப் பிறரிடம் சொல்லிக் கொள்ள முடியுமா!

சொல்லிக் கொள்ளத்தான் முடியவில்லையே, அவளால் சும்மாவாகிலும் இருக்க முடிகிறதா! உள்ளம் துள்ளிக் குதிக்கும்போது, உடலும்தானே குதிக்கிறது! ஆகவே, மரத்தடியிலிருக்கும் ஊஞ்சலில் ஆடவந்தாள்.

அந்தச் சமயம் பின்னாலிருந்து ஏதோ ஒரு குரல் வந்தது. திரும்பிப் பார்த்தாள். அவளுடைய அருமைக் கிளிதான் அப்படிக் குரல் கொடுத்தது!

அந்தக் கிளிக்கு அவள் அளித்திருந்த சுதந்திரம் வேறு யாருக்கும் அவள் அளிக்கவில்லை. அவ்வளவு அன்புடன் அவள் அதை வளர்த்து வந்தாள். அவளுடைய ரகசியம் எல்லாம் அந்தக் கிளி அறிந்திருந்தது. அந்தக் கிளி இப்பொழுது என்ன செய்தது தெரியுமா!

முருகப் பெருமான் ரகசியமாக வந்து அவளுடன் அந்தரங்கமாகப் பேசி விட்டுப் போன வார்த்தைகளை உலகத்துக்கு ஒலிபரப்ப முயன்றது. இப்படிச் செய்தால், அவள் பயந்து போய்த் தன் வாயை மூடிக்கொள்ளச் சொல்லுவாள் என்று எதிர்பார்த்தது கிளி. ஆனால் ஏமாற்றம்தான் அடைந்தது.

எப்படி என்கிறீர்களா! இதோ, அந்த அழகிய மங்கை சொல்வதைச் சற்றுக் கேளுங்கள்!

ஆரைக் கணவர் சொன்ன
அந்தரங்க வார்த்தைதனைப்
பேசி விட்டோமென் றெண்ணுகிறாய்—கிளியே
பேசுதற்கும் வாராதடி.

(கிளிக் கண்ணி)

பொன்னியின் செல்வன்

கல்கி

அத்தியாயம் 23

வானதி

கொடும்பாளூர் இளவரசியின் அழகை வர்ணிக்கும்படி கவிஞர்களைக் கேட்டால், அவர்கள் அந்த மங்கை நல்லாளின் அழகை அந்தி மாலையின் சௌந்தரியத்துக்கு ஒப்பிடுவார்கள். பகற்பொழுது சென்று மாலை மங்கி வரும்போது மனதில் ஒரு சோகமும் ஏற்படுகிறது; கூட ஓர் அமைதியான இன்பமும் தோன்றுகிறது. ஆதவனின் இறுதிக் கிரணங்கள் மெலிந்து மறைந்த பிறகு இரவின் இருள் நாலாபுறமும் கவிந்து வருகிறது. இதனால் மனத்தில் தோன்றும் சோர்வைப் போக்கிக்கொள்வதற்கு வானத்தை நோக்கினல் போதும். கண்ணிமைக்கும் நேரத்தில் வானமாதேவி ஏற்றிவைக்கும் கோடானுகோடிச் சுடர் விளக்குகள் எவ்வளவு ஆனந்தத்தை அளிக்கின்றன! சூரியனுடைய தகிக்கும் ஜோதியைப் போல் அவை கண்களைக் கூசச் செய்வதில்லையே? கண்களால் அவற்றைப் பார்த்து இன்புறலாமே? சந்திரனும் உதயமாகிவிட்டாலோ, கேட்க வேண்டியதில்லை. முத்துச் சுடர் போன்ற முழுமதியின் நிலவில் உலகம் பூரிக்கின்றது; உள்ளமும் உடலும் பூரிக்கின்றன. மாலை வந்ததும் தாமரைகள் கூம்புவது என்னவோ உண்மைதான். ஆனல் விண்மீன்களுடன் போட்டியிடுவதுபோல் மல்லிகை மொட்டுக்கள் வெடித்து மலர்ந்து அவற்றின் நறுமணத்தினல் வானமும் பூமியும் போதை கொள்கின்றன வல்லவா?

அஸ்தமித்ததும் பட்சிகளின் குதூகலத்வனிகள் ஓய்ந்து விடுகின்றன என்பது உண்மைதான். ஆனல், அதோ தேவாலயத்திலிருந்து வரும் சேமக்கலச் சத்தமும் நாதஸ்வர வாத்தியத்தின் இன்னிசையும் இப்போது எவ்வளவு மதுரமாயிருக்கின்றன! மணிமாடங்களின் மீதிருந்து மென்மையான விரல்கள் மீட்டும் வீணையும் யாழும் எத்தகைய இன்ப கீதத்தை எழுப்புகின்றன!

கொடும்பாளூர் இளவரசி வானதியின் அழகில் இப்படியே சோகத்தின் சாயலும் களிப்பின் மெருகும் இனம் தெரியாதபடி கலந்து போயிருந்தன. அழகுக்கு ஒத்தபடி அவளுடைய சுபாவமும் இருவகைப்பட்டு இருந்தது. ஒரு சமயம் அவளைப் பார்த்தால் துயரமே உருக்கொண்ட சந்திரமதியையும் சாவித்திரியையும் போல் இருக்கும். இன்னொரு சமயம் பார்த்தால் அரம்பையும் ஊர்வசியும் தேவருலகில் இப்படித்தான் ஆடிப்பாடிக் கொண்டு இருந்திருப்பார்கள் என்று தோன்றும். கோவலனுடைய காதலில் களித்த மாதவியைப் போல் ஒரு சமயம் அவள் இன்ப உயிர்ச் சிலையாக விளங்குவாள். மற்றொரு சமயம் கணவனைப் பறி கொடுத்த கண்ணகியின் சோக வடிவம் இதுதானோ என்று கரு

தும்படி இருக்கும். ஒரு சமயம் மாலை வடிவேலவரின் மையலுக்கு உள்ளாகி இதயம் கலங்கி நின்ற வள்ளியைப்போல் தோன்றுவாள். இன்னொரு சமயம் தேவலோக செல்வம் களிக்கூத்தாடும்படி கார்த்திகேயருக்கு மாலையிட்டு மகிழ்ந்த தேவயானை இவளேதான் என்று எண்ணி மகிழும்படி ஆனந்த உருவாகி விளங்குவாள்.

சேர்ந்தாற்போல் பல தினங்கள் வானதியின் முகத்தில் ஒரு சிறிய புன்னகையைக்கூடக் காண முடியாது. வேறு சில நாட்களில் அவள் ஓயாது சிரித்துக் கொண்டேயிருப்பாள். அந்தச் சிரிப்பின் ஒலி கோடானுகோடி நுண் துளிகளாகிக் காற்று வெளியில் கலந்து உலகத்தையே ஆனந்த பரவசப்படுத்தும்.

வானதியின் இத்தகைய இரு வகைச் சுபாவத்துக்குக் காரணம், அவளுடைய பிறந்த வேளையும் வளர்ந்த காலமும் என்று ஊகிக்கலாம். அன்னையின் கர்ப்பத்தில் அவள் இருந்தபோது கொடும்பாளூர் சிறிய வேளார் கொடிய போர்களில் ஈடுபட்டிருந்தார். வெற்றிச் செய்தியும் தோல்விச் செய்தியும் மாறி மாறி வந்து கொண்டிருந்தன. இவை அவளுடைய அன்னையின் உள்ளத்தில் களிப்பையும் துயரத்தையும் மாற்றி மாற்றி உண்டாக்கின. வானதி பிறந்த சில காலத்துக்குப் பிறகு அவளுடைய அன்னை காலமானாள். பிறகு, வானதியை அவளுடைய தந்தை கண்ணுக்குக் கண்ணாக வளர்த்து வந்தார். ஆனால் இதுவும் நீடித்திருக்கவில்லை. வீராதி வீரராகிய வானதியின் தந்தை அருமை மகளை முன்னிட்டுக்கூட அரண்மனையிலேயே உட்கார்ந்திருக்க விரும்பவில்லை. வீர பாண்டியன் ஓடி ஒளிந்த பிறகு, அவனுக்குத் துணை வந்த ஈழத்துப் படைகளைத் துரத்திக் கொண்டு இலங்கை சென்றார். அங்கே போர்க்களத்தில் உயிர் நீத்து, சரித்திரத்தில் 'ஈழத்துப் பட்ட சிறிய வேளார்' என்ற பட்டப் பெயர் பெற்றார்.

பின்னர், வானதியின் வாழ்க்கை சில காலம் ஒரே துயர மயமாயிருந்தது. தாயை இழந்து தகப்பனாரால் வளர்க்கப்பட்ட பெண்கள் தான் அந்தச் சோக உணர்ச்சி எத்தகையது என்பதை அறிய முடியும். பெற்றோரில்லாப் பெண் கொடும்பாளூர் அரண்மனையில் சீராட்டி வளர்க்கப்பட்டாலும் அவளுடைய உள்ளத்தில் தந்தை பெற்றிருந்த இடத்தை யாரும் பெற முடியவில்லை. அதற்குப் பலரும் பல விதமாக ஆறுதல் கூறினார்கள். "வருந்தாதே, குழந்தை! உன் தந்தை உன் வயிற்றில் வந்து மீண்டும் வீர மகனைப் பிறப்பார். உலகம் வியக்கும்படியான அற்புத வீரச் செயல்களைப் புரிவார்!" என்று ஒருவர் கூறினார். இவ் வார்த்தைகள் வானதியின் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்து வேரூன்றின. அருமைத் தந்தையைப் பிரிந்ததினால் ஏற்பட்ட துயரத்தையும் சோர்வையும் கற்பனை மகனைப் பற்றி எண்ணுவதிலே போக்கிக் கொள்ள முயன்றாள். அதில் ஓரளவு வெற்றியும் அடைந்தாள்.

தனக்குப் பிறக்கும் குமாரன் எப்படி எப்படி இருப்பான், எந்தெந்த மாதிரி நடப்பான், எத்தகைய வீரச் செயல்களைப் புரிவான் என்ற மனோராஜ்யத்தில் நாள் கணக்காக மூழ்கிவிடுவாள். கற்பனைக் கண்ணின் மூலமாக, அந்த வீர மகன் தூர தூர தேசங்களுக்குச் சென்று மாபெரும் யுத்தங்களில் வெற்றி பெறுவதைப் பார்த்தாள். வேகமாகத் திரும்பி வந்து அவன் அடைந்த வெற்றியின் காணிக்கைகளையெல்லாம் தன்னுடைய காலடியில் சமர்ப்பிப்பதைப் பார்த்தாள். அவன் மணிமுடி தரித்து வீர சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பதைப் பார்த்தாள். ராஜாதிராஜாக்கள் வந்து அவனுக்குக் கப்பம் கட்டி அடிபணிவதைப் பார்த்தாள். அவனுடைய திருமுகத்தைக் கண்டதும் ஜனத்திரள்கள் பூரண சந்திரனைக் கண்ட மாகடலைப் போல் பொங்கி எழுந்து அலைமோதி ஆரவாரிப்பதைப் பார்த்தாள். நூறு நூறு கப்பல்களில் வீரர்களை ஏற்றிக் கொண்டு அவன் கடல்களைக் கடந்து சென்று அப்பாலுள்ள நாடுகளிலே வெற்றிக் கொடி நாட்டுவதைப் பார்த்தாள். "அன்னையே! நான் அடைந்துள்ள இத்தனை பெருமைக்கும் காரணம் நீயே அல்லவோ!" என்று தன்னிடம் அடிக்கடி அவ் வீர மகன் வந்து கூறுவதையும் கேட்டாள்.

அந்த அறியாத பேதைப் பெண் சில சமயம் தன் ஆலிலை வயிற்றைத் தொட்டுத் தடவிப் பார்த்துக் கொள்வாள். தன் கற்பனை மகன் ஒருவேளை வயிற்றில்வந்து விட்டானோ என்றுதான். பழந்தமிழ் நாட்டில் ஆண்கள், பெண்கள் அனைவரும், பாரதக் கதையைக் கேட்டு அறிந்திருந்தார்கள். குந்திதேவி குழந்தை பெற்ற விதத்தைப் பற்றியும் கேட்டிருந்தார்கள். அதுபோல், எந்தத் தெய்வம் வந்து தனக்குக் குழந்தை வரம் கொடுக்கப் போகிறது என்று எண்ணி எண்ணி

அவள் வியப்பதுண்டு. அப்போதெல்லாம் யாரையும் மணந்து கொள்வதைப் பற்றியே அவள் எண்ணவில்லை. வயது வந்த பிறகு, உலகம் ஓரளவு தெரிந்த பிறகு, கணவன் ஒருவனை மணந்தேயாக வேண்டும் என்றும், அவன் மூலமாகவே குழந்தைப் பேற்றை அடைய வேண்டும் என்றும் அறிந்தாள். அப்போதும் கணவனைப் பற்றி அதிகமாக மனோராஜ்யம் செய்யவில்லை.

பழையாறை அரண்மனைக்குப் போன பிறகு அவளுடைய வாழ்க்கையிலும் மனப்போக்கிலும் மாறுதல் ஏற்பட்டது. குந்தவை தேவியின் பெருமிதம் கலந்த அன்பு அவளுக்கு ஆறுதலும் குதூகலமும் அளித்தன. குந்தவையின் நாகரிக நடை உடை பாவனைகளும் சாதுர்யப் பேச்சுக்களும் வானதியை அவள் இது வரை அறியாத வேறொரு உலகத்துக்குக் கொண்டு போயின. அவளைப் போலவே பழையாறை அரண்மனைக்கு வந்திருந்த மற்ற அரசகுலப் பெண்களின் அசூயை அவளுக்கு வாழ்க்கையில் ஒரு புதிய ஆர்வத்தை உண்டாக்கியது. அவர்கள் அசூயைப்படும்படியாகத் தன்னிடம் ஏதோ மகிமை இருக்கவேண்டும் என்று அவளுடைய உள் மனம் உணர்த்தியது. அதே சமயத்தில் அவளுடன் இயற்கையாகப் பிறந்த இனிய சுபாவமும் பெருந்தன்மையும் எல்லாருடனும் நல்லபடியாக நடந்து கொள்ள அவளைத் தூண்டியது. இத்தனைக்கும் நடுவில் வானதி தனக்குப் பிறக்கப் போகும் வீர மகனைப் பற்றி இன்பக் கனவு காண்பதை மட்டும் விட்டு விடவில்லை.

இதற்கிடையிலேதான் அவள் பொன்னியின் செல்வரைப் பார்க்கும்படி நேர்ந்தது. அதன் பலனாக அவளுடைய மனக் கோட்டைகள் எல்லாம் பொலபொல என்று தகர்ந்து விழுந்தன. கணவனை அடைந்த பின்னர்தான் மகனைப் பெற முடியும் என்று அவள் அறிந்திருந்தாள். கணவன் யாராயிருந்தாலும், எப்படிப் பட்டவனாயிருந்தாலும் சரிதான் என்ற அலட்சியப் பான்மை அதற்கு முன்பு அவள் அடி உள்ளத்தில் இருந்தது. ஆனால், இந்தப் பொல்லாத மனத்தை என்ன செய்வது? இது சோழ நாட்டு மக்களின் கண்ணுக்குக் கண்ணான இளவரசரிடமல்லவா போய்விட்டது! ஐம்பத்தாறு தேசத்து மன்னர்களும் 'என் பெண்ணை மணந்து கொள்!' என்று கெஞ்சிக் கூத்தாடக் கூடிய பெருமை வாய்ந்தவர் அல்லவா அவர்! அத்தகையவர் தன்னைத் திரும்பியும் பார்ப்பாரா? அவரை மணந்து கொள்ளும் பாக்கியத்தைப் பற்றி அவளால் கனவுகூடக் காண முடியாதே? இளவரசரிடம் இந்தப் பேதை மனம் சென்ற பிறகு, இன்னொருவரை மணந்து கொள்வதுதான் எப்படிச் சாத்தியம்! ஆகையால், தன் வயிற்றில் பிறக்கப் போகிற வீர குமாரனைப் பற்றி இத்தனை காலமும் அவள் கட்டிவந்த மனக் கோட்டைகளெல்லாம் சிதறிப் போகத்தானே வேண்டும்? இதையெல்லாம் நினைக்க நினைக்க, அவளுடைய உள்ளம் வெடித்து விடும் போலிருந்தது. மறுபடியும் பழையபடி சோக வடிவமானாள். அவளுடைய மனத்தை அறிந்து கொண்ட இளைய பிராட்டி அவளிடம் விசேஷ அன்பும் ஆதரவும் காட்டினாள். தன்னாலியன்ற வரையில் வானதியை உற்சாகப் படுத்த முயன்றாள். பொன்னியின் செல்வரிடம் அவளுடைய உள்ளம் சென்றது அப்படியொன்றும் பிசகான விஷயமில்லையென்றும், நடக்கமுடியாத காரியமும் அல்லவென்றும் குறிப்பாக உணர்த்தி வந்தாள். குடந்தை ஜோதிடர் வானதிக்குப் பிறக்கப் போகும் மகனைப் பற்றிக் கூறியது அவளுடைய உள்ளக் கனலுக்குத் தூபம் போட்டு வளர்த்தது. அவளுடைய மனோராஜ்யம் மேலும் விரிவடைந்து கொண்டே வந்தது. மனச் சோர்வும் குதூகலமும் மேலும் துரிதமாக மாறி மாறி ஏற்பட்டன. ஏக்கத்தினால் ஏற்பட்ட மனவேதனை பொறுக்க முடியாமலிருந்தது போல், மகிழ்ச்சியினால் ஏற்பட்ட கிளர்ச்சியையும் அவளால் சகித்துக் கொள்ள முடியவில்லை. இரண்டும் மிதமிஞ்சிப் போன போது மயக்கம் போட்டு விழுந்தாள்; இயற்கை அருளிய இந்த மயக்க மருந்து சாதனத்தினால் அவள் தன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு வந்தாள்.

தஞ்சைக்குச் சென்றிருந்த போது, வானதி பார்த்த பராந்தகச் சக்கரவர்த்தி நாடகமும், அன்றிரவு அவள் கேட்ட அபயக் குரலும் கண்ட பயங்கரக் காட்சியும் அவளுடைய மனக் குழப்பத்தை அதிகமாக்கின. கொடும்பாளூர் வம்சத்துக்கும் பழுவூர் சிற்றரசர் குலத்துக்கும் ஏற்பட்டிருந்த தீராத பகையின் அளவை அவள் அன்று நன்கு அறிந்து கொண்டாள். பழுவூர்க்காரர்கள் சோழ நாட்டில் அப்போது அடைந்திருந்த செல்வாக்கின் அளவையும் தெரிந்து கொண்டாள். இளவரசர் அருள்மொழி



வர்மர் விஷயத்தில் தன் மனோரதம் ஈடேறப் பழுவேட்டரையர்கள் அநுமதிப்பார்களா? அவர்கள் அநுமதித்தாலும் அவர்கள் வீட்டுப் பெண்கள் சும்மா யிருப்பார்களா? பழுவூர் இளைய ராணி சம்மதிப்பாளா? அவளுடைய செல்வாக்கும் சக்தியும் உலகம் அறிந்தவை. நந்தினியை நினைக்கும்போதெல்லாம் அழகிய நாகப்பாம்பின் நினைவு வானதிக்கு வந்தது. இளைய பிராட்டியின்பேரில் அவளுடைய பகைமையைப் பற்றி அறிந்து கொண்டிருந்தாள். அது தன்பேரிலும் பாயும் அல்லவா? ஏன்? பொன்னியின் செல்வரையே அந்த விஷநாகம் தீண்டினாலும் தீண்டக்கூடும்! நள்ளிரவில், நோயாகப் படுத்திருக்கும் சக்கரவர்த்தியின் முன்னால் நந்தினியையொத்த வடிவம் ஒன்று நின்றதே! அது உண்மையில் நந்தினிதானா? சக்கரவர்த்தி அப்படியெல்லாம் பீதி நிறைந்த குரலில் ஓலமிட்ட காரணம் என்ன? இளைய பிராட்டி இதைப்பற்றியெல்லாம் ஏன் தன்னிடம் எதுவும் பேசுவதற்கு மறுக்கிறாள்! ஆமாம்! இளைய பிராட்டியின் மனமும் மாறிப் போயிருக்கிறது. தன்னிடம் முன்னெல்லாம் போல் அவ்வளவு கலகலப்பாகப் பேசுவதில்லை. அடிக்கடி தன்னை விட்டு விட்டுத் தனிமையை நாடிப் போய் விடுகிறார். அவரை ஏதோ பெருங் கவலை பிடித்திருக்கிறது. ஒரு வேளை பொன்னியின் செல்வரைப் பற்றிய கவலை தானோ என்னவோ? அதனாலேதான் தன்னிடம் அதைப் பற்றிச் சொல்வதற்கு மறுக்கிறார் போலும்!

இன்றைக்குக் கூடத் திடீரென்று இளைய பிராட்டி காணாமற் போய் விட்டார். அவர் இல்லாத சமயங்களில் இந்தப் பெண்கள் என்னபாடு படுத்துகிறார்கள்? என்ன கொட்டம் அடிக்கிறார்கள்? கவலையென்பதை அறியாதவர்கள். எது எப்படிப் போனாலும் அவர்களுடைய கொம்மாளத்துக்குக் குறைவு ஒன்றும் கிடையாது. அவர்களுடைய கேலிப் பேச்சுக்களை வானதியினால் எப்போதும் சகித்துக் கொள்ள முடிவதில்லை. அதுவும் இந்த இரண்டு மூன்று தினங்களாக ஒரே சோகக் கடலில் வானதி ஆழ்ந்திருந்தபடியால் அவர்களுடைய வீண் பேச்சுக்கள் அவளுடைய காதில் நாராசமாக விழுந்தன. இளைய பிராட்டி எங்கேதான் போயிருப்பார் என்று தேடிக் கொண்டு புறப்பட்டாள். மூத்த மகாராணியின் அரண்மனையில் ஏதோ

சபை கூடியிருக்கிறதென்றும் அங்கே போயிருக்கிறார் என்றும் தெரிந்து கொண்டாள். ஆகையால் அந்த அரண்மனைக்குச் சென்றாள். வானதி போவதற்குள் அங்கே சபை கலைந்துவிட்டது. பெரிய மகாராணியும் அவருடைய செல்வப் புதல்வர் மதுராந்தகரும் அந்தரங்கமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று அறிந்தாள். எதனாலோ இந்தச் செய்தி வானதிக்கு மேலும் கவலையை உண்டாக்கியது. அங்கிருந்து மறுபடியும் புறப்பட்டாள். அரண்மனை வாசலில் ஜனத்திரளின் பெரும் இரைச்சல் கேட்டது. விஷயம் இன்னதென்று தெரியவில்லை. இளையபிராட்டியை உடனே பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் மிகுந்தது. அரண்மனையில் சேடிப் பெண்களை ஒவ்வொருத்தியாக விசாரித்தாள். சற்று முன்னால் ஆழ்வார்க்கடியான் என்னும் வீர வைஷ்ணவனுடன் இளைய பிராட்டி அந்தரங்கமாகப் பேசிக்கொண்டிருந்ததாகவும், பிறகு அரண்மனைத் தோட்டத்து ஓடையை நோக்கிச் சென்றதாகவும் ஒரு சேடி கூறினாள். இளைய பிராட்டி தனிமையை நாடிச் செல்லும் சமயங்களில் யாரும் வந்து தொந்தரவு செய்வதை இப்போதெல்லாம் அவர் விரும்புவதில்லை. ஆகையால் ஓடைப் பக்கம் இளைய பிராட்டியைத் தேடிக்கொண்டு போகலாமா வேண்டாமா என்று வானதி தயங்கினாள். அச்சமயம் வாரிணி என்



னும் மங்கை ஓட்டமாக ஓடி வந்தாள். ''பொன்னியின் செல்வர் கடலில் மூழ்கி விட்டாராம்!'' என்ற பயங்கரச் செய்தியைச் சொல்லிவிட்டு அலறி அழுதாள். மற்றப் பெண்களும் இதைக் கேட்டு ஓவென்று கதறத் தொடங்கினார்கள். வானதிக்கோ முதலில் எவ்வித உணர்ச்சியும் உண்டாகவில்லை. சும்மா நின்ற வளை மற்றப் பெண்கள் உற்று நோக்கினார்கள். ''அடி பாவி! உன்னுடைய துரதிர்ஷ்டத்தினால்தான் இளவரசர் கடலில் முழுகினார்!'' என்று அவ்வளவு கண்களும் அவளை நோக்கி இடித்துச் சொல்லுவது போல் காணப் பட்டது. வானதியினால் அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை. அங்கு நிற்கவும் முடியவில்லை. அரண்மனைத் தோட்டத்து ஓடையை நோக்கி ஓடினாள்.

ஓடையை நோக்கி ஓடிக்கொண்டிருந்த போது வானதியின் உள்ளமும் ஓடிக் கொண்டிருந்தது. ''இளவரசர் கடலில் முழுகிவிட்டார்!'' என்ற வார்த்தைகளின் பொருள் அவளுக்கு விளங்கியது. அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியை மீறிக் கொண்டு மற்றோர் எண்ணம் மேலெழுந்தது. சென்ற சில தினங்களாகத் தண்ணீரைப் பார்க்கும்போதெல்லாம் அதில் இளவரசரின் முகம் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. கரையில் நின்று பார்க்கும் போதெல்லாம் அவருடைய முகம் தத்ரூபமாகத் தண்ணீரில் தோன்றும். தொடுவதற்குப் போனால் மறைந்து விடும். அதன் காரணம் என்னவென்பது வானதிக்குப் புலனாயிற்று. இளவரசர் கடலில் முழுகியபோது என்னை நினைத்துக் கொண்டிருக்கிறார். என்னை அழைத்துமிருக்கிறார். அதை அறியாமல் பாவி நான் கரையிலேயே நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன்! ஆஹா! என்ன தவறு செய்து விட்டேன்? போனதை நினைப்பதில் இனிப் பயனில்லை. இனிச் செய்ய வேண்டியது என்ன? பேதைப் பெண்ணே! இனிச் செய்ய வேண்டியதைப் பற்றி யோசிக்கவும் வேண்டுமா! யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? அரண்மனைத் தோட்டத்தை யடுத்துள்ள ஓடை அரசலாற்றில் கலக்கிறது. அரசலாறு கடலில் போய்ச் சங்கமமாகிறது. கடலின் அடியில் காத்திருக்கிறார் இளவரசர். எனக்காகத்தான் காத்துக்கொண்டிருக்கிறார். கடலின் அடியில் முத்துக்களாலும் பவளங்களாலும் ஆன அற்புத மாளிகையில் எனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார். அவரைச் சந்திக்கப் போகாமல் இந்த உலகத்தில் எனக்கு வேறு என்ன வேலை?...... யாருக்காக இங்கே நான் இருக்க வேண்டும்?......

இவ்வாறு வானதி தீர்மானம் செய்ததும் வானதியின் உள்ளத்தில் ஒருவித அமைதியே உண்டாகிவிட்டது; அவளது பரபரப்பு அடங்கி விட்டது; துயரம் நீங்கி விட்டது; கவலை தீர்ந்து விட்டது.

நேரே ஓடைக்கரைக்குச் சென்றாள். பளிங்குக் கல்லினாலான படிக்கட்டுகளில் இறங்கி நின்றாள். சுற்று முற்றும் பார்த்தாள். அதோ தூரத்தில் படகு ஒன்று வருவது தெரிந்தது. அதில் இருப்பவர் இளைய பிராட்டிதான். அவருடன் இருக்கும் ஆடவன் யார்? குடந்தை ஜோதிடர் வீட்டில் முதலில் சந்தித்து, இலங்கைக்கு ஓலை எடுத்துச் சென்ற வாலிபன் போலத் தோன்றுகிறது. இளவரசரைப் பற்றிய செய்தியைக்கொண்டு வந்தவன் அவன்தான் போலும்! அதனாலேதான் அவனை இளைய பிராட்டி தனியாக அழைத்துப் போயிருக்கிறார். விவரங்களைக் கேட்டு அறிந்திருக்கிறார். எனக்குத் தெரிந்தால் கஷ்டப்படுவேன் என்று என்னை விட்டுவிட்டுப் போயிருக்கிறார். அவர் வந்து விட்டால் என் இஷ்டப்படி செய்ய முடியாது. ஏதாவது சமாதானம் சொல்லப் பார்ப்பார்; ஆறுதல் கூறப் பார்ப்பார். நான் இளவரசரைப் போய்ச் சேர்வதைக் கட்டாயம் தடுத்து விடுவார். ஆனாலும் அவரிடம் சொல்லாமல், கடைசியாக ஒரு தடவை விடைபெற்றுக் கொள்ளாமல், போவது நியாயமா? தாய் தந்தையற்ற இந்த அனாதைப் பெண்ணிடம் இத்தனை அன்பாக இருந்தாரே! அவருக்கு ஒரு நன்றி வார்த்தையாவது சொல்ல வேண்டாமா?...... முடியாது! முடியாது! இனி ஒரு கணமும் காத்திருக்க முடியாது! இதோ தண்ணீரில் அவர் முகம் தெரிகிறது! இதோ அவருடைய முழு உருவமும் பொலிகிறது. என்னை அவர் அழைக்கிறார்; புன்னகை செய்து கூப்பிடுகிறார். ''உன்னை நான் மணம் புரிந்து கொள்ளுவதற்கு எல்லாத் தடைகளும் நீங்கி விட்டன! வா!'' என்று அழைக்கிறார். இன்னும் ஏன் தாமதம்?...... ஆகா! தலை ஏன் இப்படிச் சுற்றுகிறது? பாழும் மயக்கம் வருகிறதா, என்ன? மயக்கம் வந்தால் பாதகமில்லை. கரையில் விழாமல் இந்த ஓடைத் தண்ணீரில் விழுந்தால் போதும்!......

வானதியின் மனோரதம் நிறைவேறியது. அவள் தண்ணீரிலே தான் விழுந்தாள். கொதித்துக் கொண்டிருந்த உடம்பு இனிதாகக் குளிர்ந்தது. இதயமும் குளிர்ந்தது. கீழே கீழே கீழே போய்க் கொண்டிருந்தாள். எத்தனை தூரம் எத்தனை காலம் போனாள் என்று சொல்ல முடியாது. சில வினாடி நேரமாகவும் இருக்கலாம்; நீண்ட பல யுகங்களாகவும் இருக்கலாம்.

ஆம்; கடலின் அடியிலுள்ள அற்புத லோகத்துக்கு அவள் வந்து விட்டாள். நாகலோகம் என்பது இதுதான் போலும்! ஆகா! எத்தகைய அழகிய மாளிகைகள்! எத்தனை அடுக்கு மெத்தைகள்! முடிவில்லாமல், சிகரம் எங்கே இருக்கிறதென்று தெரியாமல் அல்லவா, இம்மாளிகைகள் உயர்ந்து விளங்குகின்றன! இங்குள்ள வெளிச்சம் எதனால் இவ்வளவு குளிர்ந்து மனோ ரம்மியமாயிருக்கிறது? தண்ணீருக்குள் புகுந்து வருவதால் ஒளிக் கிரணங்களும் குளிர்ந்திருக்கின்றன போலும்! ஒளி எங்கிருந்து வருகிறது? மாளிகைச் சுவர்களிலிருந்தே வருகின்றது போலிருக்கிறது! ஆம், அதில் வியப்பில்லைதான்! தங்கத்திலும் முத்துக்களாலும் வைர வைடூரியங்களாலும் நாக சர்ப்பங்களின் சிரோரத்தினங்களாலும் ஆன விசித்திர மாட மாளிகைகள் குளிர்ந்த வெளிச்சத்தைப் பரப்புவது இயல்புதானே?

அதோ கூட்டமாக வருகிறவர்கள் யார்? அவர்களுடைய தேகங்கள் எப்படிக் காந்தி மயமாயிருக்கின்றன? முகங்களிலேதான் என்ன தேஜஸ்? இவர்களெல்லாம் தேவலோகத்து ஸ்திரீ புருஷர்களைப் போல் அல்லவா தோற்றமளிக்கிறார்கள்? நாம் வந்திருப்பது ஒரு வேளை நாகலோகமில்லையோ? தேவலோகத்துக்கு வந்துவிட்டோமோ!......

பிறகு, கனவுக்குள் ஒரு கனவைப் போல் சில நிகழ்ச்சிகள் அதிவேகமாக நடந்தேறின. சிங்கார அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்த மணி மண்டபம் ஒன்றுக்கு வானதியை அவர்கள் அழைத்துச் சென்றார்கள். மண்டபத்தின் மத்தியில் பொன்னியின் செல்வர் தமது பொன் முகத்தில் புன்னகை பொலிய நின்று வானதியை வரவேற்றார். தேவ துந்துபிகள் முழங்க, மணிகளும் மலர்களும் பொழிய, மங்கள கோஷங்கள் ஒலிக்க, இளவரசரும் வானதியும் மாலை மாற்றித் திருமணம் புரிந்து கொண்டார்கள். அந்த ஆனந்தத்தின் மிகுதி

யைத் தாங்க முடியாமல் வானதி மூர்ச்சையாகி விழுந்தாள். வெகு நேரம் நினைவின்றிக் கிடந்த பிறகு இரு கரங்கள் அவளைத் தூக்கி எடுத்தன. அக்கரங்கள் பொன்னியின் செல்வருடைய திருக்கரங்கள் என்று முதலில் வானதி கருதினாள். அவர் தான் தன்னைத் தூக்கி எடுத்து வாரி அணைத்து மடியில் போட்டுக் கொண்டு மூர்ச்சை தெளிவிக்கிறார் என்று எண்ணினாள். ஆனால் கைகளிலே வளையல்கள் தட்டுப் பட்டதும் சிறிது ஐயம் உதித்தது. "வானதி! வானதி! இப்படிச் செய்து விட்டாயே?" என்ற குரலும் பெண் குரலாக ஒலித்தது. மிகமிகப் பிரயத்தனம் செய்து வானதி சிறிதளவு கண்ணிமைகளைத் திறந்து பார்த்தாள். குந்தவையின் முகம் அவள் கண்ணில் பட்டது.

"அக்கா! அக்கா! என் கலியாணத்துக்கு நீங்கள் வந்திருந்தீர்களா? தங்களைக் காணவில்லையே?" என்று வானதியின் வாய் முணுமுணுத்தது. (தொடரும்)

படித்துப் பாருங்கள்!

போராட்டம்

லலிதா அவள் அண்ணா ராகவனோடு கலாசாலையில் படித்துக் கொண்டிருந்தாள். ராகவனின் நண்பன் பாஸ்கரன் அவர்கள் இருந்த வீட்டு மாடியறையில் குடியிருந்தான். அவன் ஒரு அப்பாவி. உணர்ச்சியற்ற ஜடப் பொருள் மாதிரி இருந்தான். அவனிடம் லலிதாவுக்கு ஒரு வித அநுதாபம் ஏற்பட்டது. அவனை எப்படியாவது மாற்றிவிட வேண்டும் என்னும் அளவுக்கு அந்த அநுதாபம் வளர்ந்தது.

அதன் காரணமாக லலிதா பாஸ்கரனைத் தங்கள் வீட்டிலேயே இருக்கச் சொன்னாள். மூவருடைய கலாசாலைப் படிப்பும் முடிந்ததும் ராகவன் ஒரு வேலை தேடிக் கொண்டு, தனக்கு இஷ்டமான ஒரு பெண்ணை மணமும் செய்து கொண்டு விட்டான்.

லலிதாவும் பாஸ்கரனும் தனியே விடப் பட்டனர். லலிதாவின் தோற்றத்தில் பொதிந்து கிடந்த பெண்மையை இப்பொழுதுதான் பார்த்தான். அவன் அவளை மணக்க விரும்பினான். ஆனால் லலிதா.........!

இந்தக் கதையின் ஆரம்பத்திலிருந்து முடிவு வரையில் வளரும் மனப் போராட்டங்களும், ஓயாத வாதப் பிரதிவாதங்களும் வாசகர் மனத்திலும் ஒரு போராட்டத்தை எழுப்பும்.

எழுதியவர்: ஜி. எஸ். மணி; பிரசுரம்: அமுத நிலையம், தேனாம்பேட்டை, சென்னை, 18. விலை: ரூ. 2—8—0.

அகதி

கால வெள்ளம் கரை புரண்டு செல்லும் போது எத்தனையோ மாறுதல்களை ஏற்படுத்திக் கொண்டே செல்லுகிறது. இந்த மாறுபட்ட சூழ்நிலையின் காரணமாக, புதிதாக உருவாகும் கதைகளும் புதிய சூழ்நிலைக்கு ஏற்ற அடிப்படையைக் கொண்டவையாயிருக்க வேண்டும்.

இந்தக் கொள்கையை ஒட்டிப் பிரபல எழுத்தாளர் "மாயாவி" அவர்கள் இத்தொகுதியில் பத்துக் கதைகள் எழுதியிருக்கிறார்.

ஒரு கதை சமூகத்தின் நாகரிக வாழ்வென்று சொல்லப்படும் சீர்கேட்டைச் சவுக்கடி கொடுத்துச் சீறினால், இன்னொரு கதை சந்தர்ப்ப விசேஷத்தினால் அகதிகளான ஒரு குடும்பத்தைக் காட்டிக் கல் மனத்தையும் கனிய வைக்கிறது.

மணியும் தேவகியும் காதலர்கள். தேவகி ஓர் இளம் விதவை. இன வெறி காரணமாகத் தேவகி மத வெறியர்கள் கையில் சிக்கி, கசக்கப்பட்ட மலரானாள். சில வருஷங்களுக்குப் பிறகு அவள் தன் காதலனைச் சந்தித்தாள்; நெருப்பை மிதித்தவள் மாதிரி தவித்தாள். தன்னை நெருங்க வேண்டாம் என்று கதறினாள். காதலன், "அது உன் தவறல்ல தேவகி; நம் சமுதாயத்தின் தவறு. நான் உன்னைக் கை விடேன்" என்று கூறுகிறான்.

இப்படி ஒவ்வொரு கதையும் ஒரு புதிய கருத்துப் பொதிந்து விளங்குகிறது.

பிரசுரம்: புதுமைப் பிரசுரம், பெண்ணாடம், தென்னார்க்காடு ஜில்லா; விலை: ரூ. 2.

சத்திய சாதனை

பதித குலத்தையே மாண்புறச் செய்த காந்தி மகானைப் பற்றிய கவிதைகள் பல அடங்கியிருக்கின்றன இந்நூலில். மகாத்மாவின் தியாக வாழ்க்கையைப் பற்றியும், அவர் அருளிய அரும் பொக்கிஷமான அறபோதனைகளைப் பற்றியும் இனிய தமிழில் அழகாக இசைக்கப் பட்டிருக்கிறது.

"சீலை வெண்கதர் நூலி லிருப்பான்
தேவன் ஓதிய பாவி லிருப்பான்
கோல மாமலை முடியி லிருப்பான்
குலவி யாடிடுங் கொடியி லிருப்பான்
மாறு கத்திடும் பங்கியர் இடையில்
மன்னு பாரத மடியி லிருப்பான்
பாலையும் பசுஞ் சோலை யாக்கிடும்
பக்தர் தம்மனச் சிறையில் இருப்பான்."

என்ற கவிதையைப் படிக்கும்போது அண்ணல் காந்தியடிகளின் திருவுருவம் மனக் கண்முன் தோன்றுகிறது. இந்நூலிலுள்ள மற்றக் கவிதைகளும் சுவையோடு விளங்குகின்றன.

இயற்றியவர்: சுரபி; பிரசுரம்: முத்தமிழ் நிலையம், 77, வரதா முத்தையப்பன் தெரு, சென்னை—1. விலை: 0—12—0.

பெண் இதயம்

"—அந்த நாளிலே அஹல்யா உடலினால் குறையுற்றாள்; ஆனால் உள்ளத்தால் எள்ளளவுகூடக் குறைவுபடவில்லை" என்று தங்கத்தின் கடிதம் கூறியது. அது அனந்தராமன் மனசில் சுரீர் என்று தைத்தது. இது நம் மனசிலும் தைக்க வேண்டுமானால் கதையைப் படிக்க வேண்டியதுதான். எழுதியவர்: ஜி. எஸ். மணி; பிரசுரம்: வெண்ணிலா வெளியீடு, தபால் பெட்டி நெ. 1793, சென்னை—1. விலை: 0—12—0.


மே 1உ முதல் சென்னை பிரபாத்
வெலிங்டன்
இரு தியேட்டர்களிலும்
மற்றும்
மதுரை
பெங்களூர்
கோயமுத்தூர்
திருச்சி
தஞ்சாவூர்
மைசூர்
சேலம்
திருநெல்வேலி
காரைக்குடி
திண்டுக்கல்
விருதுநகர்
வேலூர்
கரூர்
மே 3உ முதல்
காஞ்சீபுரம்
பாண்டிச்சேரி
கடலூர்
ஈரோடு
மே 9உ முதல்
மங்களூர்
நாமக்கல்
ராபர்ட்சன்பேட்டை
காஞ்சனை
ஆனந்த விகடனில்
"லக்ஷ்மி"
பக்ஷிராஜா ஸ்டுடியோஸ்
தயாரிப்பு...
டைரக்ஷன்
எஸ்.எம்.ஸ்ரீராமுலு நாயுடு



D.V.
கோலினாஸ்
புன்னகையில் குணமேன்மை ஒளிர்கிறது!
'கோலினாஸ்' வேறெந்த டென்டல் க்ரீமையும் விட எவ்வளவோ அதிக சிக்கனம் வாய்ந்தது— ஏனெனில், ஈரமில்லாத பிரஷில் அரையங்குல அளவே போதுமானது.
நுரைதான் இந்த வித்தியாசத்திற்குக் !
இந்தியாவில் தயாரிப்பாளர்கள் :
ஜியாப்ரே மானர்ஸ் & கோ. !
கிளைகள் : கல்கத்தா - மதராஸ் - டில்லி
KOLYNOS
KOLYNOS DENTAL CREAM
A SCIENTIFIC DENTAL CRE

சீங்கரியின் சங்கடம்

கி. ரங்கராஜன்

ரயில் வண்டி நீளமாக ஊதிவிட்டுப் புறப்பட்டது. கை காட்டி மரம் தாண்டியதும், அதுவரையில் குனிந்த தலை நிமிராமல் இருந்த சங்கரி, சற்று நிமிர்ந்து எதிர்ப் பலகையில் உட்கார்ந்திருந்த தன் அண்ணன் முகத்தை நோக்கினாள்.

“என்ன பார்க்கிறாய்?” என்று கேட்டான் சிவராமன்.

“ஒன்றுமில்லை. நான் சற்று அவசரப் பட்டு விட்டேனோ என்று நினைக்கிறேன்!”

“அவசரப்படவில்லை. ரொம்பநாள் தாமதித்து விட்டாய். இன்னும் கொஞ்சம் தாமதித்திருப்பாயானால், நிச்சயமாக உன் கணவன் உன்னைக் கொலை கூடச் செய்திருப்பான். இந்த மட்டுமாவது உன்னை உயிருடன் காணப்பெற்றேனே, அது ஒன்றே போதும்.”

“என்ன அண்ணா, அப்படிச் சொல்லுகிறாய்?” என்றாள் சங்கரி.

“சொல்லுவதற்கு என்ன இருக்கிறது? கிளியை வளர்த்துப் பூனைகையில் கொடுத்தாற் போல, உன்னை எவ்வளவோ அருமை பெருமையாக வளர்த்து அந்த முட்டாள் முரடன் கையிலே கொண்டு போய்க் கொடுத்தேனே. அதை நினைக்கும் போதுதான் என் நெஞ்சு வெடித்துவிடும் போல் இருக்கிறது. முடிவாக உனக்கு ஒன்று சொல்லுகிறேன். நீ அவனை இனி மறந்துவிடத்தான் வேண்டும்.”

“அவரை எப்படி அண்ணா மறக்க முடியும்? கையிலே உள்ள இந்தத் தழும்பு ஒன்றே அவரை மறக்க முடியாதபடி செய்துவிடுமே!” என்று சொல்லிக் கொண்டே, அன்றொரு நாள் தன் கணவன் தனது வலது கையில் சூடு போட்ட அந்தத் தழும்பை அவன் முகத்துக்கு எதிரே நீட்டினாள்.

சிவராமன் கண்களை மூடிக் கொண்டான். சில விநாடிகள் கழித்துக் கண்ணைத் திறந்து மீண்டும் பேசினான்.

“சங்கரி, வீணாக மனசைப் புண்படுத்திக் கொள்ளாதே. நான் உள்ள வரையில் உன்னைக் காப்பாற்றி விடுவேன்; பிறகும் நீ சௌக்கியமாக இருப்பதற்கு வேண்டிய வழியை ஊர் போனதும் செய்து விடுகிறேன். அந்தப் பயல் மீது தாவா போட்டு அவனுடைய சொத்தில் சரிபாதியை உனக்குக் கொடுத்து விடும்படி செய்து விடுகிறேன். நீ உன் கணவனுடன் குடித்தனம் பண்ணிக் குப்பை கொட்டினது போதும்.”



“எல்லாம் சரிதான். மன்னி என்ன சொல்லுவாளோ? வாழாவெட்டியாய் ஒருத்தி தன்னோடு வந்து இருப்பதற்கு அவள் இசைவாளோ?”

“பூ! இவ்வளவுதானா நீ அவளைப்பற்றித் தெரிந்து கொண்டது? உன் கணவன் உனக்கு இழைத்த தீமையை அவளுக்கு முழுதும் சொல்லவில்லை. ஏதோ கொஞ்சம் சொன்னேன். அப்படிச் சொன்னபோது அவள் என்ன சொன்னாள் தெரியுமா? போய் உடனே உன்னை அழைத்து வந்து பிறகு மறு காரியம் பார்க்கச் சொன்னாள். அவளுக்கு அவளுடன் கூடப் பிறந்தவர்கள் யாரும் இல்லை. நீதான் இனிமேல் அவளுக்குத் தங்கையாம். என்னைவிட அவள் உன்னிடம் அன்பாகவும் ஆசையாகவும் இருப்பாள். கவலைப்படாதே” என்று இன்னும் ஏதேதோ சொல்லித் தங்கையைத் தேற்றினான்.

ரயிலை விட்டுக் கீழே இறங்கினார்கள், அண்ணனும் தங்கையும். பிளாட்பாரத்தைத் தாண்டி வெளியே வந்தார்கள். வாசலில் ஒரு பிரும்மாண்டமான காரில் நாகரிக மங்கை ஒருத்தி உட்கார்ந்து யாரையோ எதிர் பார்த்தவளாய் வெளியே தலை நீட்டிக் கொண்டிருந்தாள்.

சிவராமனைக் கண்டதும், அந்தப் பெண், “இப்படி வாருங்கள்! இதோ இருக்கிறேன். நல்ல வேளை. எங்கே சங்கரி வராமற் போய் விடுவாளோ என்று பயந்தேன். அவளைக் கூட்டி வந்தீர்களே!” என்று சொல்லிக் கொண்டே அவர்களை வரவேற்றாள்.

சங்கரிக்கு அவளைப் பார்த்ததும், சிறிது மகிழ்ச்சி உண்டாயிற்று. கள்ளம் கபடமற்ற அவள் முகத்தைப் பார்த்ததும், சிறிது ஆறுதலாகவும் இருந்தது.

“ராஜி! இவள் இன்று முதல் உனக்கு ஒரு தங்கை! எவ்வளவோ புண்பட்டுப் போய் வந்திருக்கிறாள். அவள் மனம் நோகாதபடி நீ பார்த்துக் கொள்ள வேண்டும்” என்று சொல்லிக் கொண்டே காரை அணுகினான்.

“பேஷ்! நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதை எனக்கே திருப்பிச் சொல்லுகிறீர்களோ?” என்று சொல்லிச் சிரித்தபடி, “காரை நான் ‘டிரைவ்’ பண்ணட்டுமா?” என்று கணவனைக் கேட்டாள்.

“பேஷாகச் செய்வேன்!” என்றான் சிவராமன் மகிழ்ச்சியுடன்.

உயிரைக் கொடுத்த தியாகி

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன் பிரிட்டனில் ஓர் இளைஞர் பணத்தையோ, பதவியையோ நாடாமல் பொதுஜன நன்மைக்காகத் தொண்டு செய்ய வேண்டும் என்று உறுதி கொண்டார்.

அதற்கு இணங்க வருஷத்தில் பதினாயிரக்கணக்கான பவுன் வருமானம் உள்ள வக்கீல் தொழிலைக் கைவிட்டார். மாமிச போஜனத்தை அறவே விடுத்தார். மது அருந்துவதை முற்றிலும் துறந்தார்.



வாழ்க்கையை வெறுத்துப் பொதுஜனத் தொண்டில் ஈடுபட்டதால் அவரது ஆரோக்கியம் சீர்குலைந்தது. எனினும் அவர் தமது சீரிய கொள்கையைக் கைவிடாமல் தமது நாட்டைக் கவிந்து கொண்டிருந்த பேராபத்திலிருந்து அதைக் காப்பாற்றிப் பெரும் வெற்றி பெற்றார்.

ஆனால் அந்த வெற்றியைப் பெறுவதற்கு அவர் தமது உயிரையே தியாகம் செய்ய நேர்ந்தது.

அத்தகைய உத்தமமான மனிதர்தான் சில தினங்களுக்கு முன் காலஞ்சென்ற ஸர் ஸ்டாப்போர்ட் கிரிப்ஸ்.

கிரிப்ஸ் சட்ட நுணுக்கங்களில் கைதேர்ந்தவர்; விஞ்ஞான ஆராய்ச்சியில் நிபுணர்; பொருளாதார பண்டிதர்; அரசியல் மேதாவி. தேகத்தை உழைத்து வேலைசெய்யும் தொழிலாளர்களுக்குச் சங்கீதத்தின் மூலம் உற்சாகம் அளிக்கலாம் என்ற அரிய உண்மையைப் பிரிட்டனில் முதன் முதலாகக் கண்டு பிடித்து அமுலுக்குக் கொண்டு வந்த பெருமை ஸர் ஸ்டாப்போர்ட் கிரிப்ஸுக்கே உரியது.

முதலாவது மகாயுத்தம் நடந்த காலத்தில் கிரிப்ஸைப் பல பதவிகள் துரத்திக் கொண்டிருந்தன. ஆனால் அவர் அவற்றை லட்சியம் செய்யாமல், போர்முனையில் காயமடைந்த சிப்பாய்களுக்கு உதவி செய்வதற்காக வைத்திய மோட்டார் டிரைவர் வேலையை ஒப்புக்கொண்டார். வெளி நாடுகளுக்குச் சென்று தொண்டு புரிந்தார்!

இரண்டாவது உலக மகாயுத்தம் ஆரம்பமான காலத்தில் பிரிட்டனுக்கு ருஷ்யாவுடன் கட்புக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதற்கு ஒரு சிறந்த ராஜதந்திரியின் உதவி தேவையாக இருந்தது. அந்தக் காரியத்தை வெற்றிகரமாக நிறைவேற்றும் ஆற்றல் ஸர் கிரிப்ஸைத் தவிர வேறு எவருக்கும் இல்லை என்பதை வின்ஸ்டன் சர்ச்சில் உணர்ந்தார்; கிரிப்ஸைப் பிரிட்டிஷ் தூதராக மாஸ்கோவுக்கு அனுப்பினார். அவ்வாறு தூது சென்ற கிரிப்ஸின் முயற்சியால் பிரிட்டனுக்கும் மாஸ்கோவுக்கும் சிநேக உடன்படிக்கை ஏற்பட்டது.

இரண்டாவது மகா யுத்தத்துக்குப் பிறகு இந்தியாவுக்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் மந்திரிகள் தூதுகோஷ்டியில் கிரிப்ஸும் ஒருவர் என்பதை யாரும் மறந்திருக்க முடியாது.

1947-ம் ஆண்டில் பிரிட்டனின் பொருளாதார நிலை சீர்கெட்டுக் கிடந்தது. அந்தேசம் 'பாப்பரா'கும்படி நேருமோ என்று பிரிட்டிஷ் தலைவர்கள் கலங்கினர். அந்த நெருக்கடியான சமயத்தில் கிரிப்ஸ் பிரிட்டிஷ் பொருளாதார மந்திரி பதவியையும், பிறகு நிதிமந்திரி பதவியையும் ஏற்று நிலைமையைச் சீர்படுத்தி பிரிட்டன் உய்வடையச் செய்தார். ஆனால் பிரிட்டனின் சீர்குலைவைத் தவிர்த்த கிரிப்ஸுக்கு, அந்த மகத்தான முயற்சியில் தமது ஆரோக்கியம் சீர்குலைவதைத் தவிர்க்க முடியவில்லை. தேசப்பணி காரணமாக நோய்வாய்ப்பட்ட கிரிப்ஸ் இறுதியில் அந்த நோய்க்கே பலியாக நேர்ந்தது.

சங்கரிக்கு உண்டான ஆச்சரியம் இவ்வளவு அவ்வளவு அல்ல.

"என்ன அண்ணா! மன்னிக்குக் கார்கூட ஓட்டத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"கார் என்ன பிரமாதம், அவளுக்கு? சில சமயம் என்னையே ஓட்டி விடுவாளே!"

கால் நாழிகையில் கார் சிவராமன் வீட்டு வாசலில் வந்து நின்றது. ரொம்ப அழகான வீடு. வீட்டின் முன் வாசலில் ஒரு அழகிய புஷ்பத் தோட்டம். அந்தக் காட்சி சங்கரியின் கண்ணுக்கும் மனசுக்கும் ரம்மியமாக இருந்தது.

வீட்டு வாசல் புறத்தில் நாலைந்து இளம்பெண்கள் நின்று கொண்டிருந்தனர்.

அவர்களைக் கண்டதும் ராஜி, "ஹல்லோ! ரொம்ப நேரமாகக் காத்திருக்கிறீர்களோ? எக்ஸ்க்யூஸ்மி" என்று சொல்லிக் கொண்டே அவர்களுக்கு வந்தனம் தெரிவித்தபடி, "இவள் என் வீட்டுக்காரரின் சகோதரி, சங்கரி!" என்று அங்கு வந்தவர்களுக்குச் சங்கரியை அறிமுகம் செய்து வைத்தாள்.

சங்கரி ராஜியின் முகத்தைப் பார்த்தாள். "இவர்கள் லேடிஸ் கிளப் மெம்பர்கள். என் பெஸ்ட் பிரண்ட்ஸ். என் நெருங்கிய தோழிகள்."

"லேடிஸ் கிளப்பா?"

"உனக்குத் தெரியாதா? இந்த ஊரில் பெண்களுக்காக ஒரு சங்கம் ஏற்பட்டு, ஆண்டு விழா கூடச் சில தினங்களுக்கு முன் நடந்ததே! நீ பத்திரிகையில் படிக்க வில்லையா? நான் அந்தச் சங்கத்தில் காரியதரிசி."

"ஓ, அப்படியா?" என்று சொல்லிச் சங்கரி ஆச்சரியப் பட்டாள்.

வந்திருந்த பெண்கள் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு, விடை பெற்றுக் கொண்டனர்.

அந்தக் காலத்தில் சிவராமன் என்றால் அவன் குடும்பத்தார்களுக்கே ஒரு பயம். ரொம்பக் கண்டிப்பான பேர்வழி. யாருக்கும் பயப்பட மாட்டான். இவன் இப்பொழுது இருக்கிற இடம் தெரியாமல், ராஜியின் கிழிஞ கோட்டைத் தாண்டாமல் இருப்பதைப் பார்க்க, சங்கரிக்கு அளவில்லாத ஆச்சரியமாக இருந்தது.

அந்த வீட்டில் ராஜி வைத்ததுதான் சட்டம். பணியாட்களும், பரிசாரகர்களும் 'அம்மா அம்மா' என்று குழைந்து குழைந்து பழகுவதைப் பார்த்து, சங்கரி பிரமை தட்டிப் போனாள்.

நாளடைவில் அவளையும் 'சின்ன அம்மாள்' என்று கூறி, வேலைக்காரர்கள் மரியாதை செய்யத் தலைப்பட்டார்கள்.

சில மாதங்கள் கழிந்தன. சங்கரி கனவுலகத்திலிருந்தாள். ராஜியின் பிரியத்துக்குப் பாத்திரமாகி, அவளுடன் குஷாலாகக் கிளப்பிற்கும் சினிமாவுக்கும் பாட்டுக் கச்சேரிக்கும் போனாள்.

கொஞ்சம் கொஞ்சமாகச் சங்கரியின் மனத்திரையினின்றும், அவள் கணவன் விலகிக் கொண்டே வந்தான். புருஷனாவது மண்ணாவது என்றுகூட நினைக்கத் தலைப்பட்டாள். அதிலே ஆச்சரியம் ஒன்றும் இல்லை. ராஜி அப்படி அவளைப் பழக்கிவிட்டாள். பெண்கள் சங்கத்திலே அவசரக் கூட்டம் ஒன்றுபோட்டு சங்கரிக்கு அவள் கணவன் இழைத்த தீமைகளை வன்மையாகக் கண்டித்து, தீர்மானங்கள் நிறைவேறச் செய்தாள்.

அவள் அன்பிலே வளர வளர, தான் அந்தக் காலத்தில் கணவனுடன் வாழ்ந்த அந்தக் கசப்பான வாழ்க்கை, சங்கரிக்கு அருவருப்பாக இருந்தது. கார்விடப் பழகிக் கொண்டாள்; ஆங்கிலமும் ஹிந்தியும் கற்றுக் கொண்டாள்.

சில சமயம், தங்கள் வீட்டுக்கு வருகிற ஆண்மக்களுடன், ராஜி சர்வசாதாரணமாய்ப் பேசிப் பழகுவதைப் பார்க்கிறபொழுது, சங்கரிக்குச் சற்று விரஸமாகத் தோன்றும்.

நாட்கள் செல்லச் செல்ல ராஜியைப் பற்றிய தவறான எண்ணம் விலகியதுடன், அவளும் அவர்களுடன் பழக ஆரம்பித்தாள்.

"என்ன ராஜி! சங்கரி என்ன சொல்லுகிறாள்?" என்று கேட்டான் சிவராமன் ஒரு நாள்.

"அவள் ஒன்றும் சொல்லவில்லை!" என்றாள் ராஜி.

"புருஷனைப் பற்றி ஏதாவது சொல்லுகிறாளோ" என்று கேட்டேன்.

"அந்தப் பெண் எத்தனையோ கஷ்டங்களுக்குப் பிறகு, நம் வீட்டிற்கு வந்திருக்கிறாள். இனிமேலும் அவள் கஷ்டப்பட வேண்டுமா? சிலருக்குத்தான் புருஷன் நல்லவனாக வாய்க்கிறான். அந்த பாக்கியம் உங்கள் சகோதரிக்கு இல்லை. அதனால் ஒன்றும் குடி முழுகிப் போய் விடவில்லை; எப்படியோ பிழைத்துக் கொள்ளுவாள்" என்றாள்.

அத்துடன் சங்கரியைப் பற்றிய பேச்சு நின்றது. ராஜிக்கு எத்தனையோ தோழிகள் எல்லா வருணத்திலும் இருந்தார்கள். அவர்களுள் ஒருத்தி ஐயம் என்பவள். அவள் தமையனுக்கு சர்க்கார் உத்தியோகம்; பெரிய பதவி. ராஜிக்கு ஐயம் என்றால் உயிர். ஐயத்தின் உண்மையான அன்பும், தூய்மையான

உள்ளமும் ராஜிக்கு மிகவும் பிடித்து விட்டது. அவர்கள் இருவரும் மனங்கலந்து பழகினார்கள். ஜயத்தின் சகோதரன் சந்திரசேகரன் ரொம்ப நல்ல மாதிரி. மனைவி இறந்து போய் மறுமணம் செய்து கொள்ளாமல் குழந்தைகளுடனும் சகோதரியுடனும் வசித்து வந்தார்.

ராஜியும் சங்கரியும் அவர்கள் வீட்டுக்குப் போகும்போதெல்லாம், அந்த மனிதர் அவர்களுடன் அன்பு கலந்து பேசுவார்.

நாளடைவில் அவருக்குச் சங்கரியிடம் சகோதரபாசம் ஏற்பட்டு வளரத் தொடங்கியது; அடிக்கடி அவர்கள் வீட்டுக்குப் போய் அவளுடன் பேச ஆரம்பித்தார்.

சங்கரிக்கு வேதனையாக இருந்தது. பெரிய பதவியில் இருப்பவர், அதுவும் மனைவியை இழந்தவர். தன்னுடன் அவ்வளவு சகஜமாகப் பழகுவது அவளுக்குப் பிடிக்கவில்லை.

அவர் சிரித்துச் சிரித்துப் பேசுவது விரஸமாக இருந்தது. ராஜியின் விஷயம் வேறு. கண் நிறைந்த கணவன் பக்கத்திலேயே இருக்கிறான். தனக்கு அப்படி இல்லையே! புருஷனை விட்டு வந்தவள் என்றுதானே உலகம் சொல்லும். தானும் ராஜி மாதிரி எல்லாருடனும் பழக முடியுமா?

பொழுது போனால், பொழுது விடிந்தால் லேடிஸ் கிளப்பையும், சினிமாவையும், பாட்டுக் கச்சேரியையும் பற்றின பேச்சுத்தான். நாலு பெண்கள் மத்தியிலே, அவள் யாரோ ஒரு அநாதை போலவேதான் இருந்தாள்.



முதல் பிரசங்கி :—நான் பிரசங்கம் பண்ணும்போது ஜனங்கள் மணியைப் பார்த்தால் எனக்கு மிகவும் கஷ்டமாயிருக்கும்!

இரண்டாவது பிரசங்கி :—மணியைப் பார்த்தால், எனக்கு அவ்வளவு கஷ்டமாக இராது. ஆனால் கடிகாரம் நின்று போய்விட்டதோ என்ற சந்தேகத்துடன் காதில் வைத்துப் பார்ப்பதுதான் எனக்கு ரொம்ப கஷ்டமாயிருக்கும்.

வர வர அவளுக்கு அந்த வாழ்க்கை வெறும் பகட்டாகவும், போலியாகவும் தென்பட்டது. கணவனைப் பற்றிய எண்ணம் தளிர்த்தது. அடியோ உதையோ அவனுடன் வாழ்வதுதான் வாழ்க்கை; மற்றவையெல்லாம் கானல் நீர் என்று உணர்ந்தாள்.

ஒரு நாள் காலை பத்து மணி இருக்கும். சிவராமன் ஆபீசுக்குப் போய் விட்டான். ராஜி வழக்கம் போல் அன்றும் வெளியே கிளம்ப நினைத்துச் சங்கரியைத் தன்னுடன் வருமாறு அழைத்தாள். ஏனோ அவள் வருவதற்கு இசையவில்லை. ராஜி மட்டும் போனாள்.

மாடி வராந்தாவில் நின்று கொண்டு எதையோ பார்த்துக் கொண்டிருந்தாள் சங்கரி. 'ஸார், ஸார்' என்று கூப்பிடுவது கேட்டு வேகமாகக் கீழே வந்து கதவைத் திறந்தாள்.

என்ன ஆச்சரியம், அவள் கணவன் ஜயராமன் வாடி வதங்கி நின்று கொண்டு "நீ மாத்திரந்தான் இருக்கிறாயா? உள்ளே இன்னும் யார் இருக்கிறார்கள்?" என்று கேட்டான்.

"யாரும் இல்லை. உள்ளே வாருங்கள்."

"நான் வருவதற்கில்லை. நீ உன் அண்ணன் வீட்டில் சௌக்கியமாக இருப்பதை அறிய மிகவும் மகிழ்கிறேன். என் சொத்தில் பங்குபெற, வழக்குத் தொடர இருப்பதாய் அறிகிறேன். வழக்கு வேண்டுவதில்லை. உனக்குரிய சொத்தை நானே கொடுத்து விடுகிறேன். இரண்டொரு தினங்களில் பத்திரம் முதலியவை ரிஜிஸ்தராகிவிடும். நான் சொன்னதாக உன் அண்ணனிடம் சொல். நான் வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டே திரும்பினான்.

"எங்கே போகிறீர்கள்! சற்று நில்லுங்கள்! நானும் உங்களுடன் வருகிறேன்."

"வருகிறாயா! என்னுடனா? எதற்கு?"

"நான் உங்கள் மனைவி. புத்தி தவறிப் போய் வந்து விட்டேன். அடித்தாலும் வைதாலும் நான் உங்களுடன்தான் இருப்பேன். என்னை மன்னித்து ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே 'தொப்'பென்று விழுந்து விட்டாள்.

★

சில தினங்களுக்குப் பிறகு சென்னை திருவல்லிக்கேணி கடற்கரை ஓரமாக ஊதா நிறமுள்ள ஒரு சிறிய மோட்டார் காரை, வலது கையில் நெருப்புச் சுட்ட தழும்புடன் ஒரு யுவதி ஓட்டுவதைப் பார்த்தவர்கள், அவள் சங்கரி என்பதையும், பக்கத்தில் மலர்ந்த முகத்துடன் வீற்றிருக்கும் அந்த இளைஞன், அவள் கணவன் ஜயராமன் என்பதையும் அறிவார்கள்.

அதே சமயத்தில், வேறொரு இடத்தில் லேடீஸ் கிளப் ஒன்றில், பெண்கள் திடசித்தம் உடையவர்களாக இருக்க வேண்டிய அவசியத்தைப் பற்றித் தீர்மானம் ஒன்று நிறைவேறியது.



"நெடுநாட்களாக மிகுந்த முதுகு வலியினால் அவஸ்தைப்பட்டேன். சில நிமிஷங்களே உட்கார்ந்திருந்தபோதிலும், மறுபடி எழுந்து நிற்பதே மிகவும் சிரமமாயிருந்தது. "க்ருஷன்" உபயோகித்துக் குணம் அடையும் வரை, உபயோகித்த வேறு மருந்துகள் ஒன்றிலும் குணம் கிடைக்கவில்லை. எனது ஆரோக்யத்துக்கு ஏற்ற சாதனம் பெற்று இப்பொழுது நான் முற்றிலும் ஒரு புதிய ஸ்திரீயாகிவிட்டது பற்றி சந்தோஷமும் நன்றியறிதலுமுள்ளவளாயிருக்கிறேன்." —E. J. B.

இடைவிடாத முதுகு வலிக்கு ஒரு பொதுக் காரணம்—மூத்திரக் காய்கள் உடலிலுள்ள அசுத்தத்தை வெளியேற்றுமைதான். இவ்வாறு தொல்லையுறும்பொழுது "க்ருஷன்" உட்கொள்ளுங்கள். களைத்துப்போன மூத்திரக் காய்கள் அவைகளுக்கு வேண்டிய உதவியை அதனால் பெறுகின்றன. அவை கழிவு பதார்த்தங்களை ஒழுங்காகவும் இயற்கையாகவும் வெளியேற்றும்பொழுது வலியும் கூடவே வெளியேறி விடுகிறது. தினந்தோறும் உட்கொள்ளும் ஒரு சிறு அளவு க்ருஷன் உங்களது வலிகள் திரும்பவும் வராதென்பதை உறுதிப் படுத்துகின்றது.

"க்ருஷன்" உங்களை ஆரோக்யத்துடனும் சந்தோஷத்துடனும் இருக்க உதவுகிறது

KSM: 3



அழகி யார்?

வி.எஸ்.ஆர்

தெருக் கோடியைத் தாண்டியதுமே ரங்கநாதன் தன்னை நோக்கி ஓடிவரும் குழந்தை ராதையைப் பார்த்து விட்டான். "அப்பா, அப்பா! எனக்கு என்ன வாங்கிக் கொண்டு வந்திருக்கிறாய்?" என்று மழலை மொழியில் கேட்டாள் ராதை, அவன் கையிலுள்ள பெட்டியைப் பார்த்த வண்ணம். தன் நான்கு வயதுக் குழந்தை ராதையைக் குனிந்து எடுத்துத் தோளில் தூக்கிக்கொண்டான் ரங்கநாதன். "இந்தப் பெட்டியிலுள்ளது எல்லாம் உனக்குத்தான்!" என்று கூறிக் குழந்தையை முத்தமிட்டு விட்டு வீட்டுக்குள் சென்றான்.

"ரங்கா! வந்து விட்டாயா? 'அப்பாவைக் கொண்டு வா' என்று நேற்றிலிருந்து ராதை அழ ஆரம்பித்து விட்டாள். எவ்வளவு சமாதானம் சொல்லியும் கேட்கவில்லை. வர வர ராதை படுத்துகிற பாடு பொறுக்க முடியவில்லை" என்றாள் ரங்கநாதனின் தாயார் சேஷம்மாள்.

"ராதை! நீ சமர்த்தோ? அசடோ?" என்று கேட்டவாறு குழந்தையை இறக்கிக் கீழே விட்டு, ஊஞ்சலில் உட்கார்ந்து தான் கொண்டு வந்திருந்த தோல் பெட்டியைத் திறந்தான் ரங்கநாதன்.

"நான் சமர்த்து. பாட்டிதான் அசடு!" என்று ராதை தன் மழலை மொழியில் கூறி விட்டு, பாட்டி பக்கம் தன் சின்னஞ் சிறு விரல்களை நீட்டினாள்.

"ராதாக் கண்ணு மகாப் பொல்லாதவள்!" என்று கூறி சேஷம்மாள் அவள் நெற்றியைத் தொட்டு நெட்டி முறித்தாள். ரங்கநாதன் தான் கொண்டு வந்திருந்த 'ஸ்பிரிங்' மோட்டாருக்குச் சாவி கொடுத்துக் கீழே விட்டதும் ராதை குதூகலம் தாங்காமல் குதியாய்க் குதித்தாள். ரங்கநாதன் மகிழ்ச்சியின் உருவான தன் குழந்தையைப் பார்த்தான். அவன் முகத்தில் உணர்ச்சி ததும்பியது. சேஷம்மாளோ தன் மகனுடைய முகத்தைப் பார்த்தாள். அவன் முகத்திலுள்ள ஏக்கத்தைக் கவனிக்காமலிருப்பாளா? 'பாவம், ஜானகி இருந்தால் இந்தக் குடும்பம் எவ்வளவு ஆனந்தமாக இருந்திருக்கும்!' என்று அவளால் நினைத்துப் பார்க்காமலிருக்க முடியவில்லை.

ஜானகி இறந்து மூன்று வருஷங்கள் ஆகி விட்டன. சின்னஞ் சிறு கைக் குழந்தையான ராதையை விட்டு விட்டு, குறைப் பிரசவத்தில் அவள் உயிரை விட்டாள். மனைவியை இழந்த ரங்கநாதனுக்கு உலகமே அஸ்தமித்து விட்டதுபோலிருந்தது. இன்பக் கனவு போல் கழிந்த மூன்று வருஷ மணவாழ்க்கையின் ஒவ்வொரு கணத்தையும் அவன் எப்படி மறக்க முடியும்?

பத்திரிகைகளுக்குச் சித்திரங்கள் எழுதுவது ரங்கநாதன் வேலை. சித்திர உலகில் ரங்கநாதனுக்குப் பெரும் மதிப்பு இருந்து வந்தது. ஜானகி காலமாகி வெகுகாலம் வரையில் அவன் சித்திரம் எழுதாமலே இருந்து வந்தான். அதற்குப் பிறகு நண்பர்கள் வற்புறுத்தலின் பேரில் சித்திரங்கள் எழுதும்படி நேரிட்டது. அவன் எழுதிய சித்திரங்களில் சோகம் ததும்பியது. அவன் எழுதிய பாத்திரங்களின் முகத்தில் துன்பந்தான் குடிகொண்டிருந்தது. ரங்கநாதன் தன்னந் தனியே உட்கார்ந்து ஜானகியின் படத்தையே அடிக்கடி எழுதிக் கொண்டிருந்ததைப் பார்த்து, சேஷம்மாள் பெருமூச்செறிந்தாள். 'என்றைக்குத்தான் ஜானகியை மறக்கப் போகிறானோ!' என்று எண்ணி மனம் வருந்தினாள்.

இருளடர்ந்த அவன் மனத்தில் இன்பச் சுடரானாள் ராதை. தாயாரை அப்படியே உரித்து வைத்திருந்த ராதையின் ஆனந்தமே ரங்கநாதனின் வாழ்க்கை லட்சியம் ஆயிற்று. தாயை இழந்த ராதைக்கு ஒரு குறையும் இருக்கக்கூடாது என்று ரங்கநாதன் நினைத்

தது இயல்பேயல்லவா? வயது முதிர்ந்த தள்ளாத சேஷம்மாளால் ராதையைச் சரி வரக் கவனித்துக் கொள்ள முடியுமா? ஆகவே, ரங்கநாதனே குழந்தைக்கு வேண்டிய சௌகரியங்களைக் கவனித்துக் கொண்டான். ஆயினும் அவன் ராதையின் உடம்பு வரவர இளைத்து வருவதாகக் கற்பனை செய்து கொண்டு மனக்கஷ்டப் படுவான். 'அடடா! ஜானகி இருந்தால் குழந்தையின் உடம்பு இளைக்குமா' என்று அவனால் எண்ணாம லிருக்க முடியவில்லை.

எப்பொழுதாவது ரங்கநாதன் வெளியூர் போகவேண்டிய அவசியம் ஏற்படும். அந்தச் சமயங்களில் அவன் ராதையை விட்டுப் பிரிய நேரிடும். "எப்பொழுது ஊருக்குத் திரும்பி வந்து குழந்தையைக் காணப் போகிறோம்?" என்று அவன் உள்ளம் துடிக்கும். "ஜானகி யிருந்தால் இவ்வளவு தவிப்புத் தவிக்க வேண்டி யிராதல்லவா?" என்று அவனால் எண்ணாமலிருக்க முடியவில்லை.

* * *

ஒரு நாள் ரங்கநாதன் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது, "ராதா!" என்று கூப்பிட்டுக் கொண்டே வந்தான். முகத்தில் புன்னகை தவழத் தலை கவிழ்ந்து, வெட்கம் மேலிட, தயங்கித் தயங்கி நடந்துவந்த ராதையைப் பார்த்து அதிசயித்தான் ரங்கநாதன். அவன் ஆச்சரியத்துக்குக் காரணம் அவள் செய்து கொண்டிருந்த அலங்காரம்தான். பார்ஸி உடையில் காட்சி யளித்தாள் ராதை!

"பலே ஜோர்! பிரமாதம்! இப்படி உனக்கு 'டிரஸ்' பண்ணிவிட்டது



ரங்கநாதனுக்கு ஒன்றும் புரியவில்லை. வேகமாகத் தாயாரிடம் சென்று "அம்மா! ராதைக்குப் பார்ஸி வேஷம் போட்டது யார்?" என்றான்.

"அதை ஏன் கேட்கிறாய்? அடுத்த வீட்டுக்குப் புதிதாக யாரோ குடித்தனம் வந்திருக்கிறார்கள். அவர்கள் வீட்டில் நிர்மலா என்று ஒரு பெண் இருக்கிறாள்! அவளை எப்படியோ சிநேகம் பிடித்துக் கொண்டு விட்டாள் ராதை. நீ எங்கேயாவது வெளியில் போக வேண்டியதுதான் தாமதம், உடனே ராதைக்கும் அடுத்த வீடு 'காம்ப்'. இப்பொழுதெல்லாம் ராதை என்னை லட்சியம் செய்வதே இல்லை!" என்றாள் சேஷம்மாள். ராதையும் ஓடிப்போய்ப் பாட்டியின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

இந்தச் சம்பவம் நடந்த பிறகு, பிரதிதினமும் விதம் விதமான அலங்காரத்துடன் குழந்தை ராதை அவன்முன் காட்சியளித்தாள். ஒரு நாள் பார்ஸி உடை, மறுநாள் ஜிப்ஸி டிரஸ், அதற்கு அடுத்த நாள் வங்காளி பாஷன்—இப்படி ராதை காட்சி யளித்தாள்.

"அடடா! ராதை, அலங்காரம் எவ்வளவு ஜோராக இருக்கிறது! இப்படியெல்லாம்

'டிரஸ்' செய்துவிடக் குறைந்தது இரண்டு மணி நேரமாவது ஆகுமே?'' என்றான் ரங்கநாதன் ஆச்சரியத்துடன்.

"ஆமாம், ரங்கா! நாலரை மணிக்கு ராதை பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததுமே நிர்மலா வந்து அழைத்துக்கொண்டுபோய் விடுகிறாள்! அவனுக்கு வீட்டில் பொழுதே போகவில்லை போலிருக்கிறது. போன வருஷம்தான் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை பாஸ் செய்தாளாம். நீ வெளியூருக்குப் போயிருந்தபோது, அந்தப் பெண் நிர்மலா ராதைக்கு எவ்வளவு பாடங்கள் சொல்லிக் கொடுத்தாள் தெரியுமா?'' என்றாள் சேஷம்மாள்.

அன்று காலை ரங்கநாதன் மேஜையிலிருந்து ஒரு கடுதாசி காற்றில் பறந்து வந்தது. அதை மேஜைமீது எடுத்து வைக்கப்போன சேஷம்மாள் அதைத் தற்செயலாகப் பார்த்தாள். அது அவன் ஓயாமல் வரைந்து கொண்டிருக்கும் ஜானகியின் சித்திரங்களில் ஒன்றாகத்தானிருக்கும் என்று நினைத்தாள். அது ஜானகியின் சித்திரமல்ல. பார்ஸி, ஜிப்ஸி, வங்காளி உடைகளில் காட்சியளித்த ராதையின் படம்தான்! "இது நல்ல மாறுதல் தான்!'' என்று ஆறுதல் அடைந்தாள் சேஷம்மாள்.

ஒருநாள் மாலை, அயர்வுடன் படுத்திருந்தான் ரங்கநாதன். பக்கத்து வீட்டிலிருந்து பாட்டுச் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து இழைந்த குரலில் உணர்ச்சி ததும்பும் கீதம் கேட்டது. சட்டென்று எழுந்து உட்கார்ந்துகொண்டான் ரங்கநாதன். அது அவனுக்கு ரொம்பவும் பிடித்த பாட்டு. ஜானகி அதைத்தான் அடிக்கடி பாடுவாள்.



வந்தவர் :—எஜமான் வீட்டில் இல்லையா? நிச்சயமாக உனக்குத் தெரியுமா?

வேலைக்காரன் :—நிச்சயமாகத் தானுங்க சொல்லுகிறேன். அவர் வார்த்தையிலே உங்களுக்கு நம்பிக்கை இல்லையா? அவர்தானே இப்பொழுது சொல்லச் சொன்னாரு!

அடுத்த வீட்டிலிருந்து வந்த அந்தக் கீதம் அவன் உள்ளத்தை என்னவோ செய்தது.

"அம்மா! இந்தப் பாட்டு எவ்வளவு ஆனந்தமாயிருக்கிறது, கேட்டாயா?'' என்றான் தாயாரிடம்.

"அடுத்த வீட்டு நிர்மலாதான் பாடுகிறாள்!'' என்றாள் சேஷம்மாள்.

நிர்மலாவைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் கொஞ்சம் கொஞ்சமாக அவன் மனசில் தலை தூக்கியது. ராதையின் தினசரி அலங்காரங்கள், அடுத்த வீட்டிலிருந்து வந்த கானம், அவன் சாப்பிட்ட அடுத்த வீட்டுப் பலகாரம் எல்லாம் அவன் கற்பனையைத் தூண்டி விட்டன. ராதை தினம் நூறு தடவை நிர்மலா மாமியைப் பற்றிச் சொன்னாள். தாயாரோ நிர்மலாவைப் பற்றிப் பிரமாதமாக வர்ணித்தாள். இதிலிருந்து ரங்கநாதன் நிர்மலாவைப் பற்றி ஒரு கற்பனை உருவத்தை மனசுக்குள் உண்டாக்கிக் கொண்டான்.

ஒரு நாள் முன்னிரவு நேரத்தில் வாசலில் மேளச்சத்தம் கேட்டது. "அப்பா, சுவாமி வருகிறது வா, பார்க்கலாம்!'' என்று ராதை கூப்பிடவே வாசற்பக்கம் போனான். சுவாமி தூரத்தில் வந்து கொண்டிருந்தது. ரங்கநாதன் வாசலுக்கு வந்ததும், "மாமி!'' என்று கூப்பிட்டுக் கொண்டே, அவன் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு ராதை ஓடினாள். பக்கத்து வீட்டு வாசலில் நின்ற பெண்ணை நோக்கிக் கையை உயரத் தூக்கியவாறு ஓடினாள். அந்தப் பெண்ணும் "அடி ராதாக் கண்ணு!'' என்று கொஞ்சியவாறு ராதையைத் தூக்கிக் கொண்டாள். மின்சார தீபவொளியில் தந்தப் பதுமை போல் காட்சியளித்த அந்தப் பெண் அவன் பக்கம் பார்த்தாள். இருவரது கண்களும் சந்தித்தன.

அந்தப் பெண்ணுக்கு வயது பதினாறு இருக்கும்; கோவிலில் உள்ள சிலைதான் அங்கே இடம் பெயர்ந்து வந்ததோ என்று எண்ணும்படி அவள் முகத்தோற்றம் அமைந்திருந்தது. அவள் இருக்கும் இடத்தில் பேச்சும் சிரிப்பும் கொம்மாளமும்தான் என்பதை ஒரு நொடிக்குள் தெரிந்து கொண்டான் ரங்கநாதன்.

ரங்கநாதன் சுவாமியைப் பார்ப்பது போல் பாசாங்கு செய்த போதிலும் அந்தப் பெண்ணைப் பார்த்துக் கொண்டேதான் கன்னத்தில் போட்டுக் கொண்டான். நல்ல வேளையாக அந்தப் பெண் அந்தச் சமயம் அவனைப் பார்க்கவில்லை.

அடுத்த வீட்டு வாசலில் நின்ற பெண்தான் நிர்மலா என்பதைப் பற்றி ரங்கநாதன் சிறிதும் சந்தேகப்படவில்லை. இவ்வளவு அழகான, அற்புதமான பெண்ணைப் பற்றி அம்மா பிரமாதமாக வர்ணித்ததிலும், இவளிடம் ராதை பிரியமாக இருப்பதிலும் என்ன ஆச்சரியம்? நிர்மலாவைப் பற்றிக் கேட்கக் கேட்க முன்பு "கல்யாணமே வேண்டாம்!'' என்று அவன் கொண்டிருந்த பிடிவாதக் கோட்டையில் சற்றே பிளவு கண்டது. இப்

பொழுது அவளை நேரில் பார்த்ததும் அவன் பிடிவாதக் கோட்டை தவிடு பொடியாயிற்று. நிர்மலாவைப் பற்றிக் குழந்தை கூறும்போதெல்லாம் அதன் குதூகலத்தைப் பார்க்கப் பார்க்க, 'ஜானகியின் இடத்தில் நிர்மலா ஏன் இருக்கக் கூடாது?' என்று தோன்றியது.

அன்று ரங்கநாதன் எங்கோ வெளியில் சென்றிருந்தான். அவன் மேஜைமீதிருந்த சில சித்திரங்களைச் சேஷம்மாள் பார்த்து விட்டாள். அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அந்தத் திகைப்புக்குக் காரணம் ரங்கநாதன் மீண்டும் ஜானகியின் படத்தை எழுத ஆரம்பித்திருந்தது அல்ல. அவன் எழுதியிருந்தது அடுத்த வீட்டு விமலா படத்தை! சேஷம்மாள் முகத்தில் ஏமாற்றமும் குழப்பமும் குடிகொண்டன.

விமலா என்பவள் அடுத்த வீட்டு நிர்மலாவின் ஒன்றுவிட்ட தங்கை. சில தினங்களுக்கு முன் அந்த ஊருக்கு வந்திருந்தாள். அவள்தான் நிர்மலா என்று தவறாக ரங்கநாதன் நினைத்து விட்டதைச் சேஷம்மாள் உடனே ஊகித்துக் கொண்டாள்.

விமலா நல்ல அழகி. நிர்மலாவைவிட அழகிதான். அவளைப் பார்த்து ரங்கநாதன் மயங்கியதில் ஆச்சரியமில்லை. நிர்மலாவை அதுவரை பார்த்திராத ரங்கநாதன் அவளே நிர்மலா என்று நினைத்ததிலும் ஆச்சரியமில்லை. நிர்மலாவை முதன் முதலில் பார்த்ததுமே சேஷம்மாளுக்கும் பிடித்துவிட்டது. அவளது அடக்கம், அன்பு, பாட்டு எல்லாவற்றையும் வியந்தாள். ஆகவே அவளை மருமகளாகக் கொள்ள ஆசைப்பட்டாள்.

இப்பொழுது இந்தத் தர்ம சங்கடத்துக்கு என்ன செய்கிறது? இதுகாறும் அவனது உணர்வில் தோன்றி அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட நிர்மலா வேறு; உருவத்தின் மூலம் அவன் கருத்தைக் கவர்ந்த விமலா வேறு என்பதை, எப்படிச்சொல்வது?

மறுநாள் ரங்கநாதன் வெளியிலிருந்து வீட்டுக்கு வந்ததும் வீடு பூட்டப் பட்டிருப்பதைப் பார்த்தான். "அம்மா எங்கே போயிருப்பாள்? பக்கத்து வீட்டில் ஒரு வேளை சாவியைக் கொடுத்திருந்தாலும் கொடுத்திருக்கலாம்?" என்று அங்கு சென்றான். உள்ளேயிருந்து வந்த பாட்டைக் கேட்டுவிட்டு நின்றான். பாடிக் கொண்டிருந்த நிர்மலா அவனைப் பார்த்துச் சட்டென்று எழுந்தாள். "நீதான் நிர்மலாவா?" என்று குழப்பத்துடன் கேட்டான் ரங்கநாதன். "ஆமாம். நீங்கள் நேற்றுப் பார்த்தது என் தங்கை விமலாவை" என்றாள் நிர்மலா. ரங்கநாதன் விழித்தது விழித்தபடியே நின்று விட்டான்.

வீட்டுக்கு வந்த ரங்கநாதன் தாயாரைப் பார்த்து, "அம்மா! அடுத்த வீட்டுப் பெண் ஜாதகத்தை வாங்கிக்கொண்டு வருகிறாயா?" என்று கேட்டான். சேஷம்மாள் குழப்பத்துடன் "யார்? விமலாவின் ஜாதகத்தைத் தானே சொல்கிறாய்?" என்றாள்.

"இல்லை, நிர்மலாவின் ஜாதகத்தைத்தான் அம்மா சொல்கிறேன்!" என்று ரங்கநாதன் கூறியதும் சேஷம்மாளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"விமலாவைத்தான் கல்யாணம் செய்து கொள்ள ஆசைப்படுகிறாயென்றல்லவா நினைத்தேன்!" என்றாள் சேஷம்மாள்.

"சே, சே! ஒருநாளும் இல்லை. நான் நிர்மலாவைத்தான் கல்யாணம் செய்து கொள்ள நினைக்கிறேன்" என்றான் ரங்கநாதன்.

"விமலா படத்தை அன்று கடிதாசியில் நீ எழுதவில்லையா?" என்றாள் சேஷம்மாள்.

"ஆமாம். நிர்மலா என்று நினைத்துக் கொண்டு பார்த்ததினால்தான் விமலா எனக்கு அழகியாகத் தோன்றினாள். ஆனால் நிர்மலாவைப் பார்த்த பிறகு விமலா எம்மாத்திரம்? அழகு என்பது என்ன அம்மா? ஒருவர் முகம், மூக்கு, கண், காது எவ்வளவு அமைப்பாக இருக்கிறது என்பதுதானா? நாம் என்ன மனசோடு அவரைப் பார்க்கிறோம் என்பதுதான் முக்கியம். ஒரு உருவம் ஒருவர் கண்ணுக்கு அழகாகப் படுவதும் இன்னொருவர் கண்ணுக்கு அவலட்சணமாகப் படுவதற்கும் இதுதானே காரணம்?" என்றான் ரங்கநாதன்.

"அழகைப் பற்றி எனக்கு என்ன தெரியும்!" என்று சேஷம்மாள் சொன்னாளே தவிர அவள் உள்ளத்தில் என்னவோ ஆனந்தம் பொங்கித் ததும்பியது.



321. முந்தினேன் உனை!

பத்துத் தலைகளைச் செழுக்கிச் சித்திரித்த கிரீடம் பயத்தை உண்டு பண்ணும்தான்.

ஒவ்வொரு தலையுமே பயமுறுத்துவது போலத் தோன்றும். ஆனால் இப்போது கிரீடத்திலுள்ள அந்தத் தலைகள் வேறு விதமாகத் தோற்றம் அளிக்கின்றன. தோற்றம் அளிப்பதெல்லாம் பார்ப்பவர்கள் உள்ளத்தில் நிகழும் உணர்ச்சி வழியாகத்தான்.

ராவணனுடைய துயரத்தோடு கலந்து ஒன்றாய் விடுகிறது பார்ப்பவர்கள் உள்ளம். இது மனுஷ சுபாவம்.

∴

எதிர்பாராதபடி இந்திரஜித்து இறந்து பட்டான் என்ற காரணமாக ராவணனது மனசில் பலதிறப்பட்ட உணர்ச்சிகள் வந்து சுற்றிச் சூழ்கின்றன:

> இருகு வெஞ்சினத்
> தீநிகர் சீற்றமும்
> பெருகு காதலும்
> துன்பும் பிறழ்ந்திட
> இருப தென்னும்
> எரிபுரை கண்களும்
> உருகு செம்பென
> ஓடிய(து) ஊற்றும்நீர்

[இருகு வெஞ்சினத் தீ: கோபத்தோடுதான் கூடச் சேர்ந்து விட்டுச் சூழ்கிறதோ இந்தத் தீ என்று சொல்லும்படியான பெரும் நெருப்பை; நிகர் சீற்றமும்: ஒத்த கோபமும்; பெருகு காதலும்: அடக்க முடியாத பாசமும்; துன்பும் பிறழ்ந்திட: அதோடு மனத் துன்பமும் ஒன்றோடொன்று பின்னிச் சுழல; இருபதென்னும் எரிபுரை கண்களும்: அக்கினி போல் சிவந்து காட்டும் இருபது கண்களிலுமே; உருகு செம்பென ஓடியது ஊற்றும் நீர்: காய்ச்சிய செம்பு உருகி ஓடியது போலக் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியதாகத் தோன்றியது.

குறிப்பு: எல்லாம் சோக வெறி மயம். ராவணனைப் பார்க்கும் போது அறிவு பேதலித்து இல்லாத காட்சிகளை எல்லாம் காண்கிறது பார்த்துக் கொண்டிருந்தவரது கண்கள்.]

∴

அறிவு மயங்கியவனாய்த் தானே அப்படியும் இப்படியுமாக விழுகிறான்.

சிறிது நேரங் கழித்து உணர்ச்சி வருகிறது. அலறுகிறான்.

> மைந்த வோஎனும்;
> மாமக னேஎனும்;
> எந்தை, ஓ! எனும்;
> என்உயி ரேஎனும்;
> முந்தி னேன்உனை,
> யான்உன னேஎனும்,
> வெந்த புண்ணிடை
> வேல்பட்ட வெம்மையான்.

[முந்தினேன் உனை: உனக்கு முன்னாலேயே நான் வந்து விடுகிறேன் அமரலோகத்துக்கு; யான் உளனோ எனும்: ஓகோ! நான் உயிரோடல்லவா இருக்கிறேன் என்று புலம்புகிறான்.]


அபூர்வமான சோக பாவம் நிறைந்துள்ள செய்யுள்.

அந்த வயிற்று வலியை இப்போதே குணப்படுத்திக் கொள்ளுங்கள்!

அலக்ஷியப்படுத்தப் பட்ட அஜீரணம் ஆபத்தை உண்டாக்கும்.

உங்களுக்குப் பிடித்தமானதைச் சாப்பிட முடியாதபடி அஜீரணம் உங்களுக்கு ஏற்படுகிறது என்றால் நீங்கள் பாதி உயிருடன்தான் வாழுகிறீர்கள் என்று அர்த்தம். மக்ளீன் பிராண்ட் ஸ்டமக் பவுடர் உங்களுக்கு உதவியளிக்குமாக: அது உலகம் முழுவதிலுமுள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கு உதவியளித்திருக்கிறது.

அஜீரணத்தினால் உண்டாகும் நோவை சில நிமிஷங்களுக்குள்ளாகவே ஒரே டோஸ் மருந்து குணப்படுத்தும். அஜீரணத்துக்குள்ளான தேக நிலையைச் சரிப்படுத்தி உதவுவதற்கு மருந்து ஒரு தவணைக்கு உட்கொள்ள வேண்டும். அலக்ஷியப்படுத்தப்பட்ட அஜீரணம் ஆபத்தானது: ஞாபகமிருக்கட்டும். இன்றைய அசௌகரியம் நாளைய நோயாகமாறி இறுதியில் ஆபத்தானதும் குணப்படுத்த இயலாததுமான தேக நிலையை உண்டாக்கிவிடும். மக்ளீன் பிராண்ட் ஸடமக் பவுடரிடம் நம்பிக்கை வைத்து உட்கொண்டு ருசிகரமான பண்டங்களை மீண்டும் சாப்பிட்டு மகிழுங்கள். உங்களுக்கு இஷ்டமானபடி விதவிதமாகச் சாப்பிடலாம். அப்போதுதான் வாழ்க்கை வாழக் கூடியதாக இருக்கும்.



ஞாபகமிருக்கட்டும். மக்ளீன் பிராண்ட் ஸ்டமக் பவுடர் உலகப்பிரசித்தி பெற்றது. எனவே அநேகம் பேர் அதைக் காப்பியடிக்கப் பார்க்கிறார்கள். "அலெக்ஸ் ஸி.மக்ளீன்" என்கிற கையொப்பம் இருக்கிறதா என்று பார்த்து உண்மையான சரக்கையே வாங்குங்கள்.

மக்ளீன் பிராண்ட் ஸ்டமக் பவுடர்


வியாபார விவரங்களுக்கு:

ஜே. எல். மார்லன். ஸன் & ஜோன்ஸ் (இந்தியா) லிமிடெட்

தபால் பெட்டி 6527, பம்பாய் 26; தபால் பெட்டி 387, கல்கத்தா

தபால் பெட்டி 1370, மதராஸ்

MSY I TAM



கண்ணன், ரொம்பவும் சுட்டிகையான பையன். எப்பவும் துரு துரு என்றிருப்பான். அவன் செய்யும் விஷமமோ சொல்லி முடியாது. சனி, ஞாயிறு என்று வந்து விட்டால், அவன் அம்மாவுக்கு ஒரே பயம்தான்.

எந்தக் கண்ணாடிப் பாத்திரத்தின் தலையில், அற்பாயுசு என்று எழுதியிருக்கிறதோ? எந்த கிராமபோன் பிளேட் அகால மரணம் அடையப் போகிறதோ? எந்த டாக்டருக்கு வார பலனில், "சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் வரும்படி" என்று எழுதியிருக்கிறதோ? கண்ணன் எந்தக் காலை முறித்துக் கொள்வானோ? எந்தக் கையை ஒடித்துக் கொள்வானோ—என்று அவன் அம்மா ஒரே அடியாகக் கவலைப் பட்டுத் தவிப்பாள். இருந்தாலும் கண்ணன் புத்திசாலி!

காய்கறிக் கடைக்குக் கண்ணன் போனால், அவனை யாரும் ஏமாற்றிவிட முடியாது. அவன் அப்பா, காய்கறிக் கடைக்குப் போய், கத்திரிக்காய் வாங்கி வருவார். அரை வீசை வாங்கி வந்திருப்பதாகச் சொல்வார். ஆனால் பதினைந்து பலம் தான் இருக்கும். கண்ணன் போனால் அப்படி ஒருநாளும் ஏமாந்து போக மாட்டான். ஏன், அவனே கறிகாய்க் கடைக்காரியிடமிருந்து தராசு வாங்கி நிறுத்தானானால் கறிகாய்க்காரி அலறிப்போய் விடுவாள். ஆமாம், ஒரு வீசை கத்திரிக்காயைத் தட்டில் வைத்து எப்படியோ அரை வீசைதான் இருப்பதாக நிறுத்துக் காட்டுவாள். ஆனால் அவனை ஒருநாளும் ஏமாற்றி வாங்கி வரமாட்டான். சரியாக அரை வீசை என்றால் அரை வீசை வாங்கி வருவான்! தானும் ஒரு நாளும் ஏமாற மாட்டான்!

அவன் வேஷ்டி சட்டைகள் எப்போதும் தும்பைப் பூவைப் போல இருக்கும். ஏனெனில் தன் வேஷ்டி சட்டைகளுக்குத் தானே சோப்புப் போட்டுத் தோய்த்துக் கொள்வான்.

விளையாட்டிலும் அவன்தான் எப்போதும் முதல் ஸ்தானம் வகிப்பான். அவன் படிக்கும் பள்ளிக்கூடத்துக் கிரிக்கெட் கோஷ்டிக்கு அவன்தான் 'காப்டன்'. கால் பந்து கோஷ்டியில், மிக மிக முக்கியமானவன்.



இவ்வளவு இருந்தும் அவன் சாமர்த்தியத்துக்கு அடங்காமல் இருந்தது இந்தப் பள்ளிக்கூடப் படிப்புதான். அவனால் பரீக்ஷையில் நல்ல மார்க்கே வாங்க முடிவதில்லை! இதற்குக் காரணம் கண்ணனுடைய சிரத்தை படிப்பில் போதாது என்பதுதான் அவன் வீட்டுப் பெரியோர்களின் அபிப்பிராயம்!

ஆகவே, அவன் வீட்டிலிருந்த மாமி அவனுக்குப் படிப்பில் நல்ல சிரத்தை உண்டாகும்படி செய்ய வேண்டும் என்று கருதினாள். ஒரு நாள் கண்ணனைக் கூப்பிட்டாள். "கண்ணா, நீ இந்த அரை வருஷப் பரீட்சையில் நூறு மார்க்கு வாங்கினால் உனக்கு ஒரு பேனாவைப் பரிசாகத் தருவேன். என்ன சொல்கிறாய்?" என்றாள்.

"இது என்ன மாமி, பிரமாதம்!" என்றான் கண்ணன்.

ஆம், கண்ணன்தான் எப்பொழுதுமே தன்னால் ஒரு காரியம் ஆகாது என்று சொல்ல மாட்டானே!

மாமி அவனுடைய நெஞ்சுத் துணிவைக் கண்டு அப்படியே அயர்ந்து போய் விட்டாள்.

*　　　*　　　*

அரை வருஷப் பரீட்சை வந்தது. பரீட்சைக்குப் பிறகு கிறிஸ்துமஸ் விடுமுறையும் வந்தது. கிறிஸ்துமஸ் விடுமுறையில் கவலையின்றிக் கண்ணன் விளையாடினான். விடுமுறை முடிந்து பள்ளிக்கூடமும் திறந்தார்கள். கண்ணன் பள்ளிக்கூடத்துக்குப் போனான். அவன் மனசு திக்திக் என்று அடித்துக் கொண்டது — என்ன மார்க்கு வந்திருக்கப் போகிறதோ என்று.

போகும்போது எவ்வளவு சோர்வுடன் போனானோ அவ்வளவுக்கவ்வளவு உற்சாகத்துடன் திரும்பி வந்தான் கண்ணன் பள்ளிக்கூடத்திலிருந்து. இதைப் பார்த்த மாமி, "என்ன கண்ணா, இன்றைக்கு என்ன விசேஷம்? ஏன் இவ்வளவு சந்தோஷமாக இருக்கிறாய்? காரணம் என்ன?" என்று கேட்டாள்.

"மாமி, நீ ஒன்று சொன்னாயே ஞாபகமிருக்கிறதா?" என்று திருப்பிக் கேட்டான்.

"எதைச் சொல்லுகிறாய் கண்ணா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் மாமி.

"அதுதான், மாமி, நூறு மார்க்கு வாங்கினால் ஒரு பேனாவைப் பரிசாகத் தருவதாகச் சொன்னாயே! ஞாபகமிருக்கிறதா?"

"ஓ."

"அப்படியானால் ஒரு பேனா எனக்கு இப்பொழுது கொடு" என்றான் கண்ணன்.

"ஏன், நீ நூறு மார்க்கு வாங்கியிருக்கிறாயா?" என்று கேட்டாள் அவன் மாமி.

"ஓ, வாங்கியிருக்கிறேன். இல்லாவிட்டால் உன்னைக் கேட்பேனா?" என்றான்.



பிறகு மாமி எழுந்திருந்து போய் பீரோவிலிருந்து ஒரு புதுப் பேனாவை எடுத்துக் கண்ணனிடம் கொடுத்தாள். கண்ணனுக்கு ஒரே சந்தோஷம்.

பத்து நாள் கழித்து, மாமா பீரோவைத் திறந்து பார்த்தார். அதில் தாம் வைத்திருந்த பேனாவைக் காணவில்லை. "நான் இங்கே ஒரு புதுப் பேனா வைத்திருந்தேனே, எங்கே காணோம்?" என்றார்.

"நம்ம கண்ணன் பரீட்சையில் நூறு மார்க்கு வாங்கியிருப்பதாகச் சொன்னான். அதற்குப் பரிசாக அந்தப் பேனாவைக் கொடுத்து விட்டேன்" என்றாள் மாமி.

மாமாவுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. "என்ன? நம்ம கண்ணனாவது நூறு மார்க்கு வாங்குவதாவது? நம்ப முடியவில்லையே!" என்றார். பிறகு கண்ணனைக் கூப்பிட்டு, "உன் மார்க்குகள் விவரமுள்ள 'பிராகிரஸ் ரிப்போர்ட்'டைக் கொண்டு வா" என்றார்.

கண்ணன் பயத்துடனேயே கொண்டு வந்து காண்பித்தான். அதைப் பார்த்தவுடனே மாமா விழுந்து விழுந்து சிரித்தார்.

"என்ன அப்படிச் சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டாள் மாமி.

"என்னவா? உனக்குச் சரியான அசட்டுப் பட்டம் கட்டி விட்டாண்டி. இதோ பார்,

தமிழ்: 25
ஆங்கிலம்: 25
கணக்கு: 25
ஹிந்தி: 25

ஆக மொத்தம் நூறு என்று கணக்கிட்டு உன்னிடம் பேனாவை வாங்கி விட்டான்! உன்னை இவ்வளவு சாமர்த்தியமாக ஏமாற்றியதற்கு அவனுக்கு இன்னொரு பேனாவும் வாங்கித் தரவேண்டியதுதான்!" என்றார்.



மாமா, தன் மார்க்குகளையும் தான் செய்த காரியத்தையும் பார்த்துக் கோபித்துக் கொள்வார் என்று நினைத்தான் கண்ணன். அப்படிக் கோபித்துக் கொண்டிருந்தால் கூட அவனுக்குத் திருப்தி ஏற்பட்டிருக்கும். அதற்கு மாறாக அவர் சிரித்துக் கொண்டே இருந்தார். அது மட்டுமில்லை. அவன் இந்த மாதிரி செய்ததற்காக மாமா அவனுக்கு இன்னொரு பேனா வாங்கித் தந்தார்.

அதன் பலன் என்ன வாயிற்று தெரியுமா?

கண்ணனுக்குப் படிப்பில் அளவு கடந்த சிரத்தை ஏற்பட்டது. புஸ்தகமும் கையுமாக எப்பொழுதும் காட்சியளிக்கலானான். விளையாட்டு, சினிமா, திருவிழா ஆகிய எதிலும் கவனம் செலுத்தாமல் படிப்பிலேயே கவனம் செலுத்தினான்.

அந்த வருஷக் கடைசியில் பரீட்சை நடந்தது. அந்தப் பரீட்சையில் கண்ணன் எல்லாப் பாடங்களிலும் நூற்றுக்கு எழுபத்தைந்துக்குமேல் மார்க்கு வாங்கியிருந்தான். இதைப் பார்த்து அவன் வகுப்பு ஆசிரியருக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. கண்ணன் வீட்டுக்குப் போய் அவன் மாமாவிடம் கண்ணன் இப்படி அமோகமாக மார்க்கு வாங்கியிருப்பதைப் பற்றிச் சொன்னார். மாமாவினாலும் நம்ப முடியவில்லை. "என்ன? நம்ம கண்ணனா நூற்றுக்கு எழுபத்தைந்து ஒவ்வொரு பாடத்திலும் வாங்கியிருக்கிறான்!" என்று வெகு ஆச்சரியத்துடன் கேட்டார்.

"ஆமாம்" என்றார் உபாத்தியாயர்.

மாமா, கண்ணனை அழைத்து இந்த விவரமெல்லாம் கூறினார். கடைசியில் "அது சரி கண்ணா, போன பரீட்சையில் எல்லாவற்றிலும் இருபத்தைந்து மார்க்கு வாங்கினவன் இப்பொழுது எப்படி எழுபத்தைந்து வாங்கினாய்? என்னால் உன்னைப் புரிந்து கொள்ள முடியவில்லையே!" என்று கேட்டார்.

"எல்லாம் நீங்கள் கொடுத்த பேனாப் பரிசின் மகிமைதான் மாமா" என்று கேலிப் புன்னகையுடன் சொல்லிக் கொண்டே ஓடிப் போனான் கண்ணன்.

அலைக்குட்டி!

சாமா



கடற் கரையில் உட்கார்ந்து கிட்டு ஆனந்தமாகக் காற்று வாங்கிக்கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு பையன் அவனிடம் ஒரு சங்கைக் கொடுத்து அதைக் காதில் வைத்துப் பார்த்தால் அலைகளின் சப்தம் கேட்கும் என்றான். கிட்டு அந்தச் சங்கை வாங்கிக் காதில் வைத்துப் பார்த்துச் சப்தம் வருவதைக் கண்டு வியந்தான். சங்கைப் பக்கத்தில் வைத்துக் கொண்டே சுகமான காற்றை அனுபவித்தபடியே தூங்கிவிட்டான்.

அப்பொழுது அவனுக்கு ஒரு அருமையான சொப்பனம் உண்டாயிற்று. சங்கைக் காதில் வைத்த போது அதில் ஜலம் ஆடியது. அதை எடுத்துப் பார்த்தபோது அலையாகத் தோற்றமளித்தது. அந்த அலை கிட்டுவைப் பார்த்து, ''என்னை என் தாய் தகப்பனிடம் பழையபடி சேர்த்து விடு!'' என்று கத்திக் கொண்டே மேலே குதித்தது. கிட்டு உடனே அதை ஒரு பெரிய பேஸினில் எடுத்து சமுத்திரத்திற்குக் கொண்டு போய்க் கொட்டினான். அந்த அலைக்குட்டி 'அம்மா, அம்மா' என்று கத்திக்கொண்டு அவர்களிடம் சேர்ந்தது. தாய் அலையும் தகப்பன் அலையும் அதை அணைத்துக்கொண்டு ஆனந்தக் கடலில் மூழ்கிப் போனார்கள்.

அப்பொழுது அங்கு படகுப் பந்தயம் நடக்க இருந்ததால் ஜனங்கள் ஏராளமாக வந்து கூடினர். ''வழியில் ஏன் நிற்கிறாய்!'' என்று கேட்டுப் பந்தயத்தில் கலந்து கொள்ளும் ஒருவர் கிட்டுவைத் தள்ளினார். கிட்டு பொத்தென்று பேஸினுடன் விழுந்தான். சமாளித்துக் கொண்டு பேஸினில் ஏறி உட்கார்ந்து கொண்டான். பேஸினும் மிதந்தது. படகுப் போட்டி ஆரம்பித்தது. படகோட்டிகள் கிட்டுவைப் பார்த்துப் பரிகாசம் பண்ணிக் கொண்டே படகைத் தள்ளினார்கள்.

இதை யெல்லாம் வேடிக்கை பார்த்த அலைகள் மிகவும் மனம் வருந்தின. தங்களுக் கெல்லாம் மிகவும் பிரியமான குட்டி அலையிடம் அவன் எவ்வளவு அன்பா யிருந்தான்! அவனுக்கு இந்தப் படகுப் போட்டியில் தோல்வி ஏற்படக் கூடாது என்று தீர்மானித்து, கிட்டுவைக் காப்பாற்றிப் போட்டியில் அவனை ஜெயிக்கச் செய்ய எத்தனித்தன. அந்த உற்சாகத்தில் அலைகள் ஆவேசத்தில் எழும்பிக் குதித்தன. படகோட்டிகளை ஆகாசத்தில் தூக்கிக் கவிழ்த்து விட்டு உற்சாகத்துடன் கிட்டுவின் பேஸினைத் தள்ளிக் கொண்டே போய்க் கரையில் விட்டன. கரையில் இருந்தவர்கள் எல்லோரும் ''படகுகள் இருக்கும் இடமே தெரியவில்லையே! முதலில் வந்த கிட்டுதான் பரிசை அடித்து விட்டான்!'' என்று கரகோஷம் செய்தார்கள். பிறகு பெரிய கோப்பையையும் கிட்டுவுக்குப் பரிசாக வழங்கினார்கள்! கிட்டுவுக்கு ஆனந்தம் தாங்கவில்லை.



கிட்டுவின் கனவை ஒரு பெரிய அலை வந்து முடித்துவிட்டது. கரையில் தூங்கிக் கொண்டிருந்த கிட்டுவின் மேல் அலை வந்து அடித்து அவனைச் சொட்டச் சொட்ட நனைத்து விட்டது. உடனே கிட்டு திடுக்கிட்டு எழுந்தான் நனைந்து விட்டதையும் தன் பக்கத்தில் உள்ள சங்குக்குள் நிறைய ஜலம் இருப்பதையும் கண்டான். உடனே அந்தச் சங்கு ஜலத்தைச் சமுத்திரத்திலேயே கொட்டி விட்டான். அலைகள் உயர எழும்பித் தங்கள் சந்தோஷத்தைத் தெரிவித்தன.

மனமும் மணமும்

கௌசிகன்



தபால்காரனிடமிருந்து அந்தக் கடிதத்தை அவள்தான் வாங்கினாள். யாருடைய வாழ்க்கையின் புரட்சியைத் தாங்கி அது வந்திருக்கிறதோ, அவளே அந்தக் கடிதத்தைப் பிரித்தாள். மாலதி அந்த வீட்டின் செல்லப் பெண். கர்வமும் அகம்பாவமும் கலந்து உருவான ஒரு சிருஷ்டி. அவள் கல்யாண விஷயமாகத்தான் அந்தக் கடிதம் வந்திருந்தது. கடிதத்தைப் படித்த அவள் கருத்த முகத்திலேகூட வெட்கம் வரிவிட்ட சிவப்புத் தெரிந்தது!

'அம்மா' என்று கத்திக் கொண்டே கையில் கடிதத்துடன் உள்ளே ஓடினாள் மாலதி. தூக்கத்தோடு சுவாரஸ்யமாக இழைந்து கொண்டிருந்த அவள் தாயார் தன் அருமைக் குழந்தையின் அபூர்வமான அலறலைக் கேட்டுத் தன் மயக்கத்தை உதறி விட்டு எழுந்து உட்கார்ந்தாள். சமையலறையிலிருந்து ஒரு ஒட்டி உலர்ந்த உருவம் முழங்கை வரை கரியுடன் தன்னை வேலையிலிருந்து விடுவித்துக் கொண்டு எட்டிப் பார்த்தது. தன் நாத்தனாருடைய குதூகலத்தின் காரணத்தை அறிய லக்ஷ்மிக்கு மட்டும் ஆசை இருக்காதா!

"அம்மா, நம்ம பக்கத்து வீட்டிலே இருந்தாளே கோமதி அம்மாமி, அவளுடைய பிள்ளைக்கு உன் பெண்ணைக் கேட்டிருக்கிறார்கள்!" என்றாள் அவள். இதைச் சொல்வதற்குள், பாவம்! அவளுக்கு எத்தனை அவசரம், துடிப்பு! அவள் வாழ்க்கையிலேயே கற்பனை செய்ய முடியாத விஷயம்தான் அது. அவள் அழகு அவளுக்குத் தெரியாதா!

மாலதியின் வார்த்தையில் அவள் தாயாருக்கு நம்பிக்கை விழவில்லை. நம்பக் கூடிய செய்தியாகவும் அது இல்லை.

"என்னடி மாலதி, என்ன சொல்கிறாய்!" என்று கருத்துடன் கவனிக்க ஆரம்பித்தாள்.

"கோமதி மாமி தன் பிள்ளை ராமுவுக்கு உன் பெண் மாலதியைக் கல்யாணம் பண்ணித் தருகிறாயா என்று கேட்டிருக்கிறாள். இந்தா, நீயே படித்துப் பார்த்துக் கொள்!" என்று அம்மாவின் முன்னால் கடிதத்தைப் போட்டு விட்டுத் தன் அறைக்குள் போய்க் கண்ணாடியின் முன்னால் நின்று தலையை நிமிர்த்தி ஒய்யாரமாகப் பார்த்துக் கொண்டாள். ராமு தன்னைக் கல்யாணம் செய்து கொள்ளும்படி தன்னிடம் அவ்வளவு அழகு இருக்கிறதா என்ற சந்தேகம் அவளுக்கே வந்திருக்க வேண்டும்.

இந்தச் சந்தேகம் அவளுக்கு மட்டுமல்ல, அந்த வீட்டிலுள்ள அத்தனை பேரையும் ஆட்கொண்டு திகைக்கச் செய்துவிட்டது. சிரிப்பு மறந்துப் போன லக்ஷ்மியின் ஒட்டி உலர்ந்த முகத்தில் கூட ஒரு நிம்மதி. மகிழ்ச்சியின் கீற்று ஓடி இருந்தது.

அந்தக் குடும்பத்தின் ஒரே பெண்ணாகப் பிறந்திருந்தாள் மாலதி. அவளுக்கு முன்னும் பின்னும் குழந்தைகள் இருந்தாலும் அந்த வீட்டில் அவளுக்கு என்னவோ தனிச் சலுகை. அந்தச் சலுகையே அவளிடம் அகம்பாவத்தையும் கர்வத்தையும் வளர்த்து விட்டது என்றுகூடச் சொல்லலாம். மாலதி அழகியல்ல- சர்வ சாதாரணமான பெண்தான். 'என்னை வெறுப்போடு முகம் சுளிக்கப் பார்த்த அந்த ராமுவா என்னைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறான்!' என்று நினைத்த மாலதி தன்னை இரண்டு வருஷங்களுக்கு முன்னால் கொண்டு போய் நிறுத்திக்கொண்டு, அப்போது அடுத்த வீட்டில் குடி இருந்த ராமுவைப் பற்றிய நினைவில் மெய்ம்மறந்து போனாள்!

அவள் மெய்ம்மறந்து போகும்படியாகவா ராமு அவளைப் பார்த்தான்...!

*　　*　　*

ராமு அந்த ஊரில் காலேஜில் சேர்ந்து படிக்க வந்திருந்தான். அவனுக்குச் சமைத்துப் போடத்தான் குடித்தனம் போட்டிருந்தாள் கோமதி அம்மாள். அப்போதுதான் ராமு மாலதியைப் பார்த்தான். அவள் அசட்டுச் சிரிப்பையும் அவள் மினுக்கலையும் பார்த்தான். தன்னைப் பார்க்க வேண்டுமென்றே அவள் விசேஷ அலங்காரம் செய்துகொண்டு நிற்பதையும் கவனித்தான். அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

கொஞ்ச நாளைக்கெல்லாம் அந்தக் குடும்பத்தைப் பற்றியும் அறிந்து கொண்டான் ராமு. மாலதிக்கு இரண்டு அண்ணாவும் ஒரு தம்பியும் இருந்தார்கள். மாலதியின் தாயார் சதா படுத்த படுக்கை தான். ஆகவே வீட்டு வேலைகள் அத்தனை

யும் ஆண் பிள்ளைகளே செய்து வந்தார்கள். பெண்ணாக வளைய வந்தாள் மாலதி. ஒரே தங்கை என்று அண்ணன்மார்களின் செல்லத்தில் வளர்ந்து விட்ட அவளுக்குப் பொறுப்புடன் காரியம் செய்யத் தெரியா விட்டாலும் அதிகாரம் செய்ய மட்டும் நன்றாகத் தெரிந்திருந்தது.

வீட்டுக் காரியங்களைச் செய்ய ஒரு பெண்ணை விலைக்கு வாங்குவது போலத்தான் மாலதியின் மூத்த அண்ணா பசுபதிக்கு லக்ஷ்மியைக் கல்யாணம் செய்து வைத்தார்கள். அந்த வீட்டுக்கு லக்ஷ்மியாக வந்தாள் லக்ஷ்மி.

கல்யாணம் ஆன கையோடு லக்ஷ்மியைத் தங்கள் வீட்டுக்கு அழைத்து வந்து விட்டார்கள். மறுநாளே அவளிடம் அந்தக் குடும்பத்தின் சகல காரியங்களும் ஒப்படைக்கப் பட்டன. புக்ககத்திற்குப் போனால் காரியம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை அவள் தாயார் அவள் உள்ளத்திலே பதிய வைத்திருந்தாலும் இப்படி உழவு மாடாக நடத்துவார்கள் என்று அவள் நினைக்கவில்லை. முதலில்கூட இந்த எண்ணம் அவளுக்கு உண்டாகவில்லை. காரணம் மாமியாரின் அன்பையும் கணவனின் ஆசையையும் பெற வேண்டும் என்ற ஆவலில் தன் சக்திக்கு மீறி ஓடியாடிக் காரியங்களைச் செய்தாள். இவ்வளவுக்கும் பிரதியாக எதை எதிர்பார்த்தாளோ, அது கிடைக்காமற் போன போது தான் அவள் உள்ளமும் உடலும் அப்படியே ஒடிந்து ஓய்ந்து போய் விட்டன. கண்களில் நீர் முட்டி நின்றது. நெஞ்சைத் துக்கம் அடைத்தது. உள்ளத்து வேதனை உடல் வலியை எல்லாம் ஒன்று சேர்த்துக் காட்டியது.

அந்த வீட்டுக்கு மணப் பெண்ணாக வந்தபோது லக்ஷ்மி எவ்வளவோ ஆசைகளோடுதான் வந்திருப்பாள். ஒவ்வொரு இளம் பெண்ணும் எப்படிக் கணவனோடு வாழ ஆசைப்பட்டிருப்பார்களோ, அப்படித்தான் அவளும் ஆசைப்பட்டிருப்பாள். அந்த ஆசைகள் எல்லாம் மக்கி மடிய, கணவனின் அன்புக்கும் அரவணைப்புக்கும் பரிகாச விளையாட்டுக்கும் அவள் உள்ளம் ஏங்கித் தவிக்கும்படி செய்து விட்டார்கள் மாலதியின் வீட்டார். லக்ஷ்மி வருவதற்குமுன்பு தங்கள் குடும்பம் இருந்த நிலையை அடியோடு மறந்து விட்டார்கள்.


மனைவியிடம் அன்பு இல்லாத ஒரு ஜடமாக இருந்தான் பசுபதி. அவள் கண்ணீரையும் அவன் பார்ப்பதில்லை. அவள் அலங்காரத்தையும் அழகையும் அவன் ரசிப்பதில்லை. பணம், பணம்! பணமே அவன் வாழ்வின் லக்ஷியமாக இருந்தது. இரவு வெகு நேரங் கழித்து வருவான். வந்ததும் தூக்கத்தோடு ஐக்கியமாகி விடுவான். என்றைக்காவது ஒரு நாள் வீட்டில் இருந்தால் அருமைத் தங்கை மாலதியோடு தான் கொஞ்சிக் கொண்டிருப்பான். லக்ஷ்மியோடு பேசவே மாட்டான். தனக்கு மனைவி ஒருத்தி இருக்கிறாள் என்ற நினைப்பே அவனுக்குச் சிறிதும் இல்லை.


தாங்க முடியாத வேதனையிலே லக்ஷ்மியின் கண்ணீர் அவனோடு ஒரு நாள் கதறி இருக்கிறது. அதற்கு அந்த ஹிருதயமற்றவன், "இந்த வீட்டில் காரியம் செய்வதற்காகத்தான் நான் உன்னைக் கல்யாணம் செய்து கொண்டேன்." என்று கொஞ்சமும் கடுக்க மின்றிச் சொல்லிவிட்டான். அன்று தான் உள்ளம் வெடிக்க லக்ஷ்மி விம்முவதை ராமு கேட்டான்.

இத்தனை நாள் அவள் அனுபவித்து வந்த கஷ்டங்களைப் பார்த்து வந்த ராமு இப்போது அவள் படும் கஷ்டங்களைக் கேட்குமளவிற்குக் கொடுமை அதிகமாயிற்று. அவளை அடித்து ஹிம்சைப் படுத்தவும் ஆரம்பித்தார்கள். எத்தனை நாளைக்குத்தான் அன்பில்லாத, ஹிருதயமில்லாத, மனிதர்களாக இல்லாத அவர்கள் மத்தியில் அவளால் உழைத்துக் கொண்டிருக்க முடியும்! உடைந்த உள்ளத்துடன் உற்சாக மிழந்த உடலுடன் அவளால் ஓடியாடி முன்போல வேலை செய்ய முடியவில்லை. குனியாமல் நிமிராமல் சுகமாகச் சாப்பிட்டு வந்தாள் மாலதி. அதுமட்டு மல்ல. மன்னியின் காரியத்தில் ஆயிரம் கோளாறுகள் கண்டுபிடித்துக் கூறி வந்தாள்.

"ஐயோ! என்னால் வேலை செய்ய முடியவில்லையே" என்று அபலை லக்ஷ்மி கதறினால், "அத்தனையும் பாசாங்கு, அண்ணா!" என்று முகத்திலே பவுடரை அப்பி அலங்காரம் செய்து கொண்டே தன் அண்ணனைத் தூண்டி விடுவாள் மாலதி.

கல்யாணமாவதற்கு முன் எப்படி எப்படி எல்லாமோ கணவனுடன் இன்ப வாழ்க்கை நடத்த வேண்டுமென்று கனவு கண்டவள்தான் லக்ஷ்மியும். இப்போது அவள் கூந்தல் சீவப்படாமல் சடையிட்டுக் கிடந்தது. அதைப் பிடித்துத் தூக்கி அவளைச் சமையலறையில்





சோமு (பெருமையுடன்):— எங்க அப்பாவிடம் நாலு கார்கள் இருக்கிறதே, தெரியுமா?

ராமு:—பூ! இவ்வளவு தானா? எங்க அப்பா மாசத்திலே பத்துக் கார்கள் வாங்குகிறாரே, தெரியுமா?

சோமு (ஆச்சரியத்துடன்):—உங்க அப்பாவுக்கு அப்படி என்ன ஓசத்தி வேலை?

ராமு:—எங்க அப்பா மோட்டார் வாங்கிக் கொடுக்கும் 'புரோக்கர்', உனக்குத் தெரியாதா?

கொண்டு போய்த் தள்ளி 'வேலை செய்ய முடியா விட்டால் இந்த வீட்டில் உனக்கு வேலை இல்லை' என்று கர்ஜிப்பான் பசுபதி.

ஒரு சுவருக்கு அப்பால் இருக்கும் ராமுவின் காதில் லக்ஷ்மியின் தீனமான ஓலமும் மாலதியின் நெஞ்சழுத்தமான பேச்சும் விழும். "பகட்டாகச் சட்டை போட்டுக் கொண்டு ஆபீசுக்குப் போகும் அயோக்கியன். இவன் ஆண்மகனும்!" என்று ஆத்திரப்படுவான். அதற்குமேல் அவனால் என்ன செய்ய முடியும்!

உருண்டு ஒன்று சேர்ந்து வழிந்து சிதறக்கூடக் கண்ணீர் இல்லாமல் லக்ஷ்மியின் கண்கள் குழி விழுந்து கிடந்தன. நடக்க முடியாமல் தள்ளாடிய படி குடத்தைச் சுமந்து கொண்டு போவாள்.

உடலிலே மினு மினுப்பும், சதைப் பிடிப்புமாகத் தலையில் கட்டுப் பூவுடன் ஒய்யாரமாகக் குதி போட்டுக் கொண்டு அண்ணனுடன் ஒரு சினிமா தவறாமல் போய் வருவாள் மாலதி.

ராமு பக்கத்து வீட்டிலிருந்து இதை யெல்லாம் பார்த்துப் புழுங்கிக் கொண்டிருந்தான். மாலதியைப் பார்த்தாலே அவன் நெஞ்சு குமுறிற்று. மகா கொடிய அருவருக்கத் தக்க ஒரு படைப்பைப் பார்ப்பது போல அவளை மிகுந்த வெறுப்புடன் பார்ப்பான்.

தங்கள் பெண் படும் கஷ்டத்தைக் கேட்டுத் தானோ அல்லது கல்யாணப் புடவையோடு அனுப்பிய பெண்ணை மறுபடி பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டோ லக்ஷ்மியின் பெற்றோர்கள் பத்து நாள் அவளை அனுப்பும்படி கெஞ்சினார்கள். லக்ஷ்மியின் புருஷன் வீட்டார் அவளை விடமுடியாது என்று மறுத்து விட்டார்கள். பெண்ணைக் கூப்பிட வந்த சம்பந்தியை வாசலிலேயே உட்கார வைத்துத் திருப்பி அனுப்பி விட்டார்கள். அவர்கள் சம்பந்தியைப் பெண்ணுடன் பேசுவதற்குக்கூட அனுமதிக்கவில்லை.

'ஆசை வெட்கமறியாது' என்பது போல மாதத்தில் ஒரு தடவை லக்ஷ்மியின் தகப்பனார் தம் பெண்ணைக் கூப்பிட வருவார். அவரைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கும். எங்கே அழுது விடுவாரோ என்றிருக்கும் அவர் நிலை. 'வா!' என்று கூப்பிடாத வீட்டில் — தாகத்துக்குத் தண்ணீர் கூடக் கொடுக்காத வீட்டில் தம் பெண்ணைக் கொண்டு போய்க் கொடுத்தோமே என்ற வேதனை அவர் நெஞ்சை அறுத்துக் கொண்டிருப்பதை அந்தக் களை இழந்த, கவலை தோய்ந்த முகத்திலிருந்து அறிந்து கொண்டு விடுவான் ராமு.

தனக்காகத் தன் அப்பா அவமானப்படுவதை லக்ஷ்மியால் சகிக்க முடியவில்லை. பொங்கி வரும் அழுகையை உள்ளுக்கு அழுத்திக் கொண்டு துணிவுடன் வேகமாக வெளியே வந்தாள். திண்ணையில் சாம்பிய உள்ளத்துடன் உட்கார்ந்திருக்கும் தன் தகப்பனருக்கு ஒரு நமஸ்காரம் செய்து விட்டு எழுந்து, "அப்பா! நான் செத்துப் போய் விட்டதாக நினைத்துக் கொள்ளுங்கள், அப்பா! இனி மேல் என்னைப் பார்க்கவோ என்னைக் கூப்பிடவோ நீங்கள் வர வேண்டாம், அப்பா! போய் விடுங்கள்!" என்று சொல்வதற்குள் அவள் ஆதிக்கத்தையும்மீறி அழுகை வந்துவிட்டது.

அப்போது அவள் கணவன் வீட்டில் இல்லை. இல்லாவிட்டால் என்ன! நடந்ததை நாலு பங்காக்கிச் சொல்லுவதற்குத்தான் மாலதி இருந்தாளே!

"என்ன துணிச்சல் பார்த்தாயா, அண்ணா! அவள் செத்துப் போய் விட்டதாக நினைத்துக் கொள்ளணுமாம். எப்படி இருக்கிறது! அந்தப் பழியை வேறே போடக் காத்துக் கொண்டிருக்கிறாள் போல் இருக்கிறது. பிறந்த வீட்டிலேயே இருக்கணும் என்று ஆசைப்படுகிறவள் எதற்குக் கல்யாணம் பண்ணிக் கொண்டு நம்ம பாவத்தைக் கொட்டிக் கொள்ள வேணுமாம்!" என்று நாடகமாடினாள் மாலதி.

லக்ஷ்மி கண்ணீர்கூட வடிக்காமல் நின்றுகொண்டிருந்தாள். தன் துணிவிற்கு என்ன வெகுமதி கிடைக்கப் போகிறதென்று அவளுக்குத் தெரியும். அதை எதிர்பார்த்து மனத்தையும் உடலையும் ஒரு நிலைப்படுத்திக் கொண்டு காத்திருந்தாள்.

நாளாக நாளாக லக்ஷ்மி அனுபவிக்கும் நரக வேதனைகளைக் கண்டு ராமுவின் உள்ளம் துடிதுடித்தது. இவர்கள் மனிதர்களா! இவர்களுக்கு ஹிருதயம் என்பதே கிடையாதா! நாளைக்கு இவர்கள் பெண் ஒரு வீட்டில் போய் வாழவேண்டாமா! அருமையாக வளர்க்கும் இந்த அகம் பாவக் கொழுந்தை நாளைக்கு ஒருவன் இப்படியெல்லாம் கொடுமைப்படுத்தினால் இவர்கள் மனது எப்படி இருக்கும்! கஷ்டம், கண்ணீர், துன்பம், வேதனை என்றால் என்ன என்பதை இவர்களுக்கு அறிய வைப்பது எப்படி என்று தவித்தது ராமுவின் உள்ளம்.

லக்ஷ்மியின் பெற்றோர் எப்படி ரத்தக் கண்ணீர் வடிக்கிறார்களோ, அப்படி இவர்களும் வடிக்க வேண்டும். லக்ஷ்மி எந்த வேதனைகளை, கொடுமைகளை அனுபவிக்கிறாளோ, அவைகளை யெல்லாம் மாலதியும் அனுபவிக்க வேண்டும். அப்போது தான் அவள் கொதிப்பு அடங்கும் போல் இருந்தது. பழி வாங்கியே தீருவது என்று உறுதி கொண்டு விட்டான். ஆனால், எப்படி! அதுதான் அவனுக்குப் புரியவில்லை.

தானே மாலதியைக் கல்யாணம் செய்து கொண்டு தன் முடிவைச் செயலாக்குவதைத் தவிர வேறு ஒரு வழியும் அவனுக்குப் புலப்படவில்லை. லக்ஷ்மி வடிக்கும் கண்ணீரும் படும் கஷ்டங்களும் அவன் ஹிருதயத்தில் கறையாக, அழிக்க முடியாத கறையாகப் பதிந்து விட்டன.

"அந்த அவலட்சணத்தையாடா ராமு!... ஐயோ, அந்த ராட்சத ஜன்மாக்களோடு சம்பந்தம் வைத்துக் கொள்ள வேண்டுமா!" என்று துடித்தாள் கோமதி அம்மாள்.

ராமுவின் உறுதி கலையவில்லை. "ஆமாம், அம்மா! அந்தப் பிசாசைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறேன். லக்ஷ்மி வடித்த கண்ணீரை அந்த மாலதியும் வடிக்க வேண்டும், அம்மா! தன் செல்லப் பெண்ணைப் பார்க்க வரும் அந்த ஹிருதய மற்ற ஜன்மங்களை வேலைக்காரனை விட்டு விரட்டச் செய்வேன், அம்மா!" என்று எரிமலையாக வார்த்தைகளைக் கக்கினான் ராமு.

"இதென்னடா ராமு! அவர்கள் யாரோ, நாம் யாரோ! உனக்கு ஏண்டா இந்தப் பொல்லாப்பு!" என்று மன்றாடினாள் கோமதி. அவளுக்குத் தெரியும் தன் பிள்ளையின் பிடிவாதம்.

"யாரோவா! கூடப்பிறந்தால்தான் சகோதரியா, அம்மா! லக்ஷ்மியும் என் சகோதரிதான். அக்கிரமக்காரர்களின் முன்னால் அவள் வடித்த கண்ணீர் என் நெஞ்சை அறுத்துக் கொண்டிருக்கிறது..."

முடிந்து விட்டது...ராமுவுக்கும் மாலதிக்கும் கல்யாணம் முடிந்து விட்டது.

ராமு மனைவியை அழைத்து வந்ததும் முதல் வேலையாக வீட்டுச் சமையல்காரனை வேண்டாமென்று அனுப்பினான். வேலைக்காரிக்கும் சீட்டுக் கொடுத்தான். தன் திட்டத்தை நிறைவேற்று வதற்கு ஆரம்பித்தான்.

மாலதிக்கு ராமுவின் நடத்தை 'பகீர்' என்று இதயத்தைச் சுற்றிப் பிழிந்தெடுத்தது.

"ஐயோ, எனக்குச் சமைக்கத் தெரியாதே!" என்றாள் மாலதி தீனமாக.

"உட்கார வைத்துச் சாப்பாடு போட உன்னைக் கல்யாணம் செய்து கொள்ளவில்லை! காரியம் செய்யத் தெரியாமல் எந்த ஜமீன்தார் வீட்டுக்குப் போய் வாழலாம் என்று கனவு கண்டு கொண்டிருந்தாய்!" என்று குரலில் வெறுப்பை வரவழைத்துக்கொண்டு கர்ஜித்தான் ராமு.

மாலதிக்கு எல்லாம் விளங்கி விட்டது. அவன் தன் வெறுப்பை மறைத்து விருப்புடன் கல்யாணம் செய்து கொண்டதின் காரணம் அவளுக்குப் புரிந்து விட்டது. உள்ளம் வெடிக்கப் புலம்பினாள். புழுவாகத் துடித்தாள். 'பாசாங்கு' என்று பல்லைக் கடித்தான் ராமு. "அன்று உன் மன்னியை இப்படித்தானே கொடுமைப் படுத்தினாய்! அவள் கண்ணீரைக் கண்டு கைகொட்டிச் சிரித்தாயல்லவா! அவள் படும் வேதனையைக் கண்டு வியாக்கியானம் செய்தாயல்லவா! அழு... இப்போது நீ அழு...கண்ணீர் விடு...கதறு... தொட்டால் விழுந்து விடும்படியாக உன் மன்னியின் உடல் வற்றி உலர்ந்து போன பிறகும்கூட நீ காலை ஆட்டியபடி உட்கார்ந்து கொண்டு வேலை வாங்கினாயல்லவா! உன் உடலில் நல்ல தெம்பிருக்கிறது. இரக்கமில்லாத மரத்துப்போன ஹிருதயமிருக்கிறது. வேலை செய்!" என்றெல்லாம் சொல்லி அவளைக் கதற வைத்தான்.

"மன்னித்து விடுங்கள்" என்றாள் மாலதி.

"மன்னிப்பா! உனக்கா! இன்னும் நீ அனுபவிக்க வேண்டியது எவ்வளவோ இருக்கிறது. கண்ணீர் என்றால், கஷ்டம் என்றால், வேதனை என்றால் என்ன என்பதை நீ அறியவேண்டும். உன் மன்னியின் வாழ்வைப் பாலைவனமாக்கிய இந்த ஈரமில்லாத நெஞ்சத்தை உன் கண்ணீரால் கனியவைத்து பைப்பாக்கிக் கொள்."

மாலதியின் கண்ணீரைக் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்தான் ராமு.



டாக்டர்:—உங்கள் உடம்பு இருக்கும் நிலைமைக்கு அடிக்கடி நீங்கள் தண்ணீர் சாப்பிடவேண்டும், ஸார்!

நோயாளி:—நீங்கள் கொடுக்கும் மருந்தை ஆறு வேளை சாப்பிடுகிறேனே, அது போதாதா?

பெரிய இடத்தில் வாழ்க்கைப்பட்ட தன் தங்கை அனுபவிக்கும் துன்பத்தைக் கேள்விப் பட்டு ஓடோடி வந்தான் பசுபதி, தங்கையைப் பார்க்க. பார்க்க மட்டுமல்ல; அழைத்துப் போகவுந்தான். இதை எதிர்பார்த்துக் கொண்டிருந்த ராமு அவனை வாசற்படியிலேயே நிற்கவைத்து குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருந்த தன் ஆத்திரத்தை எல்லாம் அவன்மீது எரிமலையாகக் கக்கினான்.

"உன் மாமனார் அன்றைக்கு வந்து கெஞ்சினார். தம் பெண்ணை அனுப்பும்படி. ஒரு தடவையா வந்தார்! உங்கள் கர்வத்தைப் பொருட்படுத்தாமல் பல தடவைகள் வந்தார். மன்றாடினார். நீங்கள் அவரை அவமதித்தீர்கள். அவமானப் படுத்தினீர்கள். அந்த மனிதரின் இதயத்தைக் கிழித்து அனுப்பினீர்கள். இன்றைக்கு அவர் ஸ்தானத்தில் நீ நிற்கிறாய். இப்போது உன் முறை. அந்த வேதனையை அனுபவித்துப் பார்! போ, என் முன்னால் நிற்காதே!" என்று கத்தினான் ராமு. அவன் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

குனிந்த தலையுடன் திரும்பினான் பசுபதி. நிலைப் படி அருகில் அழுதபடி நின்றாள் மாலதி.

மறுநாள் ராமு சோபாவில் உட்கார்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தான். வேகமாக ஒரு உருவம் உள்ளே வந்தது. நிமிர்ந்து பார்த்த ராமு திகைத்து விட்டான். அது மாலதியின் மன்னி லக்ஷ்மியேதான்!

"வாருங்கள்!" என்று அவனை அறியாமல் வாய் அழைக்க வியப்புடன் எழுந்திருந்தான் ராமு. யாருடைய துன்பத்துக்காக மாலதியைப் பழி வாங்கிக் கொண்டிருந்தானோ, அவளே அவன் எதிரில் நின்று கொண்டிருந்தாள்.

'உங்களோடு இரண்டு வார்த்தை பேசவே வந்தேன்" என்றாள் லக்ஷ்மி.

"உட்காருங்கள்" என்று சொல்லிவிட்டுத் தனது அம்மாவைக் கூப்பிட்டான். கோமதி அம்மாள் வந்தாள். லக்ஷ்மியைக் கண்டதும் அன்போடு உபசரித்தாள்.

"உங்கள் பிள்ளையிடம் நீங்களாவது சொல்லக் கூடாதா, மாமி! எனக்காக மாலதியைக் கொடு



வக்கீல் :—அந்தக் களவு நடந்த போது நீ அங்கே இல்லை என்று ருசுப்படுத்த வேண்டுமே! சரி, களவு நடந்த சமயத்தில் உன்னை யாராவது பார்த்தார்களா?

வந்தவர் :—நல்ல வேளையாக ஒருவரும் பார்க்கவில்லை!

மைப் படுத்துவதாக அறிந்தேன். மாலதியைக் கஷ்டப்படுத்தினால் நான் பட்ட கஷ்டம் மறைந்து விடப் போகிறதா, மாமி!''—லக்ஷ்மி பேசினாள்.

''நான் எவ்வளவோ சொல்லியாச்சுடீ அம்மா. நீயே சொல்லு. உனக்குத் தம்பி மாதிரி அவன்''—கோமதி தன் பிள்ளையைப் பார்த்தாள். ராமு தலை குனிந்து உட்கார்ந்திருந்தான்.

''ஹிம்சை செய்தவருக்கு அன்பு காட்டியல்லவா புத்தி புகட்ட வேண்டும்! அப்படிச் செய்திருந்தால் எனக்கும் எவ்வளவோ சந்தோஷமாக இருந்திருக்கும். நீங்கள் இப்படி நடந்து கொள்வதினால் அவர்களுக்கும் உங்களுக்கும் ஒரு வித்தியாசமுமில்லாமல் போய் விட்டதே!''—ராமுவுடன் நேருக்கு நேராகவே பேசினாள் லக்ஷ்மி. அவன் முன் ராமு குற்றவாளியைப் போலக் குன்றிப் போய் உட்கார்ந்திருந்தான். யார் வேதனைக்காக அவன் பெரிதும் குமுறினானோ, அவளே அவன் முன் வந்து தனக்காக மாலதியைப் பழி வாங்குவது தவறு என்று வாதாடினாள்.

''மாலதி குழந்தை. பாவம், அவளுக்கு என்ன தெரியும்! அவளை இப்படி நீங்கள் கண்ணீர் விடும்படி செய்யக் கூடாது. குடும்பம் என்றால் எத்தனையோ இருக்கும். கஷ்டமும் தான் இருக்கும்; சுகமும் தான் இருக்கும். கஷ்டம் என்பதே எங்களுக்காகத் தானே சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறது!'' தன் நாத்தனாருக்குப் பரிந்து பேசினாலும் அந்த இடத்தில் லக்ஷ்மியின் குரல் கரகரத்தது.

''அப்படி என்ன நான் கஷ்டப்பட்டு விட்டேன்!''—தன் குரல் நடுக்கத்தைச் சமாளித்துக் கொண்டு பேசினாள் லக்ஷ்மி. ''இரண்டு வருஷந் தானே! என் நாத்தனார் அந்த வீட்டிலேயே இருப்பவளில்லையே! அவள் புக்ககத்திற்குப் போன பிறகு எனக்கு அந்த வீட்டில் வாழ்வு உண்டு என்ற நம்பிக்கையில் தான் எல்லாவற்றையும் சகித்துக் கொண்டேன். ஆனால் மாலதியை நீங்களே கொடுமைப் படுத்தினால் அவளுக்குச் சுகம் என்ற நம்பிக்கைக்கே இடமில்லையே! உங்கள் சகோதரி நான். நான் நன்றாக வாழ வேண்டுமானால் மாலதியின் வாழ்விலே மகிழ்ச்சி மலர வேண்டும்''—லக்ஷ்மியின் ஒவ்வொரு வார்த்தையும் ராமுவின் ஆத்திரத்தை அலைத்து உண்மையைக் காட்டிற்று. அவள் கண்ணீர்தானே அவனை மாலதியிடம் ஆத்திரங் கொள்ளச் செய்தது.

சட்டென்று ராமு எழுந்தான். ''அக்கா, இனி உங்கள் மாலதியை நான் கொடுமைப் படுத்த வில்லை. இது சத்தியம்'' என்றான்.

உள்ளே இருந்து மாலதி ஓடி வந்து லக்ஷ்மியின் காலில் விழுந்தாள். ''இந்தக் கொடியவளை மன்னித்தேன் என்று சொல்லுங்கள்!''—மாலதி குழந்தைபோலக் கேவிக் கேவி அழுதாள்.

''சீ அசடே, பொம்மனாட்டிகள் இதுக்கெல்லாம் கலங்கலாமோ! அழக்கூடாது'' என்று பெருமிதத்துடன் அவள் கண்ணீரைத் துடைத்தாள் லக்ஷ்மி.

''மாமி, மாலதியை நான் கூட்டிக் கொண்டு போய் என்னுடன் பத்து நாள் வைத்திருந்து அனுப்புகிறேன்'' என்றாள் லக்ஷ்மி.

முடியாது என்று சொல்லக் கோமதி என்ன மாலதியின் தாயாரா!

* * *

''ராமு......ராமு, எழுந்திருடா......அடுத்த வீட்டிலே கல்யாணத்துக்கு அழைக்க வந்திருக்கிறார்கள், பாரு'' என்ற குரல் ராமுவை உலுப்பி எழுப்பிற்று. எதிரில் ஜரிகை அங்கவஸ்திரம் சரிந்து விழப் பசுபதி கையில் வெள்ளிக் கிண்ணத்துடன் நின்று கொண்டிருந்தான். அவன் அம்மாவுடன் உள்ளே லக்ஷ்மி பட்டுப்புடவை சலசலக்க நின்று கொண்டிருந்தாள்.

''தங்கை மாலதிக்கு நாளைக்குப் பிக்ஷாண்டார் கோயிலில் கல்யாணம் அவசியம் நீங்கள் வந்திருந்து நடத்தி வைக்க வேண்டும்'' என்று கூறி மங்களாட்சதையைக் கையில் கொடுத்தான் பசுபதி. லக்ஷ்மியின் முகத்தைப் பார்த்தான் ராமு. அதில் ஏக்கம் இல்லை. வேதனை பொறித்திருந்த சுருக்கம் கூட மங்கலாக மறைந்திருந்தது. தனக்கு வாழ்வு வரப் போகிறது என்ற நம்பிக்கைதான் அவள் முகமலர்ச்சிக்குக் காரணமாக இருக்க வேண்டும்.

தலையைக் குடைந்தது சிந்தனை. 'அடேயப்பா எத்தனை பெரிய கனவு! எத்தகைய தத்ரூபமான காட்சிகள்!'

சாப்பிடும்போது கோமதி, மாலதியின் கல்யாணத்தைப் பற்றியும், லக்ஷ்மிக்கு விடிவு காலம் வரப்போவதைப் பற்றியும் ராமுவிடம் சொல்லிக் கொண்டிருந்தாள். அவனும் வெகு நாளாகவே அடுத்த வீட்டார் மாட்டுப் பெண்ணைக் கொடுமை படுத்துவதைப் பார்த்து வந்திருக்கிறான். அதைப் பற்றி நினைத்துக் கொண்டே படுத்திருந்த ராமு தூங்கிவிட்டான். தூக்கத்தில் கண்ட பகல் கனவுதான் இத்தனையும்.

''அப்பாடா, நல்லவேளையாக நான் தப்பினேன்!'' என்றான் ராமு. திடுதிப்பென்று வாய் விட்டு.

''எதிலிருந்துடா தப்பினாய்!'' என்று கேட்டாள் கோமதி ஒன்றும் புரியாமல்.

''எதிலிருந்தா! ஒரு எக்கச்சக்கமான நிலையிலிருந்து. கல்யாணம் செய்து கொள்வதிலிருந்து'' என்றான் ராமு அசட்டுச் சிரிப்புடன்.

''என்னடா தூக்கக் கலக்கத்திலே, ஏதாவது சொப்பனம் கண்டாயா!'' என்று அவன் வார்த்தையைப் புரிந்து கொள்ள முடியாமல் முகத்தைச் சுளித்தாள் கோமதி.

தான் கண்ட கனவைச் சொல்ல ராமு என்ன அவ்வளவு பெரிய முட்டாளா!

''என்ன இருந்தாலும் பெண்கள் பொறுமை சாலிகள்தானம்மா!'' என்று சொல்லிக்கொண்டே எழுந்திருந்தான் ராமு.

தக்ஷிண ரயில்வே

"விலக்கப்பட்ட" சாமான்கள் என்றால் என்ன என்பதை நீங்கள் அறிவீர்களா?

பொன், வெள்ளி, முத்துக்கள், ரத்னங்கள், ஆபரணங்கள், கடிகாரங்கள், கிளாக்குகள், பட்டுகள், சால்வைகள், சங்கீதக் கருவிகள், ரேடியோ செட்டுகள் மற்றும் அனேக சாமான்கள் "விலக்கப்பட்ட" பொருள்கள் என்று இந்த ரயில்வேயின் டைம் டேபிள்ஸ் & கைடு புத்தகத்திலும் இந்திய ரயில்வே கான்பரன்ஸ் அசோஸியேஷன் கோச்சிங் டாரிப் நெ. 15-லும் கூட்ஸ் டாரிப் நெ. 28-லும் தொகுக்கப்பட்டுள்ளன.

மேற்குறித்த மதிப்பு வாய்ந்த பொருள்களடங்கிய எந்த ஒரு பாக்கேஜ் ரயில் மூலம் அனுப்பப் பட்டாலும், அந்த பாக்கேஜிலிருக்கும் சரக்குகளின் மதிப்பு ரூ. 300 க்கு அதிகமாக இருப்பின், அனுப்புபவர் சரக்குகளின் மதிப்பை முன்னதாகத் தெரிவித்து வழக்கமான கட்டணத்துடன் குறிப்பிட்ட சதவிகிதம் அதிகக் கட்டணம் செலுத்தினாலொழிய ரயில்வே நிர்வாகஸ்தர்கள், பாக்கேஜிற்கு ஏற்படும் நஷ்டம், சேதம் குறைபாடு முதலியவை பற்றி எவ்விதப் பொறுப்பும் எடுத்துக்கொள்ள மாட்டார்கள்.

இது விஷயமான பூரா விவரமறிய உங்களருகிலுள்ள ஸ்டேஷன் மாஸ்டரிடம் விசாரிக்கலாம். அல்லது மேற்குறித்த புத்தகங்களைப் பார்க்கலாம்.

சீப் கமர்ஷியல் சூபரின்டெண்டெண்ட்



ஏன் முடியாது?

பிரஞ்சுக் கதை: ஆன் படு

மொழிபெயர்ப்பு: வாஞ்சி

எனது நண்பர் வசீகரமான ஓர் இளைஞர். எனக்கு எத்தனையோ இளைஞர்கள் சிநேகிதர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்களுடன் நான் சினிமா, நடனசாலை முதலிய பலவிடங்களுக்கும் சென்றதுண்டு. அவர்களில் சிலர் என்னை ஆபீசிலிருந்து அழைத்து வீட்டுக்குக் கொண்டு வந்து விடுவதும் உண்டு. எனினும் மறுதினமே அவர்களைப்பற்றி நான் மறந்து விடுவேன்.

ஆனால் நான் குறிப்பிடும் இளைஞர் அவர்களைப் போல் அல்ல. அவரைப்போல் வேறெவரும் என் மனதைக் கொள்ளை கொண்டதில்லை.

அந்த இளைஞர் யார் என்பதுகூட எனக்குத் தெரியாது. அப்படியிருந்தும் அவர் எனக்குச் சொந்தமானவர் என்ற எண்ணம் என் மனதில் உண்டாகி விட்டது!

அந்த இளைஞர் என்னுடன் பேசவேயில்லை. ஆனால், அவர் என்னைப் பார்க்கும் பார்வை பேச்சைக் காட்டிலும் மிகவும் தெளிவாக இருந்தது! அவராக என்னிடம் வந்து பேசுவார் என்று நான் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

அவர் என்னைப் பார்க்கும் போதெல்லாம் நான் வேறு ஒருத்தியாகி விடுவேன். பிறகு எனக்கு நடனமோ, சினிமாவோ, பேச்சோ எதுவும் பிடிப்பதில்லை. எப்போதும் அவருடன் தனியாக இருந்தால் போதும் என்று தோன்றியது. அவர் பார்க்கும் பார்வையிலிருந்து என்னையும் அவருக்கு மிகவும் பிடித்திருக்கிறது என்பதைத் திட்டமாகத் தெரிந்து கொண்டேன்.

ஒவ்வொரு சனிக்கிழமையும் நான் ஆபீசில் உள்ள என் தோழியுடன் நடனசாலைக்குச் செல்லுவது வழக்கம். அந்த இடத்தில்தான் அந்த இளைஞரை முதன் முதலாகச் சந்தித்தேன்.

அவர் மற்றவர்களைப்போல் ஆடம்பரம் எதுவுமின்றி ஒரு மேஜைக்கு அருகில் அடக்கமாக உட்கார்ந்து கொண்டிருந்தார். எனினும் அவரது வசீகரமான தோற்றம், உடை, அழகிய 'கிராப்' தலை எல்லாம் அவர் ஒரு தனி மனிதர் என்பதைக்காட்டின.

அவர் மௌனமாக மேஜைக் கருகில் உட்கார்ந்திருந்தார். அவர் மற்றவர்களைப் போல் நடனம்செய்ய விரும்பவில்லை. தன்னுடன் நடனம் செய்யுமாறு அவர் எந்தப் பெண்ணையும் அழைக்கவும் இல்லை.

அவருடன் நடனம் செய்யும்படி என்னையாவது கூப்பிடுவார் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால், அவர் என்னை உற்றுப் பார்த்தவண்ணமாக இருந்தாரே தவிர, உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு நகரவே இல்லை.

ஒரு சமயம் அவருடைய கவனத்தை இழுப்பதற்காக நான் உரக்கச் சிரித்தேன். உடனே அவர் தன் முகத்தை அப்பால் திருப்பிக் கொண்டார்.

அவ்வாறு சிரித்ததைக் குறித்து அப்புறம் நான் மிகுந்த வெட்கம் அடைந்தேன்.

* * *

அடுத்த வாரம் நான் நடனசாலைக்குச் சென்றபோதும், அவர் ஒரு மேஜைக்கு எதிரில் தனியாக உட்கார்ந்திருந்தார்.

இவ்விதம் பல வாரங்கள் கழிந்தன. அவர் மௌனமாக என்னையே பார்த்துக் கொண்டிருந்தாரே தவிர வேறு எதுவுமே செய்யவில்லை. என்னைப் பார்த்துச் சிரிக்கவும் இல்லை. என்னுடன் பேச முயற்சிக்கவும் இல்லை.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர் என்னை ஏனனம் செய்கிறாரா! அவர் என்னைப் பார்ப்பதன் அந்தரங்க நோக்கம் என்ன! என்னால் எதுவுமே ஊகிக்க முடியவில்லை.

இந்த விஷயத்தை யாரிடம் சொல்லுவது! நான் என் தோழியிடம் மனம் விட்டு எல்லா விஷயங்களையும் கூறுவது வழக்கம். ஆனால் இதை மாத்திரம் நான் அவளிடம் கூடச் சொல்லவில்லை. அவளிடம் சொன்னால் அவள் உடனே அந்த இளைஞரிடம் சென்று ஏதாவது உளறிக் கொட்டி விடுவாள் அல்லவா!

எனவே, ஒருவர் தான் செய்த பாவத்தை இரகசியமாக வைத்துக் கொள்வதுபோல், நான் என்னுடைய காதலை மிகவும் இரகசியமாக வைத்துக் கொண்டிருந்தேன். அவ்வாறு மறைத்து வைப்பது எனக்கு வெட்கமாக இருந்தது. நாம் செய்யும் தவறைத்தான் மறைக்க வேண்டும்; சரியான, நியாயமான காரியத்தைக் கூட ஏன் மறைக்க வேண்டும்!

நான் ஒரு நிமிஷம் கூட அந்த இளைஞரைப் பற்றி நினைக்காமல் இருக்க முடியவில்லை. இரவு அவரைப் பற்றியே கனவு கண்டேன். பகலில் எப்போதும் அவரது முகமே புகைப் படத்தைப் போல் என் கண் முன் நின்று கொண்டிருந்தது.


அவரை நான் முதன் முதலாகப் பார்த்ததிலிருந்து என் மனதில் மகிழ்ச்சி பொங்கியது. பிறகு அவர் என்னையே பார்த்துக் கொண்டிருந்தும் கூட என்னுடன் பேச முயற்சிக்காதது எனக்குக் கோபத்தை உண்டாக்கியது. அதன் பிறகு அவரை வெறுக்கத் தொடங்கினேன். பின்னர் என் மனம் உற்சாகம் இழந்து சோர்வடைந்தது. இவ்வாறு நான் அப்போது பல வேறு உணர்ச்சிகளுக்கு இலக்காகித் தவித்தேன்.

பிறகு இனம் தெரியாத ஒருவித பயம் என்னை ஆட்கொண்டது. பயத்துக்குக் காரணம் என்ன வென்பது எனக்கே தெரியவில்லை!

இந்த மனிதர் யார்! இவர் ஏன் இப்படி என்னை உற்றுப் பார்த்த வண்ணமாக இருக்கிறார்! இவ்வாறு என்னை நானே பல தடவைகள் கேட்டுக் கேட்டு எனக்கு அலுத்துப் போய்விட்டது.

பார்வைக்கு நான் அழகாக இருப்பது எனக்குத் தெரி

அகில உலகச் சிறு கதைப் போட்டியில் முதல் பரிசுபெற்ற நாலு கதைகளில் மூன்று ஏற்கெனவே பிரசுரமாகியுள்ளன. நாலாவது கதையான இது பிரஞ்சு தேசத்தைச் சேர்ந்த ஸ்ரீமதி ஆன் படுவால் எழுதப்பட்டது. இருபத்தொன்பது வயதான 'ஆன் படு' ஏராளமாகச் சிறு கதைகள் எழுதியுள்ளார். அவர் நடனம், நீந்துதல், விமானம் ஓட்டுதல் முதலிய பல துறைகளில் நிபுணர்.



யாத விஷயம் அல்ல. இருந்தாலும் என்னைக் காட்டிலும் அதிக அழகாக எத்தனையோ யுவதிகள் இருக்கின்றனர். எனவே அவர் என்னை மாத்திரம் அப்படி வெறிக்க வெறிக்கப் பார்ப்பானேன்! அவர் என்னிடம் விரும்புவதென்ன! நான் அவரை என் ஹிருதய பூர்வமாகக் காதலித்தேன் என்பதைத் தவிர வேறு ஒன்றும் எனக்குப் புரியவில்லை.

என்னை அவ்விதம் மயங்கும்படி செய்வது அவருக்கு ஒரு வேடிக்கையாக இருக்கலாம். ஆனால் கபடமற்ற அவர் முகத்தைப் பார்த்தால், அனுபவியமாக ஒரு பெண்ணின் மனதைக் கிளறி வேடிக்கை பார்க்கும் நேர்மையற்ற குணம் படைத்தவராகத் தோன்றவில்லை.

ஒரு சமயம் இரண்டொரு பெண்கள் அவரைப் பார்த்துச் சிரித்தார்கள். ஒரு வேளை அவர் என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதை அவர்கள் கவனித்திருக்கலாம். அவர் தங்களை அவ்வாறு உற்றுப் பார்க்கவில்லையே என்பதற்காக அவர்கள் பொறாமை கொண்டும் சிரித்திருக்கலாம். எங்களுக்குள் உள்ள நெருங்கிய தொடர்பைப் பற்றி அவர்களுக்கு என்ன தெரியும்! காதல் என்பது ஆணும் பெண்ணும் எப்போதும் பேசிக் கொண்டும் எல்லா இடங்களுக்கும் சேர்ந்து போய்க் கொண்டும் இருப்பதுதானா!

எனக்கு அவர் மீது ஏற்பட்ட கோபமெல்லாம் பிறகு பறந்தோடி விட்டது. உண்மையான காதல் ஏற்பட்டு விட்டால், வாயைத் திறந்து பேசாமலேயே ஒருவரை யொருவர் நன்கு அறிந்து கொள்வது எளிதல்லவா!

அவர் என்னுடைய பொறுமையைச் சோதித்துப் பார்க்கிறார் போலிருக்கிறது. நன்றாகப் பார்க்கட்டும். அந்தச் சோதனையில் தேற நான் தவற மாட்டேன். என்றைக்காவது அவர் பேசித்தானே ஆக வேண்டும். என் ஆயுட்காலம் முடியும் வரையில் அவர் இவ்விதமே மௌனமாக இருந்துவிடப் போவதில்லை, என்றெல்லாம் என்னை நானே சமாதானம் செய்து கொண்டேன்.

என்னைப் போலவே அவர் மனதிலும் பெரும் புயலும் போராட்டமும் ஏற்பட்டிருந்தன என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

இத்தகைய போராட்டத்திலும் அபூர்வமான ஓர் ஆனந்தம் இருக்கத்தான் செய்தது.

எனக்கு உடம்பு சௌகரியமாகத்தான் இருந்தது. அப்படி யிருந்தும் நான் ஒரு நோயாளி போல எனக்குத் தோன்றியது.

எப்போதும் என் அறை எவ்வளவு சுத்தமாக இருக்கும், தெரியுமா! நான் என் அறையை மிகவும் சுத்தமாக வைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்து என் தோழி கூட ஆச்சரியப்படுவாள்.

ஆனால் அவரைப் பார்த்ததிலிருந்து என் அறை தூசி படிந்து கிடந்தது. என் மேஜைமீது கண்ட சாமான்கள் கிடக்கலாயின. குடிப்பதற்காகக் கொண்டு வைக்கும் தண்ணீர் சிறிதும் குறையாமல் அப்படியே இருந்தது.

நான் அவருக்காகப் பொறுமையுடன் காத்திருப்பதைப் போல, அவரும் எனக்காகப் பொறுமையுடன் காத்திருந்தார் என்பது நிச்சயம்.

எனினும் எவ்வளவு காலம் காத்திருப்பது! அதற்கும் ஓர் எல்லையில்லையா! இனி என்னால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. அவர் என்னுடன் பேசித்தான் தீர வேண்டும். இவ்விதம் யாதொரு பலனுமின்றி நம்பிக்கையின் மீது உயிர் வாழ்வது கொஞ்சம் கொஞ்சமாகத் தற்கொலை செய்து கொள்வதற்கு ஒப்பாகும்.

நான் நடனசாலைக்குச் செல்ல விரும்பவில்லை. யாருடனும் நடனம் செய்வதிலும் எனக்கு விருப்பமில்லை. நான் அவரைப் பார்ப்பதற்காக மாத்திரமே நடனசாலைக்குச் சென்றேன்.

தோட்டம், ஜனக்கூட்டம் இராத சிறிய ஹோட்டல் போன்ற ஓரிடத்தில் தனிமையாக அவரைச் சந்திக்க வேண்டும் என்பது என் ஆர்வம்.

நடனசாலையில் பல ஆடவர்கள் நடனம் செய்வதற்கு என்னை அழைத்தார்கள். நான் வர முடியாது என்று சொல்லி விட்டேன். அவர்களைக்

கண்டால் எனக்கு வெறுப்பாக இருந்தது. நடனத்துக்கு வர விருப்பம் இல்லாதவள் நடனசாலையில் வந்து ஏன் உட்கார்ந்து கொண்டிருக்கிறுள் என்று அவர்கள் நினைத்திருக்கலாம். என்னுடைய ஹிருதயத்தில் உள்ள இரகசியத்தைப் பற்றி அவர்களுக்கு என்ன தெரியும்!

"அவர் ஏன் என்னுடன் பேச முயற்சிக்கவில்லை! கடவுளே! இப்போது தெரிந்தது. என் உடை ஒரு மாதிரியாக இருந்திருக்கலாம். நான் அழகாக வாரிக் கொண்டு, முகத்தைச் செயற்கை அலங்காரங்களினுல் அழகு செய்து கொள்ளாமல் இருந்திருக்கலாம். சரி, சரி! இனி அவ்விஷயத்தில் நான் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கப் போகிறேன்" என்று சங்கல்பம் செய்து கொண்டேன்.

*　　　*　　　*

அன்று என் தோழியுடன் நான் நடனசாலைக்குப் புறப்பட்டேன். வழக்கத்தைக் காட்டிலும் அன்று சிறிது நேரம் ஆகி விட்டது. என் தோழி ஓயாமல் பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் வந்தாள். அவள் சிரிப்பும் பேச்சும் எனக்குச் சிறிதும் பிடிக்கவே இல்லை.

குறித்த நேரத்தில் என்னைக் காணுததால், அவர் நடனசாலையை விட்டுப் போய் விட்டாரோ என்று ஏங்கித் தவித்தேன்.

இல்லை, இல்லை; வழக்கம் போல் அங்கு உட்கார்ந்திருந்தார்! என்னை உற்றுப் பார்த்தார். 'அதோ அவள் வந்து விட்டாள்' என்று அவரது மனமும் கண்களும் குதூகலம் அடைவது எனக்குத் தெரிந்தது.

அவரைப் பார்த்து என் தோழி ஏன் அப்படி உரக்கச் சிரித்தாள்! நானும் அவளைப் போலவே இருப்பேனென்று அவர் நினைத்துக் கொண்டு விட்டால் என்ன செய்வது!

அன்றுதான் என் தோற்றம் மிகவும் வசீகரமாக இருந்தது. அன்று நான் என் தோழியைப் போல் செயற்கைப் பூக்களைத் தலையில் வைத்துக்கொள்ளவில்லை; முகத்தில் எல்லை மீறிப் பவுடரை அப்பிக் கொள்ளவில்லை. அன்று என் முகத்தைப் பார்த்தவர் நான் பவுடர் போட்டுக் கொண்டிருந்தேன் என்று நினைக்கவே மாட்டார்கள். என்னுடைய இயற்கை நிறம் அதுதான் என்று எண்ணுவார்கள். என் தோழியைப்போல் நான் இமிடேஷன் நகை எதுவும் போட்டுக் கொள்ள வில்லை.

அன்று அவரும் மிகவும் வசீகரமாகத் தோன்றினர். அவர் முகத்தில் உள்ள பிரகாசம் வேறு ஒருவர் முகத்திலும் இல்லை.

அன்று அங்கு யாராவது என்னை அவமதித்தால் அவர் எனக்காகப் பரிந்து பேசியிருப்பார் என்பதில் சந்தேகமில்லை. நான் இனி அவருடைய பாதுகாப்பில்தானே இருந்து வரவேண்டும் என்று பரவசம் அடைந்தேன். எனக்கு அவர் மீது அவ்வளவு மகத்தான நம்பிக்கை ஏற்பட்டது.

நல்ல வேளை! அன்று அந்த இடத்துக்குப் போகவேண்டாம் என்று நினைத்துக் கொண்டிருந்தேனே! ;என்ன பைத்தியக் காரத்தனம்!

அன்றைய தினம் அவர் உட்கார்ந்திருந்த இடத்துக்கு அடுத்துள்ள மேஜைதான் காலியாக இருந்தது. என் தோழி என் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனுள். அந்த மேஜைக்கு அருகில் சென்றதும் நான் தலையைக் குனிந்து கொண்டேன். என் முகத்தில் விவரிக்க முடியாத ஒரு மாறுதல் ஏற்பட்டது.

"இங்கு யார் இருக்கிறுர்கள்! முகத்தை ஏன் இப்படி வைத்துக் கொண்டிருக்கிறுய்!" என்று அவள் உரக்கக் கத்தினுள்.

எனக்கு வெட்கம் தாங்க முடியவில்லை. உடனே நடனசாலைக்கு வெளியில் ஓடி விடலாமா என்று நினைத்தேன். நல்ல வேளையாக அதற்குள் என் தோழி அவள் நண்பனுடன் நடனம் செய்யப் போய் விட்டாள்.

என்னைச் சில இளைஞர்கள் நடனம் செய்ய அழைத்தனர். நான் 'முடியாது' என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டேன்.

அன்று என் ஹிருதயம் ஏன் அப்படி அடித்துக் கொண்டதோ, தெரியவில்லை! என் மனம் மிகவும் அமைதியாக இருப்பது போல் நான் காட்டிக் கொள்ள முயற்சித்தேன்.

அன்று நான் வேண்டு மென்றே அவருக்கு அருகில் உள்ள அந்த மேஜையில் வந்து உட்கார்ந்து கொண்டதாக அவர் நினைத்தாரோ என்னவோ! அவர் என்னையே உற்றுப் பார்த்தார்.

எல்லோரும் யாதொரு கவலையுமின்றி நடனமாடிக் கொண்டிருக்கும் அந்த இடத்தில் நானும் அவரும் மாத்திரம் மகத்தான மனப்போராட்டம் காரணமாகச் சிலைபோல் உட்கார்ந்திருந்தோம்.

நடனம் முடிந்து எல்லோரும் அவரவர் மேஜைக்கு எதிரில் வந்து உட்கார்ந்து கொண்டனர். என் மேஜைக்குப் பக்கத்திலும் சிலர் வந்து உட்கார்ந்தனர். நான் அவருக் கருகில் நகர்ந்தேன்.

அவர் சட்டை என்மீது பட்டது. உடனே ஒரு வித மின்சார சக்தி என் உடல் முழுவதும் ஊடுருவிப் பாய்வதுபோன்ற பிரமை ஏற்பட்டது.





அவர் முகம் எப்படி இருக்கிறதோ! மெதுவாக அவரைக் கடைக் கண்ணால் பார்த்தேன். அவர் முகத்தில் புன்முறுவல் தவழ்ந்து கொண்டிருந்தது. அவர் எதையோ எதிர் பார்ப்பவர் போல் தோன்றியது.

தெரிந்து விட்டது. நான் அவருடன் முதலில் பேச வேண்டும் என்று எதிர் பார்க்கிறார் என்றது என் மனம்.

மனம் ஒத்துவிட்டால் யார் முதலில் பேசினால் என்ன!

"இன்று மிகவும் உஷ்ணமாக இருக்கிறது!" என்று நான்பேச்சை ஆரம்பித்தேன்.

"ஆமாம்" என்றார் அவர் நிதானமாக.

நான் நாலு வார்த்தைகள் பேசினால் அவர் ஒரு வார்த்தைதான் பேசினார். நான் முற்றிலும் அவர் வசப்பட்டு விட்டேன் என்பது அவர் அபிப்பிராயம்.

"இந்த நடனசாலையில் பாண்டு வாத்தியம் நன்றாக வாசிக்கிறார்கள்."

"மோசமாக இல்லை."

"நீங்கள் நடனம் செய்வதில்லையா?"

"நடனம் என்றாலே எனக்குப் பிடிப்பதில்லை" என்று சொல்லிவிட்டு முகத்தை அப்பால் திருப்பிக் கொண்டார்.

பிறகு எங்களுக்கிடையே சிறிது நேரம் மௌனம் நிலவியது. அப்போது அவர் பல மைல்கள் தூரத்துக்கு அப்பால் இருப்பதுபோல் எனக்குத் தோன்றியது.

திடீரென்று என் கைமீது அவர் தம்முடைய கையை வைத்தார். எனக்குக் கூக்குரலிட வேண்டும் போல் இருந்தது.

நான் ஒரு பைத்தியக்காரி! எதற்காகக் கூக்குரலிடவேண்டும்! அவரது சரீரம் என்மீது பட வேண்டும் என்பதற்காகத்தானே இத்தனை நாள் என் மனம் படாதபாடு பட்டது!

அவர் என்னைப் பார்த்தார். அந்தப் பார்வையில் அன்பும் ஆதரவும் ததும்பின; அதே சமயம் வேதனையும் இரக்கமும் தென்பட்டன.

இதை யெல்லாம் என் தோழி கவனித்துக் கொண்டிருந்தது எனக்குத் தெரியாது.

அவள் உரக்கச் சிரித்தாள். நான் அவளைப் பார்த்தபோது அவள் கண்ணைச் சிமிட்டி ஏதோ ஜாடை காட்டினாள்.

நான் வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டேன். "சரியான புள்ளியைத்தான் பிடித்திருக்கிறாள்" என்று அவள் தன் நண்பனுடன் சொல்லிக் கொண்டு போனது என் காதில் விழாமலில்லை.

எனக்கு அன்று நேரம் செல்லுவதே தெரியவில்லை. இரவு வெகு நேரமாகி விட்டதால் நடனசாலையிலிருந்து பெரும்பாலோரும் திரும்பி வீட்டுக்குச் சென்று விட்டார்கள்.

அவர் என்னையே பார்த்துக் கொண்டிருந்தாரே தவிர, மேற்கொண்டு ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அவர் என்னைப் பார்ப்பது என்னைக் கட்டித் தழுவுவது போல் இருந்தது!

எனினும் அவர் என்னைக் காதலிப்பது உண்மையாயின் அவர் ஏன் அவ்விதம் சோகமே உருவெடுத்தாற்போல் உட்கார்ந்திருக்க வேண்டும்!

என் மனம் பதை பதைத்தது. ஒரே வார்த்தையில் அவர் என்னை ஆனந்த பரவசம் அடையும்படி செய்திருக்க முடியாதா! என் கவலையையும் சந்தேகத்தையும் முற்றிலும் நீர்த்திருக்க முடியாதா, என்ன!

இவ்வாறாக என் மனம் போராடிக் கொண்டிருக்கையில் அவர் ஒரு வெடிகுண்டைத் தூக்கிப் போட்டார்.

"நீ வீட்டுக்குப் போகலாம். இனிமேல் இவ்விடத்தில் நீ இருப்பது உசிதமல்ல. என்னை மன்னித்து விடு. நான் இன்னும் சிறிது நேரம் கழித்து என் வீட்டுக்குச் செல்லுகிறேன்" என்றார்.

அவர் அவருடைய வீட்டுக்கும் நான் என்னுடைய வீட்டுக்கும் செல்வதற்காகவா இவ்வளவு காலம் பொறுமையுடன் காத்திருந்தேன்!

என் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாகப் பெருகி வழிந்தது. நான் அவருடைய கையை இறுகப் பற்றிக் கொண்டேன்.

"நான் காண்பது கனவுதான்; உண்மையல்ல. நீங்கள் என்னை இப்படிக் கைவிட்டு விட்டுச் செல்லக்கூடாது. நான் உங்களை விட்டுப் போக மாட்டேன்" என்று கதறினேன்.

"அழாதே, அழாதே!" என்று அவர் என்னைத் தேற்றினார். இந்த வெறும் வார்த்தைகள் எனக்கு ஆறுதலை அளித்து விடுமா!

என் கண்களிலிருந்து அருவிபோல் கண்ணீர் சொரிந்ததைப் போல என் வாயிலிருந்தும் அருவி போல் வார்த்தைகள் வந்து கொட்டின.

"இவ்வாறு செய்வதற்கு உங்களுக்கு உரிமையில்லை. நான் இரவு பகலாக உங்களைப் பற்றியே கனவு கண்டு வந்தேன். உங்களை என் உயிருக்கு ஒப்பாக மதித்து வந்தேன். இது உங்களுக்கும் தெரியும். என் ஆசையை ஆரம்பத்திலேயே உங்களால் கத்தரித்து விட்டிருக்க முடியும். அவ்விதம் செய்யாமல் என் ஆசையைத் தூண்டி விட்டீர்கள்; என் ஹிருதயத்தில் காதலை வளர்த்தீர்கள்; இரவு பகலாகத் தங்களையே எண்ணி எண்ணி ஏங்கும்படி செய்தீர்கள்; எங்கு பார்த்தாலும் உங்களுடைய பிம்பமே என் கண்களுக்குத் தெரியும்படி செய்தீர்கள்.

ஒரு சமயம் உங்களைப் போன்ற முகத்தோற்றமுள்ள ஒருவர் தெருவில் போய்க் கொண்டிருந்தார். நீங்கள்தானோ என்று நினைத்து வெட்கமில்லாமல் அவரை வெகு தூரம் பின் தொடர்ந்து சென்றேன். என் அறையில் நான் தனியாக இருக்கும்போது உங்களுடன் பேசுவதுபோல் நினைத்துக் கொண்டு உரத்துப் பேசுகிறேன். நான் உடை உடுத்திக் கொள்ளும்போது உங்களுக்கு எந்த உடை பிரியமாக இருக்கும் என்று ஊகிப்பதில் ஒவ்வொரு நாளும் என் மனம் நாட்டம் கொள்ளும்.

உங்களை மனதில் கொண்டே நான் வாழ்கிறேன், உடை உடுத்திக் கொள்கிறேன், பேசுகிறேன். உங்களுக்குப் பிரியமில்லாத உடைகளை நான் உடுத்திக் கொள்ள மாட்டேன். உங்களுக்குப் பிரியமில்லாத பேச்சை நான் பேசமாட்டேன்.

இவ்விதம் என் வாழ்க்கையை அடியோடு நான் மாற்றிக் கொண்டபின், இப்போது என்னைக்

கைவிட முற்படுவது நியாயமா ! இனி நான் என்ன செய்வது ! என் வாழ்க்கை என்ன ஆவது !''

இவ்வாறாக நான் ஆவேசத்துடன் பேசியதைக் கேட்டும் அவர் வாய் திறக்கவில்லை. தலையைக் குனிந்த வண்ணம் உட்கார்ந்திருந்தார்.

அவர் கண்களிலும் கண்ணீர் ததும்பியது. அவரையும் ஏதோ வேதனை வாட்டுகிறது என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

''மனம் விட்டுப் பேசுங்கள் ; ஒன்றையும் மறைக்காதீர்கள் '' என்று கடைசியாக அவர் கையைப் பிடித்துக்கொண்டு உரக்கக் கத்தினேன்.

அச்சமயம் என் ஹிருதயத்தில் புயல் அடித்துக் கொண்டிருந்ததெனினும், அந்த நடன சாலையிலும் வெளி உலகிலும் அமைதி நிலவியது.

எனக்கு அவர் அளிக்கப்போகும் பதில் என்ன ! அப்போது ஒரு விநாடி ஒரு யுகமாகத் தோன்றியது. எனது வாழ்வோ அல்லது வீழ்வோ அவர் கூறப்போகும் பதிலைப் பொறுத்திருந்தது.

அவர் பேச ஆரம்பித்தார். என் ஹிருதயம் என் தொண்டையை வந்து அடைத்துக் கொண்டுவிடும் போல் தோன்றியது

''குழந்தாய் ! உன்னைப் போல் என் மனமும் மிகுந்த வேதனைக்கு உள்ளாகி யிருக்கின்றது. என்னை மன்னித்துவிடு. இன்னும் சிறிது காலத்தில் நாம் இருவரும் இச்சம்பவத்தை அடியோடு மறந்துவிட முயற்சிக்க வேண்டும். ஏனெனில் நாம் இருவரும் என்றென்றும் பிரிய வேண்டியவர்கள்தான்'' என்றார் அவர்.

இதைக் கேட்டதும் என் தலையில் பேரிடி விழுந்தது போலிருந்தது. இருந்தாலும் அவர் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டு விம்மியவாறே,'' ஏன் !'' என்று கேட்டேன்.

''ஏனு !''— அவர் ஒரு பெருமூச்சு விட்டார். அவரது பூர்வ பீடிகையிலிருந்து அவர் பயங்கரமான ஓர் உண்மையைச் சொல்லப் போகிறார் என்று தோன்றியது. எத்தகைய பயங்கரமான உண்மையையும் கேட்பதற்குத் தயாரானேன்.

''ஏன் முடியாது என்பதை உனக்குச் சொல்லித்தான் தீர வேண்டுமா !'' என்றார் தயங்கிக்கொண்டே.

'' ஆமாம், ஆமாம்'' என்று உரக்கக் கத்தினேன்.

'' சரி '' என்று கூறிய அவர் என்னைத் தன் அருகில் இழுத்துத் தழுவிக் கொண்டார். அந்த ஒரு விநாடி எனக்கு எங்கேயோ சொர்க்க லோகத்தில் இருப்பது போல் இருந்தது.

'' இதுதான் நமது கடைசிச் சந்திப்பு '' என்றார்.

அதற்குமேல் அவர் ஒரு வார்த்தையும் பேசவில்லை. நாற்காலியிலிருந்து எழுந்து நின்றார்.

ஐயோ ! நான் காண்பது கனவா! அது உண்மை என்பதை என்னால் நம்பவே முடியவில்லை. அப்போது என்னை அறியாமல் எனக்குச் சிரிப்புவந்தது.

என்னை யாரோ சவுக்கினால் அடிப்பது போல் இருந்தது. பயங்கரமான உண்மையைத் தெரிந்து கொண்டேன். அவர் என் இடுப்பு அளவு உயரமே இருந்தார். அவர் ஓர் அரை மனிதர், ஒரு குள்ளர் என்ற பயங்கரமான உண்மை வெளியாயிற்று.

அவ்வளவுதான்! அந்த இடத்தைவிட்டு ஓட்டம் பிடித்தேன். பிறகு அவரைத் திரும்பிப் பார்க்கவேயில்லை. நான் ஓடிக்கொண்டே யிருந்தேன்....

அதை யெல்லாம் குறித்து நான் இப்போது சிறிதும் வருந்தவில்லை. எதற்காக நான் வருந்த வேண்டும் ! அதெல்லாம் என்னுடைய கனவில் நிகழ்ந்த விநோதமான சம்பவங்கள்தானே !





நான் போகவில்லை!

அன்று அநசூயாதேவி எழுதிய நாடகம் அரங்கேற்றப் படுவதா யிருந்தது. அதற்கு வேண்டிய முயற்சிகளை யெல்லாம் அநசூயாதேவியே எடுத்துக் கொண்டிருந்தாள். தன் நாடகம் அரங்கேற்றப்படுவது என்றால் யாரும் அக்கறை கொள்வது இயல்பு தானே? பல பிரபலஸ்தர்களுக்கு அழைப்பு அனுப்பி இருந்தாள். அழைப்பு அனுப்பியவர்கள் எங்கேயாவது வந்து விடாமல் இருந்து விடுவார்களோ என்ற எண்ணத்தில் நேரில் போயும் அழைத்திருந்தாள்.

அப்படி யிருக்கும்பொழுது பிரபல புள்ளியான வித்துவான் வேத நாயகத்துக்கும் அழைப்புப் போவது இயல்புதானே? அதுவும் வேத நாயகம் தமிழ் நாட்டில் விரல்விட்டு எண்ணி விடக்கூடிய பிரபல நாடகாசிரியர்களில் ஒருவர். அப்படி யிருக்கும்பொழுது அவர் நாடகத்துக்கு வராமல் இருந்தால் சபை சிறக்குமா? ஆகவே, ஒரு தடவைக்கு இரண்டு தடவையாக அநசூயா தேவியே அவர் வீட்டுக்குச் சென்று நேரில் அழைத்து வந்திருந்தாள்.

குறிப்பிட்ட நேரத்துக்கு நாடகக் கொட்டகைக்கு எல்லோரும் வந்து விட்டனர். அழைப்புக் கிணங்கப் பிரபலஸ்தர்கள் எல்லாரும் அநேகமாக வந்துவிடவே, கூட்டம் கொட்டகை முழுவதும் குழுமி விட்டது. பகட்டான பிரசாரம் செய்தால் கூட்டம் கூடுவதற்கு என்ன குறைச்சல்?

என்றைக்கும் கனகச்சிதமாகக் குறிப்பிட்ட நேரத்துக்கு வரும் வேத நாயகத்துக்கு அன்றைக்கென்று என்னவோ சிறிது நேரம் ஆகிவிட்டது. அவருக்கு இடம் பிடித்துக் கொடுப்பது அநசூயாதேவிக்குப் பெரும்பாடாகி விட்டது. கடைசியில் அவள், தான் அமர்ந்திருந்த ஆசனத்துக்குப் பின்னால் இருந்த ஆசனத்தில் சௌகரியமாக அவருக்கு இடம் தேடிக் கொடுத்தாள்.

வித்துவான் வேதநாயகம் தம் ஆசனத்தில் அமர்ந்ததும் அவருக்காகவே அவ்வளவு நேரம் நிறுத்தப்பட்டிருந்தது போல நாடகம் ஆரம்பமாகியது.


எவ்வளவு நாழிகை தான் ஒருவர் தம் ஆசனத்தில் ஒரே மாதிரி அசையாமல் உட்கார்ந்திருக்க முடியும்? கைகால்களை வலிக்காதா? ஆகவே, வேதநாயகம் சிறிது நேரத்துக்கெல்லாம் தம் சௌகரியத்தை உத்தேசித்து முன் பக்கமாகக் குனிந்து உட்கார்ந்தார்.

கொஞ்ச காலமாக வேதநாயகமும் தாடி வளர்த்து வந்தார். இந்தக் காலத்தில் தான் தாடி வளர்ப்பது என்பது பெரிய மனிதர்களுக்கு ஒரு அங்கமாகி விட்டதே! டாகுர், பர்னுட்ஷா போன்ற பெரிய மேதைகள் தாடி வைத்துக் கொண்டிருக்கும் பொழுது வேதநாயகம் மட்டும் வைத்துக்கொள்ளாமலிருந்தால் நன்றாயிருக்குமா? ஆகவேதான் அவரும் நீண்ட தாடி வளர்த்திருந்தார்.

அவர் குனிந்ததும் முன்னால் உட்கார்ந்திருந்த அநசூயா தேவியின் கழுத்துப் புறத்தில் அவருடைய தாடி பறந்தது. அநசூயா தேவிக்குத் தன் தலைமயிர்தான் அவிழ்ந்து விட்டதோ என்று தோன்றவே, தன் தலையில் செருகியிருந்த ஊசியை எடுத்து அவருடைய தாடியையும் சேர்த்துக் செருகிக் கொண்டாள்.

சிறிது குனிந்த வண்ணம் நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த வேதநாயகத்துக்கு அது அசௌகரியமாகத் தோன்றவே, மறுபடியும் நிமிர்ந்து உட்கார முயன்றார்.

அப்பொழுது தம் தாடியை யாரோ பற்றி இழுப்பது போலப் படவே, அவர் கூர்ந்து கவனித்தார். அநசூயா தேவியின் தலை மயிருடன் தம் தாடி செருகப்பட்டிருப்பதைக் கண்டதும் அவர், "அநசூயாதேவி! நான் நாடகம் முடியும் வரை இருந்து பார்த்து விட்டுப் போகிறேன். நாடகம் நன்றாயில்லா விட்டாலும் நடுவில் எழுந்திருந்து போக மாட்டேன். நீங்கள் என்னைத் தாராளமாக நம்பலாம். தயவு செய்து என் தாடியைத் தங்கள் கொண்டை யிலிருந்து அவிழ்த்து விட்டு விடுங்கள்!" என்றார்.—பி. வீ.



கணவன் :—சேஷன் எங்கேடி?

மனைவி :—சேஷன் ரேஷன் வாங்கப் போயிருக்கிறான்.

கணவன் :—சுப்பு எங்கே?

மனைவி :—சுப்பு உப்பு வாங்கப் போயிருக்கிறான்.

பதில் சொல்லுங்கள்!

கே.எஸ்.ஏஸ் ராகவன்



நான் ஒரு பத்திரிகையில் உதவி ஆசிரியராக இருக்கிறேன். "ஊரத்துப் பச்சை" என்று சொல்லுவார்களே, அதனால்தானோ என்னவோ, பார்ப்பவர்களுக் கெல்லாம் என் வேலை வெகு சுலபமானதாகத் தோன்றிக்கொண் டிருக்கிறது.

பத்திரிகையில் என் பல அலுவல்களில் சில "கேள்வியும், பதிலும்" என்னும் பகுதியை நிரப்புவது தான். நான் சேர்ந்த புதிதில் எங்கள் பத்திரிகைகளின் பிரதிகள் ஆபீஸை விட்டுப்போக மனமில்லாமல் அங்கேயே பெருவாரியாகத் தங்கிவிட்டன. இந்தச் சதியைத் தகர்ப்பதற்குத்தான் "கேள்வியும் பதிலும்" என்ற பகுதியை எங்கள் ஆசிரியர் ஆரம்பித்தார். முதல் முதலில் கேள்விகள் கேட்பதும் அடியேன்தான்; அதற்குப் பதில் சொல்வதும் அடியேன்தான்.



ஒரு சில பிரச்னைகள் எழுபத்தைந்து வயதுக் கிழவர்கள் வாயிலாக வரும்: "என்னுடைய எழுபத்தாறும் வயதில் நான் கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறேன். உங்கள் அபிப்பிராயம் என்ன! ஜாதகம் இணைக்கப்பட் டிருக்கிறது; சொத்து நாலு லக்ஷம்; நாலு மனைவிகள் இறந்து விட்டார்கள்; அவர்கள் நகைகள் தான் எனக்கு மிக ஆதரவாக இருக்கின்றன" என்ற கேள்விக்கு நானே பதில் கொடுக்காமல் ஸ்திரீ நேயர்களின் அபிப்பிராயத்திற்கு விட்டு விட்டேன்.

அதனால் எனக்கு ஏற்பட்ட பலன்: 695 கடிதங்கள் வந்தன. எல்லாம் ஒரே கேள்வியைத்தான் திருப்பிக் கேட்டன. "அவர் விலாஸம் எங்கே!" இது ஏதடா பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்துவிட்டதே என்று, மௌனம் சாதித்தால் எல்லாம் சரியாகப் போய்விடும் என்று இருந்தேன். கொஞ்சநாட்களில் இந்த 695 பேரில், 545 பேர் ஆபீஸை முற்றுகை போட ஆரம்பித்து விட்டார்கள். "ஜாதகம் எங்கே!" "அவர் ஜாதகம் எங்கே!" என்று அவர்கள் போட்ட கூக்குரலில், தலையங்கம் எழுதிக் கொண்டிருந்த எங்கள் ஆசிரியர், தலையங்கத்திற்குத் தலைப்பாக, "சோதிடம் ஒழிக!" என்று எழுத அது அப்படியே அச்சாகி, எங்கள் சோதிடப் பகுதியையே ஒழித்து விடப் பார்த்தது! அந்தப் பகுதியால்தான் பத்திரிகை நடக்கிறது என்பது முதலாளியின் அபிப்பிராயம். ஆசிரியரின் காலபலன் நன்றாக இருந்தது. அவர் தப்பிப் பிழைத்தார்.

நல்லது; என்னுடைய "கேள்வியும் பதிலும்" பகுதி நாளொரு கேள்வியும் பொழுதொரு பதிலுமாக வளர்ந்து கொண்டே வருகிறது. பதில் கேள்வியைப் பொறுத்தது. மாதிரி வேண்டுமா!

கேள்வி:—தலை நரையைப் போக்குவ தெப்படி!

பதில்:—தலையை அடிக்கடி உபயோகிக்க வேண்டிய அவசியம் இல்லாவிட்டால் நறுக்கி எறிந்து விடலாம். அப்படியும் குணம் இல்லாவிட்டால் தயவு செய்து மறுபடியும் எழுத வேணும்.

குழந்தையின் கேள்வி:—என் அப்பாவும் அம்மாவும் எப்போதும் சண்டை போட்டுக்கொண்டே இருக்கிறார்களே! அதற்கு என்ன பண்ணுவது என்று சொல்லுங்கள்.

பதில்:—உன் வீட்டுக்கும் பக்கத்து வீட்டுக்கும் நடுவில் இருக்கும் சுவரில் பெரிதாக ஒரு ஓட்டை பண்ணி வைத்துவிடு. அப்பா, அம்மா இரண்டு பேரும் சண்டை போட ஆரம்பித்தவுடன், பக்கத்து வீட்டு மாமியை அது வழியாகக் கூப்பிடு. அப்புறம் சண்டை போட்டால் எனக்கு எழுது.



கேள்வி:—எனக்கு வயது 25. அடுத்த மாதம் கல்யாணம் நிச்சயமாகி யிருக்கிறது. உங்கள் அருமையான பொன்மொழிகளை வேண்டுகிறேன்.

பதில்:—கல்யாணமே வேண்டாம்!

கேள்வி:—நான் காதலிக்கும் பெண் என்னைத் திரும்பப் பார்க்க மாட்டேன் என்கிறாள். கடலில் விழுந்து உயிரை விட்டு விடலாமா என்று பார்க்கிறேன். (குளிரா யிருக்கிறதே என்றுதான் கொஞ்சம் யோசனையா யிருக்கிறது!)

பதில்:— பெண்மணிக்குக் கழுத்துச் சுளுக்கிக்கொண்டு இருக்கலாம். ஒரு பாட்டில் விளக்கெண்ணெய் — யாவே மார்க்குத்தான் முதல் தரம். ஆர்டர் செய்யும்போது எங்கள் பத்திரிகையின்

பெயரைக் குறிப்பிடவும் — அனுப்பினால், சாதகம் (கதைக்கு, காதலுக்கல்ல) ஏற்படலாம். ஜலம் மிகவும் ஜில் லென்று இருந்தால், வீட்டுக்கு எடுத்துக் கொண்டு வந்து தவலையில் கட வைத்துப் பிறகு உபயோகப்படுத்தலாம்...



• • •

ஒரு நாள் வழக்கம் போல் வந்த கடிதங்களைப் பார்த்துக் கொண்டு இருந்தேன். சாதாரணமாக இந்தக் கேள்விகளைக் கேட்பவர்கள் (என் மாதிரி) மாறு வேஷத்தில் கை தேர்ந்தவர்கள். காதல் சொட்டும் வார்த்தைகளை அள்ளி வீசும் "கன்னிகை" மீசை, தாடிக்குள் ஒளிந்து கொண்டிருக்கும் முரடன் என்பது எனக்குத் தெரியாமலில்லை. பெண்கள் குழந்தைகள் போலவும் ஆடவர் பெயரிலும் கையெழுத்தை மாற்றி எழுதுவதையும் நான் அறிவேன். ஆனால் அன்றையக் கேள்வியை எழுதியிருந்தவர் கையெழுத்தைப் பார்த்தவுடன், "ஐயோ, பாவம்!" என்றுதான் தோன்றிற்று. கள்ளம் கபடமற்றவர்கள் எழுதினால் இப்படித்தான் எழுதுவார்கள். ஒவ்வொரு எழுத்திலும் ஒரு கூச்சம். ஒவ்வொரு நடுக்கமும். "தயவு செய்து இதைப்பற்றி ஒருவரிடமும் சொல்ல வேண்டாம்" என்று பணிவாகக் கெஞ்சுவது போலிருந்தது.



"நான் ஸினிமாவில் நடிக்க விரும்புகிறேன். இதற்கு ஒரு வழி சொல்லவும்" என்ற இரண்டே வார்த்தைகள். கேள்வி கேட்பவர்கள் ஒவ்வொருவரும் பெயரையும் முழு விலாசத்தையும் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் கடிதம் குப்பைக் கூடையில் சேர்ந்துவிடும் என்பது ஷரத்து. மேற்படி கடிதத்திற்குக் கையெழுத்தே இல்லை. ஒரு மூலையில் 'மா' வென்று மட்டும் போட்டிருந்தது. எனக்கென்னவோ அதைக் குப்பைக் கூடையில் தள்ள மனமில்லை. அன்றையப் பத்திரிகையில், "தயவு செய்து, 'மா' தன் முழு விலாஸத்தையும் கொடுக்கவும். அப்போதுதான் பதில் எழுத சாத்தியமாகும்" என்று போட்டு வைத்தேன். எதிர் பார்த்தபடியே நாலைந்து பேர்கள் "மா"வின் பெயரில் கடிதம் எழுதியிருந்தார்கள்!

நல்ல வேளையாக கையெழுத்தின் உதவியால் உண்மையான 'மா'வின் கடிதத்தைப் பிரித்தேன். "ஐயோ! என் பெயரையும் விலாஸத்தையும் கேட்கிறீர்களே! என் சின்னம்மாவுக்குத் தெரிந்தால் என்னை உயிருடனேயே கொன்று விடுவாளே!" என்று மட்டும் எழுதியிருந்தது.

பாவம்! மாற்றாந் தாயின் கொடுமை பொறுக்க முடியாமல் தான் ஸினிமாவில் சேர்ந்துவிட விரும்புகிறாள் போலிருக்கிறது! ஸினிமாவில் சேரவேண்டுமென்றால் முகவெட்டு வேண்டுமே, பாடத் தெரிய வேண்டுமே ஆடத் தெரிந்திருக்க வேண்டுமே! "மா" இதிலெல்லாம் பயிற்சி பெற்றிருக்கிறாளா என்று எப்படிக் கண்டு பிடிப்பது! பத்திரிகையின் வழியாகக் கேட்கலாம் என்றால், மாற்றாந்தாய் கண்டு பிடித்து விட்டால்!

இப்படி நான் தவித்துக் கொண்டிருக்கும் போது, இரண்டு நாட்கள் கழித்து "மா"விடமிருந்து இன்னொரு கடிதம் — இல்லை அபயக் குரல் வந்தது. "நான் ஆவலுடன் உங்கள் பத்திரிகையைப் பார்த்து ஏமாந்து போனேன். நான் அதைப் படிப்பதற்கு எவ்வளவு சூழ்ச்சிகளைக் கையாள வேண்டியிருக்கிறது தெரியுமா! எங்கள் வீட்டிற்கு உங்கள் பேப்பர் வருவதில்லை. பக்கத்து வீட்டிற்குப் போய்ப் படிக்கலாம் என்றால், முறுக்கிய மீசையுடனும், 'ஜில்' என்று சிவந்த கண்களுடனும் அவர்கள் வீட்டில் இருக்கும் முரடன் அங்கு இல்லாதபோது போக வேண்டும். நேற்று அவன் இல்லை என்று நினைத்துப் போய்விட்டேன். உங்கள் "கேள்வியும் பதிலும்" பகுதியில் பாதி வாசித்துக் கொண்டிருக்கும் போது — தயவு செய்து எழுதுவதைக் கொஞ்சம் சுருக்கமாக எழுதவும். காகிதப் பஞ்சம் உங்கள் பத்திரிகைக்குக் கிடையாதோ! — அவன் அங்கே வந்து கனைத்தவுடன் என் பாதி உயிர் போய் விட்டது. போதும் போதாததற்கு வீட்டிற்கு வந்தவுடன் சின்னம்மா, 'என்னடி, அந்தக் காலாடியோடு என்ன குலாவல் வேண்டியிருக்கிறது! கல்யாணமாகாத பெண் இப்படிக் கேள்வி முறையில்லாமல் இருந்தால், இப்போது பெய்கிற மழையும் இனிமேல் பெய்யாது' என்று கத்த ஆரம்பித்து விட்டாள்.

"ஐயா எழுத்தாளரே! உமக்கு ஒரு வேண்டுகோள்: என் கேள்வியைக் கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டு விட்டீர்களானால் புண்ணியமாகப் போகும். எனக்கு ஸினிமாவும் வேண்டாம், ஒரு மண்ணும் வேண்டாம். முடிந்தால் உங்கள் பத்திரிகையில் இந்த ஊரில் ஆழமான கிணறு



எங்கிருக்கிறது என்று சொல்லுங்கள். அதனால் எனக்கு ஏதாவது பிரயோசனமுண்டு.''

இந்தக் கடிதத்தைப் பார்த்தவுடன் எனக்குத் திகிலாகப் போய்விட்டது. இப்பொழுதெல்லாம் ஆழமான கிணறுகளில் தண்ணீர் கிடையாது என்பது எனக்குக் கொஞ்சம் ஆறுதல் அளித்தாலும், ''மா'' ஒரு பக்கம் அவள் சின்னம்மாவிடமும், இன்னொரு பக்கம் எந்த முரட்டு ஆளிடமும் அகப்பட்டு என்ன கஷ்டங்கள் படுகிறாளோ என்பதை நினைக்க நினைக்க எனக்குத் தூக்கமே வரவில்லை. ''மா''வை எப்படிக் கண்டு பிடிப்பது!



அன்று முதல் மீசை வைத்துக் கொண்டிருக்கிறவர்களை யெல்லாம் உற்றுக் கவனிக்க ஆரம்பித்தேன். அத்துடன் அவர்கள் கண்கள் 'ஜிவ்' வென்று இருந்தால் போதும் கேட்கவே வேண்டாம்.

ஒருநாள் மார்க்கட்டில் ஒருவரைப் பார்த்தவுடன் ''மா''வைக் கண்டு பிடித்து விட்டதாகவே குதூகலப்பட்டேன். முறுக்கிய மீசையும், சிவந்த கண்களும் — ஏன், அவர் களைப்பும்—நான் தேடிக்கொண்டிருந்த லட்சிய புருஷன் இவன் தான் என்று அறை கூவின. கையிலிருந்த கத்திரிக்காயை அப்படியே போட்டு விட்டு அவரைப் பின் தொடர்ந்தேன். அப்போதுதான் இந்தத் துப்பறியும் நிபுணர்களுக்கு எவ்வளவு கொடுத்தாலும் தகும் என்று எனக்குத் தோன்றிற்று. சாதாரண ஆசாமி ஒருவரைப் பின் தொடருவதே இவ்வளவு கஷ்டமாயிருந்தால், ஒரு கொலை செய்தவனையோ அல்லது ஒரு கொள்ளைக்காரனையோ பின் தொடருவதானால்! அந்தப் பொல்லாத மீசைக்காரர் டீ கடைக்குள் நுழைந்தார்.

பத்து நிமிஷமாயிற்று, பதினைந்து நிமிஷமாயிற்று, ஆளைக்காணோம். உள்ளே போய்ப் பார்த்தால் அந்த ஆசாமி சாவகாசமாகப் பேப்பர் படித்துக் கொண்டிருக்கிறார்! அதிலும் ஒரு திருப்தி. எங்கள் பத்திரிகையில் என்னுடைய கேள்வியும் பதிலும் பகுதியைத்தான் படித்துக் கொண்டிருந்தார். (ஆசிரியரிடம் சொல்லவேண்டும். சம்பள உயர்வைப் பற்றிப் பேச இது ஒரு நல்ல சூசகம்.) நல்ல வேளையாக நான் போனவுடன் எழுந்துவிட்டார். நான் பார்க்கில் உட்காருவதே கிடையாது. முறுக்கிய மீசைக்காரரின் தயவால் அன்று ஒரு மணி நேரத்துக்கு மேல் திறந்த வெளியில் காற்று வாங்க முடிந்தது.

பிறகு ஒரு சாப்பாட்டு ஹோட்டலுக்கு அரை மணி நேரம் 'பாரா'. அங்கிருந்து வெற்றிலை பாக்குக் கடை. மீசைக்காரர் வேகமாக நடந்தார். சரி, இவ்வளவு நேரம் சிரமப்பட்டதற்குப் பலன் கிட்டப்போகிறது என்று உற்சாகமாக நானும் பின் தொடர்ந்தேன். அவர் ரயில்வே ஸ்டேஷனில் நின்றதும் எனக்குக் கொஞ்சம் ஏமாற்றமாகத்தானிருந்தது. அங்கு யாரோ ஒருவரிடம் பேச்சுக் கொடுத்தார். ''என் இவ்வளவு நாழிகை!'' ''சாமான்களெல்லாம் எங்கே!'' என்ற கேள்விகள் காதில் விழுந்தன. போதாக் குறைக்கு அந்த மீசைக்காரர் என் அருகில் வந்து, ''நான் ஊருக்குப் போய்விட்டு வரட்டுமா! இவ்வளவு நேரம் நான் கெட்டுப் போகாமல் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொண்டு வந்ததற்காக உங்களுக்கு என் மனமார்ந்த நன்றி'' என்று அவர் சொன்னதும், இனிமேல் யார் எவ்வளவு முறுக்காக மீசை வைத்துக் கொண்டிருந்தாலும், அவர்கள் கண் எவ்வளவு 'ஜிவ்'வென்று இருந்தாலும் — ஏன், அவர்கள் குதிரை போலக் கனைத்தாலும் கூட அவர்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை என்று ஒரு சங்கல்பம் செய்து கொண்டேன்.

அப்படி யென்றால் 'மா'வை எப்படித்தான் கண்டுபிடிப்பது! நினைக்கவே பயமாயிருந்தது; இருந்தாலும் அதைத் தவிர வேறு வழி யில்லாததால், என் கேள்வியும் பதிலும் பகுதியில் எழுதினேன். ''இந்த ஊரில் மிகவும் ஆழமான கிணறு......தெருக் கோடியில் இருக்கும் வீட்டின் பக்கத்தில் இருக்கிறது. சாயந்திரம் நாலு மணியிலிருந்து ஆறு மணி வரையில்தான் திறந்து இருக்கும்'' என்று பிரசுரித்தேன்.

சாயந்திரம் நாலு மணிக்கெல்லாம் கிளம்பி அங்கே போனேன். நெஞ்சு 'பட், பட்' என்று அடித்துக் கொண்டது. 'மா' இதைப் படித்தாளோ! என் சூசகத்தைப் புரிந்து கொண்டாளோ! அவள் எப்படி இருப்பாள்! அவள் கையெழுத்தில் இருந்த நடுக்கம் எனக்கு ஒரு முல்லைக் கொடியை ஞாபகப்படுத்திற்று. அவளைக் கண்டு தேற்ற வேண்டும்! மணி ஆறாகிவிட்டது. ஒருவரையும் காணோம். சரி, நாளைக்குப் பார்ப்போம் என்று வந்து விட்டேன்.

மறுநாள் கிளம்பும் சமயத்தில் ஆசிரியர் பிடித்துக் கொண்டு விட்டார். தலையங்கத்தை உரக்கப் படிக்க ஆரம்பித்து விட்டார். அபிஸீனியாவின் அரசியல் திட்டத்தை அலசி யிருந்தார். அபிஸீனியாவி லிருந்து அரேபியாவிற்குப் பாய்ந்து இராணின் எண்ணைக் கிணற்றில் போய் விழுந்தார். கிணறு என்றவுடன் எனக்குச் சுருக்கென்று 'மா'வின் ஞாபகம் வந்து விட்டது.

''ஸார், கிணற்றில் விழப்போகும் ஒரு பெண்ணை அவசரமாகக் காப்பாற்ற வேண்டும்'' என்று கத்திக் கொண்டே நான் கிளம்பி விட்டேன்.

கிணற்றங்கரைக்குப் போய்ச் சேர்ந்த போது மணி ஐந்தரை ஆகிவிட்டது. சுற்றுமுற்றும் பார்த்தேன். ஒருவரையும் காணோம். ஹா! இதென்ன! கடிதமும், அதன் மேல் ஒரு கல்லும் அதே ''மா''வின் எழுத்து! ''உங்கள் உபதேசத்திற்கு நன்றி. என் சின்னம்மாவிடமிருந்தும், முரடனிட மிருந்தும் தப்பிவிட்டேன். மா.''

என் நெஞ்சு வெடித்து விடும்போலிருந்தது. போலீஸ் ஸ்டேஷனைப் பார்க்க ஓடினேன்.

நாலடி எடுத்து வைக்கவில்லை, எதிர் வீட்டிலிருந்து சிரிப்புக் குரல் கேட்டது. பழகிய குரலாயிருக்கிறதே என்று திரும்பிப் பார்த்தேன். ஊருக்குப் போன முறுக்கிய மீசைக்காரர் அதற்குள் எப்படித் திரும்பி வந்தார்! கிணற்றுக்கு அருகிலே அவருக்கு என்ன வேலை!

இவ்வளவு நாளும் எல்லாருடைய கேள்விக்கும் நான் பதில் சொல்லியாகி விட்டது. இன்று என்னுடைய கேள்விக்கு நீங்கள் பதில் சொல்லுங்கள்!

தாய்மையில் பிரேமை

வசு

கோடை விடுமுறைக்குப் பள்ளிக்கூடம் மூடியதும் என் குழந்தைகளையும் என் மனைவி இந்துமதியையும் பங்களூரிலிருந்த என் சிறிய மாமனார் விருப்பப்படி அவர்களை அங்கே அனுப்பி விட்டு, நான் மட்டும் ஹோட்டலில் சாப்பாட்டை வைத்துக் கொண்டு ஆபீசுக்குப் போய் வந்த வண்ணமிருந்தேன். அன்று மாலை ஆபிஸ் விட்டதும் நேராகக் கடற்கரைக்குச் சென்று காற்று வாங்கிவிட்டு நான் குடியிருந்த வீட்டிற்கு வந்து சேருவதற்குள் மணி எட்டடித்து விட்டது.

முன் கட்டில் குடியிருந்த முகுந்த ராவ், என்னைக் கண்டதும், "ஸார், கல்கத்தாவிலிருந்து யாரோ ராதையாம். அந்த பெண்ணும் அவள் புருஷன் ராமமூர்த்தியும் உங்களைத் தேடிக் கொண்டு வந்திருந்தார்கள் இன்று சாயங்காலம் ஆறு மணிக்கு. நீங்கள் எப்பொழுது திரும்பி வருவீர்கள் என்று எனக்குத் தெரியாததால் அவர்களை உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கச் சொன்னேன். நீங்கள் இதுவரைக்கும் வராததால் இப்பொழுதுதான் அவர்கள் இரண்டு பேரும் புறப்பட்டுச் சென்றார்கள். மாம்பலத்தில் ராதையின் அத்தை வீடு இருக்கிறதாமே, அங்கேதான் தங்கியிருக்கிறார்களாம். அநேகமாக நாளைக்குத் திருச்சிக்குப் போகலாம் என்றிருக்கிறார்களாம். சௌகரியப்பட்டால் உங்களை ராதை அங்கே வரச் சொன்னாள். ராமமூர்த்தியும் அவ்விதமே என்னிடம் கூறினான்" என்றார்.

சுமார் பதினெட்டு வருஷங்களுக்கு முன்பு நான் திருவல்லிக்கேணியில் குடியிருந்த அதே வீட்டில் நாலைந்து குடும்பங்கள் இருந்தன. அவைகளில் புதிதாகக் கல்யாணமான குடும்பங்களில் என்னுடையதும் ஒன்று. எனக்கும் கல்யாணமாகி நாலைந்து வருஷங்கள் வரை குழந்தைகள் பிறக்கவில்லை. அந்தக் குறையை அதே வீட்டின் மாடியில் குடியிருந்த சங்கரய்யரின் இரண்டு வயதுக் குழந்தை ராதைதான் அவளுடைய மோகன உருவத்தாலும், மழலைச் சொல்லினாலும் மறக்கும்படி செய்தாள். முன்பிறவியில் விட்ட குறையோ என்னவோ, குழந்தை ராதைக்கு அந்த வீட்டிலுள்ள மற்றவர்களைவிட என்னிடம்தான் அதிகப் பற்றுதல். எனக்கும் ராதையிடம் விவரிக்க முடியாத ஒரு அலாதியான அபிமானம் ஏற்பட்டிருந்தது. அநேக நாட்கள் இரவில் ராதை என் கூடவே என் வீட்டில் சாப்பிட்டு விட்டு என் மனைவியின் மடியில் படுத்துத் தூங்கி விடுவாள்.

என்னுடைய ஆபீஸ் அலுவல் நிமித்தமாக நான் அடிக்கடி பம்பாய்க்குப் போய் வந்து கொண்டிருந்ததால் ராதை என்னைப் 'பம்பாய் மாமா' என்று பெயரிட்டு அன்போடு அழைப்பாள். அப்பொழுது என் உள்ளம் குளிரும்.

ராதைக்குப் பத்து வயதிருக்கும்போது திடீரென்று இரண்டே நாள் காய்ச்சலில் அவள் தாயாரை இழந்தாள். அது முதல் எனக்கும் இந்துமதிக்கும் ராதையினிடம் இருந்த பாசத்துடன் அவள் தாயில்லாப் பெண் என்ற காரணத்தால் அவள்மீது அதிகப் பற்றுதல் ஏற்பட்டது.

ராதைக்குக் கல்யாண வயது வந்ததும் அவளுக்குத் தகுந்த வரனைத் தேடுவதில் முனைந்தார் சங்கரய்யர். மூன்று வருஷம் தொடர்ந்தாற்போல் முயற்சி செய்தும் பலன் கிடைக்கவில்லை. இந்த சந்தர்ப்பத்தில்தான் ஒரு சமயம் நான் பம்பாய்க்குக் கிளம்பிக் கொண்டிருந்தேன். நானும் இந்துமதியும் பிரயாணத்திற்கு வேண்டிய சாமான்களைச் சேகரிப்பதில் ஈடுபட்டிருந்தோம். ராதை அங்கே வந்தாள். 'ராதை, நான் பம்பாய்க்குப் போகப் போகிறேன். திரும்பி வரும்போது உனக்கு என்ன வாங்கிக்கொண்டு வரவேண்டும்?' என்றேன். நான் பம்பாய்க்குப் போகும்போது ஒவ்வொரு தடவையும் தவறாமல் ராதையிடம் கேட்கும் கேள்வி இதுதான். ராதையும் வழக்கம் போல் 'உங்களுக்குத் தெரியாதா என்ன !' என்று சம்பிரதாயமாகப் பதில் சொல்லுவதுண்டு. ஆனால் இந்தத் தடவை ராதை பதில் சொல்லு முன் இந்துமதி குறுக்கிட்டு, 'இந்தத்தடவை நீங்கள் அவளுக்குச் சில்க்கும் ரிப்பனும் வாங்கிக் கொண்டு வருவது இருக்கட்டும். அவளுக்குத் தகுந்த நல்ல வரனைப் பார்த்துக் கொண்டு வாருங்கள்" என்று சொன்னாள்.

இந்துமதியின் வாயிலிருந்து வந்த சொற்கள் தெய்வ வாக்காகவே அமைந்து விட்டன. சொல்லி வைத்தாற்போல் அந்தத் தடவை நான் பம்பாய்க்குப் போயிருந்த சமயம் ராமமூர்த்தி என்ற பையனைப் பார்த்தேன். ராதைக்கு அவன் தகுந்த கணவன் என்று என் மனதிற்குப் பட்டது. ராதையின் தகப்பனார் சங்கரய்யரைத் தந்தியடித்து சென்னையிலிருந்து பம்பாய்க்கு வரவழைத்தேன். பிறகு நாங்கள் இருவரும் ராமமூர்த்தியின் பெற்றோர்களைக் கண்டு பேசினோம். எல்லாம் எதிர் பார்த்தபடி சுபமாக முடிந்தது. ஒரு நல்ல நாளில் ராதையும் ராமமூர்த்தியும் தம்பதிகளானார்கள், ராதையின் கல்யாணத்தை நானும் இந்துமதியும் கூட இருந்து கோலாகலமாக நடத்தி வைத்தோம் என்று சொல்லத் தேவையில்லை.

2

கல்கத்தாவிலிருந்து ராதையும் ராமமூர்த்தியும் என்னைப் பார்ப்பதற்காக வந்திருந்த தகவலை முகுந்தராவ் என்னிடம் தெரிவித்ததும், ராதையைப் பற்றிய சென்ற கால நிகழ்ச்சிகள் என் நினைவுக்கு வந்தன. முகுந்தராவ் எவ்விதத்தில் ராதை எனக்கு உறவு என்று கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்கும் முறையில் ராதையின் வரலாற்றைச் சுருக்கமாக அவரிடம் தெரிவித்து விட்டு, ராதையைப் பார்ப்பதற்காக மாம்பலத்திற்குச் சென்றேன். என்னைக் கண்டவுடன் ராதை வரவேற்று நமஸ்கரித்தாள். 'இந்துமதி மாமியைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலோடு தான் திருவல்லிக்கேணிக்கு வந்தேன். ஆனால் அவரும் குழந்தைகளும் பங்களூருக்குப் போயிருக்கிறார்களாமே!' என்று பேச்சைத் தொடங்கினாள் ராதை.

ராதையின் புக்ககத்துக் குடும்ப க்ஷேமலாபங்களைப் பற்றி விசாரித்தேன் நான். ராதையின் தேக ஆரோக்கியம் குறைந்திருப்பதாகப் பட்டது எனக்கு. பேச்சின் நடுவே "ஆமாம், ராதை ஏன்! உன் உடம்பு இளைத்திருக்கிறது !" என்றேன்.

"பம்பாயில் இருந்த வரைக்கும் என் உடம்பு சரியாகத்தானிருந்தது. மாப்பிள்ளைக்கு உத்தியோகம் உயர்ந்து கல்கத்தாவுக்கு மாறிப் போனது

முதல் உடம்புக்கு அடிக்கடி ஏதாவது உபத்திரவம் வந்து கொண்டிருக்கிறது'' என்றான்.

''யாராவது நல்ல டாக்டரிடம் போய் வியாதிக்குத் தகுந்த சிகிச்சை எடுத்துக் கொள்ளக் கூடாதா? உடம்பை இந்த நிலைமையில் வைத்துக் கொண்டிருப்பது சரியில்லை'' என்றேன்.

''எனக்கு ஒன்றிலும் நம்பிக்கையில்லை. மனசு சரியாக இருந்தால்தானே உடம்பு சரியாக இருக்கும்'' என்றாள் ராதை.

எனக்கும் மனம் குழம்பியது. ''என்ன ராதை நீ சொல்லுவது ஒன்றுமே எனக்குப் புரியவில்லை. 'என்ன, உனக்கும் ராமமூர்த்திக்கும் ஏதாவது மனஸ்தாபமா !'' என்றேன்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை...'' என்று சொல்லி விட்டு மேலும் பேசத் தயங்கினாள் ராதை.

நான் அதிகக் கவலை மடைந்தேன். 'ராதை, உன்னை ராமமூர்த்திக்குக் கலியாணம் செய்து வைத்ததில் எனக்கு உள்ள பொறுப்பு உனக்குத் தெரியாதது அல்ல. அதனால்தான் நான் உன்னுடைய கவலை எப்படிப்பட்டது என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். நீயும் ராமமூர்த்தியும் ஒருவரிடம் மற்றொருவர் மனம் கோணாமல் நடந்து கொள்ளுகிறீர்கள் என்று மட்டும் நான் அறிந்து கொண்டால் அதுவே போதும்'' என்றேன்.

'அவர் பின்னுக்கு இன்னும் குழந்தை பிறக்கவில்லை என்று என் மாமியாருக்கு மனத் தாங்கல். இப்பொழுது என் அகத்துக்காரருக்கும் நான் அதிர்ஷ்டமில்லாதவள் என்ற எண்ணம் இருக்கிறது போல எனக்குத் தோன்றுகிறது'' என்று ராதை கூறியபோதே அவள் கண்கள் கலங்கின.

இதைக் கேட்டதும் நான் திகிலடைந்தேன். ராதைக்கு எனக்குத் தெரிந்த வரையில் சமாதானம் சொல்லிவிட்டு, அவளிடமிருந்து விடை பெற்றுக் கொண்டேன். நான் அங்கே போயிருந்த போது, ராமமூர்த்தி வெளியே சென்றிருந்ததால், அவனை என்னால் சந்திக்க முடியவில்லை. நான் புறப்படும்போது, ''நாளைக்கு ராமமூர்த்தியை என்னை வந்து பார்க்கும்படி சொல்லு'' என்று ராதையிடம் சொல்லி விட்டு வந்தேன்.

அடுத்த நாள் ராமமூர்த்தி என்னைக் காண வந்திருந்தான். அவனைத் தகுந்த முறையில் வரவேற்று உபசரித்தேன். இருவருமாகக் காப்பி சாப்பிட்டு முடிந்ததும் சம்பாஷணை ஆரம்பமாயிற்று. பல விஷயங்களைப் பற்றிப் பேசிவிட்டுக் கடைசியாக ராதையின் உடல் நலக் குறைவைப் பற்றிப் பிரஸ்தாபித்தேன். 'ஆமாம், ஸார்! ராதையின் உடம்பு நாங்கள் கல்கத்தாவிற்குப் போனது முதல் சரியாகவே இல்லை. இரண்டு வாரம் சேர்ந்தாற் போல நடமாடினால் அதைத் தொடர்ந்து ஒரு வாரம் வியாதியாய்ப் படுத்துக் கொண்டு விடுகிறாள்' என்றான் ராமமூர்த்தி.

'உடம்போடு மட்டும் இல்லாமல் அவள் மனத்திலும் பெரிய கவலையிருக்கிறதுபோல் படுகிறது எனக்கு' என்றேன்.

'ஏதோ ஒரு சமயம் பேச்சோடு பேச்சாக என் தாயார் இன்னும் ராதைக்குக் குழந்தை பிறக்கவில்லையே என்று சொல்லி வைத்தாள். அதுவே ராதையின் மனதை உறுத்திக் கொண்டிருந்தது போலிருக்கிறது. இது நடந்து சில நாட்கள் கழித்து முன்பின் யோசியாமல் நானும் ஏதோ பேசிவிட்டேன். நான் சொன்ன வார்த்தைகள் ராதையின் மனசை இவ்வளவு தூரம் புண்படுத்திவிடுமென்று நான் எதிர்பார்க்கவில்லை' என்றான்.

'அப்படி என்ன தவறு நடந்துவிட்டது?' என்று கேட்டேன். அதன் முழு விவரத்தையும் அறிந்து கொள்ளும் நோக்கத்துடன்.

ராமமூர்த்தி மேலும் தொடர்ந்தான்: 'அப்படி ஒன்றும் பிரமாதமில்லை. ஆறு மாதத்துக்கு முன் அலகாபாத்திலிருந்து என் தமக்கை அவளுடைய குழந்தைகளுடன் கல்கத்தாவுக்கு வந்து என்னுடன் இரண்டு மாதம் தங்கியிருந்தாள். அவளுடைய மூன்று வயதான கடைசிக் குழந்தைக்கு அப்பொழுதுதான் 'டைபாய்ட்' ஜுரம் வந்து குணமாகி, தலைக்குத் தண்ணீர் விட்டிருந்தது. அந்தக் குழந்தைக்கு இன்னும் சில நாட்களுக்குப் பாலைத் தவிர வேறு ஆகாரம் ஒன்றும் கொடுக்கக் கூடாது என்று டாக்டர் சொல்லியிருந்தார். அப்பொழுது ஒருநாள் நான் ஆபீசை விட்டு வரும் போது மலிவாக இருக்கிறதென்று மல்கோவா மாம்பழங்கள் வாங்கிக் கொண்டு வந்திருந்தேன். அவைகளை ராதையிடம் கொடுத்தேன். அவள் அவைகளைக் காய்கறிக் கூடையில் வைத்துக் கூடையைக் காமிரா அறையில் வைத்திருந்தாள். என்னுடைய தமக்கை அவளுடைய கடைசிக் குழந்தையைத் தவிர மற்றக் குழந்தைகளுடன் அடுத்த வீட்டிற்குப் போயிருந்தாள். கடைசிக் குழந்தை மட்டும் தூங்கிக்கொண்டிருந்தது. தூங்கி எழுந்ததும் குழந்தை நேராக காமிரா அறைக்குள் போய்க் கீழே வைத்திருந்த காய்கறிக் கூடையிலிருந்த மாம்பழம் ஒன்றை எடுத்துக் கடித்துக் சாப்பிட்டுக் கொண்டிருந்தது.

ஏதோ சாமான் எடுக்க அந்த அறைக்குள் போன ராதை, அந்தக் குழந்தையைப் பார்த்ததும் அதன் கையிலிருந்த மாம்பழத்தைத் திருப்பித் தரும்படி கேட்டிருக்கிறாள். குழந்தை மறுக்கவே, பழத்தை அதன் கையிலிருந்து பறித்து விட்டாள். கோபத்தில் குழந்தை ராதையின் கையைக் கடித்து விட்



டது. ராதை குழந்தையைக் கண்டிப்பதற்காக குழந்தையின் முதுகில் ஒரு தட்டுத் தட்டி விட்டாள். குழந்தை வீறிட்டு அழ ஆரம்பித்தது. நான் அங்கே ஓடிப்போய்ப் பார்த்தேன். குழந்தை என் கால்களை வந்து கட்டிக்கொண்டு ராதையைச் சுட்டிக் காட்டி அவள் அடித்துவிட்டதாகப் புகார் செய்தான். நான் ஒன்றையும் தீர விசாரியாமல் 'காய்ச்சலிலிருந்து பிழைத்து வந்த குழந்தையை இவ்வளவு கொடூரமாக நடத்தும் உனக்கு எப்படிக் குழந்தை பிறக்கும்!' என்று கேட்டுவிட்டேன். ராதையிடமிருந்து பூராத்தகவல்களையும் தெரிந்து கொண்டதும்தான் என்னுடைய தவறை நான் உணர்ந்து கொண்டேன். உண்மையிலேயே 'டைபாய்ட்' ஜுரத்திலிருந்து அப்பொழுதுதான் மீண்ட குழந்தை மாம்பழத்தை சாப்பிடக்கூடாது என்ற நல்ல எண்ணத்துடன்தான் குழந்தையை ராதை கண்டித்திருக்கிறாள் என்பது என் புத்திக்கு எட்டியது. ஆனாலும் ஆத்திரத்தில் நான் பேசி விட்ட என் வார்த்தைகள் ராதையின் மனத்தில் நன்றாகத் தைத்து விட்டன. என்னுடைய போக்கிற்கு நான் எவ்வளவோ தடவை ராதையிடம் சமாதானம் சொல்லிப் பார்த்தும் பயனில்லை. அவள் மனத்தில் ஏற்பட்டிருக்கும் ஏக்கம் மாறவில்லை' என்று சொல்லி முடித்தான் ராமமூர்த்தி.

ராமமூர்த்தி கூறிய நிகழ்ச்சி என் மனக் கண் முன் ராதை ஐந்து வயதுக் குழந்தையா யிருக்கும் போது என் குடும்பத்தில் நடந்த ஒரு சம்பவத்தை ஞாபக மூட்டியது. என்னையுமறியாமல் எனக்கு மயிர் கூச்சல் எடுத்தது. என் முக பாவத்தில் தோன்றிய மாறுதலைக் கண்ட ராமமூர்த்தி 'என்ன ஸார், ஏதோ மாதிரி இருக்கிறீர்களே' என்றான். ராமமூர்த்தி மேலும் வேண்டிக் கொள்ளவே அச் சம்பவத்தைத் தெரிவித்தேன்.

"ராதைக்குச் சுமார் ஐந்து வயதிருக்கும். அன்று வெள்ளிக்கிழமை. வெளியூரிலிருந்து அன்று மாலை என்னுடைய உறவினர்கள் சில பேர் வந்திருந்தார்கள். அவர்களை உபசரிப்பதில் மூழ்கியிருந்தாள் என் அகத்துக்காரி. அவள் வெள்ளிக் கிழமை தோறும் சாயங்காலத்தில் எங்கள் தெருவிலிருக்கும் பிள்ளையார் கோவிலுக்கு அபிஷேகத்திற்குப் பால் கொண்டுபோவது வழக்கம். வழக்கம் போல் ராதையும் கூடப்போவாள். அன்று விளக்கு வைத்ததும் கோவிலுக்கு என் அகமுடையாள் கிளம்பாததால், ராதை தானாகவே பாலை எடுத்துக் கொண்டு கோவிலுக்குப் போகலாம் என்று நினைத்துக் கொண்டு, ஒருவரிடமும் சொல்லாமல் சமையற் கட்டுக்குள் போய் அங்கே வெண்கலச் சொம்பில் வைத்திருந்த பாலை, சொம்புடன் தூக்கினாள். பாத்திரம் பளுவாயிருந்தது. கை நழுவ விட்டுவிட்டாள். பாத்திரம் கீழே விழுந்த சத்தத்தைக் கேட்டதும் என் அகமுடையாள் சமையலறைக்கு ஓடினாள். பால் கீழே கொட்டி யிருந்தது. வெள்ளிக் கிழமையும் நல்ல நாளுமாகப் பாலைக் கொட்டியதற்காக ஒரு நாளும் இல்லாத வழக்கமாக ராதையை ஓங்கி அறைந்து விட்டாள் என் அகத்துக் காரி இந்துமதி. வாசல் திண்ணையிலிருந்த என்னிடம் 'கோ' வென்று அலறிய வண்ணம் ஓடிவந்தாள் ராதை. ராதையின் முதுகில் இந்து மதியின் கை விரல்கள் நான்கும் பதிந்திருந்தன. எனக்குக் கோபம் தாங்கவில்லை. தனக்குக் குழந்தை பிறக்கவில்லையே என்று ஏங்கிக்கிடக்கும் இந்துமதியின் செய்கை என்னை நிதானமிழக்கச் செய்துவிட்டது. அவ்வளவுதான்! இப்படி குழந்தை யென்று பாராமலேயே - கேவலம்; ஒரு படி பால் நஷ்டமானதற்காக, ராதையை அடித்து விட்டாயே! உன் குணம் தெரிந்துதான் தெய்வம் உன்னை இன்னும் ஒரு தாயாராக இல்லாமல் வைத்திருக்கிறது' என்று ஆத்திரத்தில் பொரிந்து தள்ளிவிட்டேன். என் மனம் சாந்தியடைந்ததும் தான் எவ்வளவு கொடூரமான வார்த்தைகள், என் வாயிலிருந்து சிதறி விட்டன என்று தெரிந்துகொண்டு மிகவும் வருத்தப் பட்டேன். வருந்தி என்ன பயன்!





"இந்தச் சம்பவம் நடந்து இரண்டு வருஷங்கள் கழித்து எங்களுடைய முதல் குழந்தை பிறக்கும் வரை இந்துமதி பட்ட மனோ வேதனையையும், நான் அறிந்தும் அறியாமலும் சிதறிய கண்ணீரையும் இப்பொழுது நினைத்துப் பார்த்தால் கூட என்மீதே எனக்கு வெறுப்பாயிருக்கிறது.

"என்னைப் போலவே நீயும் உன் கோபத்துக்கு அடிமையாகி விட்டாய் என்று கேட்டது முதல் என் மனம் மிகவும் சஞ்சலப்படுகிறது" என்று சொல்லி முடித்தேன்.

"பெண்களின் மனம் இம்மாதிரி விஷயங்களில் இவ்வளவு தூரம் ஒடிந்து விடுமென்று நான் இப்பொழுதுதான் தெரிந்து கொண்டேன். நான் உண்மையைச் சொல்லுகிறேன். நீங்கள் என்னை நம்பலாம். ராதைக்கு இப்பொழுது இருக்கும் உடம்பில் அவள் கருத்தரித்து அதனால் உடலுக்குப் பலஹீனம் ஏற்பட்டு விடக்கூடாதே என்பது என் கவலை" என்றான் ராமமூர்த்தி.

"ராமமூர்த்தி, நடந்தது நடந்து விட்டது. இனி மேலாவது நீ ராதையிடம் பரிவாகவே நடந்து கொள்ள வேண்டும்" என்று கூறி ராமமூர்த்திக்கு விடை கொடுத்தனுப்பினேன்.

3

பல மாதங்கள் ஓடி மறைந்தன. பங்களூருக்குச் சென்றிருந்த என் குழந்தைகளும் மனைவி இந்துமதியும் திரும்பி விட்டார்கள். அன்றொரு நாள் நான் ஆபீசை விட்டு வந்ததும் வராததுமாக இந்துமதி 'ராதைக்கு அடுத்த மாதம் சீமந்தமும் வளைகாப்பும் நடக்கப் போகிறதாம்' என்றாள் குதூகலத்துடன். அதைத் தொடர்ந்து அவள் கொடுத்த கடிதத்தை வாங்கிப் பிரித்துப் பார்த்தேன்.

கல்கத்தா

இந்துமதி மாமிக்கு ராதை அநேக நமஸ்காரம். இங்கே எல்லோரும் சௌக்கியம். அங்கே 'பம்பாய் மாமா' குழந்தைகள், உங்கள் க்ஷேமத்திற்கும் பதில் போடக் கேட்டுக் கொள்ளுகிறேன். என் உடம்பு இப்பொழுது சுகமாக இருக்கிறது.

அடுத்த மாதக் கடைசியில் அநேகமாக எனக்குச் சீமந்த முகூர்த்தமும், அதையொட்டி வளைகாப்பு வைபவமும் நடக்கும்போலிருக்கிறது. இதை 'பம்பாய் மாமா'விடம் தெரிவிக்கவும். முகூர்த்தப் பத்திரிகைகளை மாப்பிள்ளையைச் சீக்கிரம் அனுப்பி வைக்கச் சொல்லுகிறேன். இங்கு வந்து முகூர்த்தத்தை நடத்தி வைப்பது உங்கள் பொறுப்பு என்று நான் சொல்ல வேண்டியதில்லை.

நான் குழந்தையாயிருந்தபோதே மாமா என்னிடம் ரொம்ப அன்பாயிருப்பார். என் முகம் கொஞ்சம் வாடினால்கூட அவர் சகிக்க மாட்டார். அதேமாதிரி என் முகத்தில் சிரிப்புத் தவழ்ந்தால் அதைக் கண்டு நான் முழுவதும் ஆனந்தப்பட்டுக் கொண்டிருப்பார். இப்பொழுது இந்தச் சுபச் செய்தியை அவர் அறிந்ததும் எவ்வளவு சந்தோஷப்படுவார் என்று நினைத்து நான் அடையும் மகிழ்ச்சியைச் சொல்லி முடியாது.

நான் சென்ற தடவை அங்கே வந்திருந்த போது உங்களைப் பார்க்க முடியவில்லை. மாமாவிடம் சில நகல்களைத் தெரிவித்து வந்தேன். 'பம்பாய் மாமா' அவர்கள் அவைகளைப் பற்றி 'அவரிடம்' சவிஸ்தாரமாக பேசியிருக்கிறார்கள். எனக்காக ஒரு பெரிய காரியத்தைச் செய்திருக்கிறார். இதை நினைத்துப் பார்க்கும்போது மாமாவுக்கு என்மீதுள்ள அன்பை எண்ணிப் பெருமையடைகிறேன்.

உங்கள் மருமாள், ராதை.

நான் அந்தக் கடிதத்தைப் படித்து முடித்ததும் இந்துமதி "ஆமாம், போன தடவை ராதை இங்கே வந்திருந்தபோது என்ன நடந்தது!" என்றாள் பதிலுக்கு. நான் ராதைக்கும் எனக்கும் நடந்த சம்பாஷணையைப் பற்றியும் அதைத் தொடர்ந்து நானும் ராமமூர்த்தியும் பேசிக் கொண்டதையும் விவரமாக எடுத்துச் சொன்னேன். எல்லாவற்றையும் பொறுமையாக கேட்டுக் கொண்டிருந்து விட்டு, "நீங்கள் பார்த்துத் தேர்ந்தெடுத்த ராதையின் புருஷனும் உங்களைப் போலவா துர்க்குணம் படைத்தவனாக அமைய வேண்டும்!" என்று போட்டாள் ஒரு போடு.

நான் பதிலுக்குப் பலமாகச் சிரித்தேன். "நான் சொல்லுவதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது!" என்றாள் இந்துமதி மீண்டும்.

"நீ கேட்ட கேள்வியைப் பார்த்து நான் சிரிக்கவில்லை. அதற்குக் காரணம் வேறு இருக்கிறது. என்னைப் போல துர்க்குணம் உள்ள ஒருவனைப் புருஷனாக அடைந்து இருபது வருஷம் குடும்பம் நடத்திக் குப்பை கொட்டிவிட்ட உன்னுடைய பொறுமையை நினைத்தபோது சந்தோஷம் தாங்காமல் சிரித்து விட்டேன்" என்றேன்.

வேறு வழியின்றி இந்துமதியும் என்னுடைய நகைப்பில் கலந்து கொண்டாள்.


பியர்ஸ் டால்கம் பௌடர் உபயோகியுங்கள்
முகத்திற்கு —
உடலுக்கு —
குழந்தைக்கு —
பியர்ஸ்
டால்கம்
பௌடர்
ஒன்றில் 3 பௌடர்கள் சேர்ந்தது
PEARS
TALCUM
POWDER
அழகுதரும்
அசல் கிளிசரின் சேர்ந்த சோப்

ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரசாமி

16. மூளைக் கோளாறு

மூளைக் கோளாறில் பலவிதம் உண்டு. மந்த புத்தி, ஆழ்ந்து நோக்கி ஆராயும் திறன் இல்லாமை, அதிமேதாவித்தனம், பிரமை, காரணமில்லாமல் ஒருவித பயம், பைத்தியம், ஹிஸ்டீரியா, சில வலிகள் முதலியன.

மந்த புத்தியுடையவர்களுக்குக் கேட்கும் விஷயம், பார்க்கும் காட்சிகள் உடனே மூளைக்கு எட்டாது. அப்படி எட்டினாலும், அவை அங்கு தங்காது. மீண்டும் மீண்டும் பன்முறை பார்த்துக் கேட்டபிறகே, விஷயத்தைக் கிரகிக்கமுடியும். இது எதனால் உண்டாகிறது என்றால் மூளையில் பின்னிக்கிடக்கும் நரம்புகளுக்குப் போதிய உணர்ச்சியும் சக்தியுமில்லாமையால்தான். ஒரு விஷயத்தை உணர்வது என்றால் என்னவென்று முன் அத்தியாயங்களில் கூறப் பட்டிருக்கிறது. சாதாரணமாய் ரத்தம் பாய்வதுடனல்லாமல் விஷயத்திற்குத் தக்கபடி ரத்தம் அதிகமாக அவ்விஷயத்திற்குச் சம்பந்தப்பட்ட இடத்திற்குச் செல்வதையே உணர்வு என்பது. எவ்வளவுக் கெவ்வளவு நாம் ஒரு விஷயத்தைப்பற்றி ஆராய்கின்றோமோ அவ்வளவுக்கும் அவ்விஷயத்தைச் சேர்ந்த பாகம் நரம்புகளால் ஆழ உழப்பட்டுக் கால்வாய்களைப் போல அமைந்து விடும். மூளைக்கு எட்டிய விஷயத்தையும் பார்த்த விஷயத்தையும், பஞ்சேந்திரியங்களால் உணரும் விஷயங்களனைத்தையும் மூளை அப்படியே பதிவு செய்து கொள்கின்றது.

ஏதோ ஒரு சமயம் நல்ல அழகான காட்சியைக் கண்டிருப்போம். அதை இப்பொழுது பார்க்காவிட்டாலும் கண்ணை மூடிக் கொண்டு அதை நினைத்தால் அக்காட்சி அப்படியே சினிமாப் படம் போல நம் முன் நடைபெறும். அதைப்போல எப்பொழுதோ கேட்ட இனிய நாதத்தை நினைத்தால் அது காதில் ஒலிப்பது போன்று தோன்றும். வாசனையும் அவ்வாறே. மனோரஞ்சிதப் பூவை நினைக்கும்போது அம்மலரினின்று வாசனை வருவது போல் தோன்றும். ஊறுகாயை நினைத்துக் கொள்ளுங்கள், உடனே வாயில் எல்லாப் பக்கங்களிலும் ஜலம் நிறைய ஊறும். நாம் என்ன அந்தச் சமயம் ஊறுகாயையா தின்கிறோம்! அல்லது பார்க்கவாவது செய்கிறோமா! நினைத்த மாத்திரத்தில், முன்பு இன்று, ருசியை அனுபவித்து, ஏற்கெனவே அந்நரம்புகளின் மூலமாய் அவ்வுணர்வு உடலெங்கும் பரவுகின்றது. நாம் குழந்தை இன்பத்தை அப்படியே அனுபவிக்கின்றோம்.

இப்பஞ்சேந்திரியங்களின் உணர்ச்சி எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாயிருக்கின்றதோ அவ்வளவுக்கும் மனிதன் புத்திசாலியாக இருக்கிறான். இவ்வுணர்ச்சி எவ்வளவுக் கெவ்வளவு மட்டமாய் இருக்கின்றதோ அவ்வளவிற்கும் மந்த புத்தி அதிகமாகின்றது. இக்கோளாறை எந்த மருந்தினாலும் குணப்படுத்த முடியாது. அது "அவரவர்களின் கொடுப்பினை" என்று முடிவுகட்டி விடுவார்கள். ஆனால் சிரசாசனம் செய்து வந்தால் அந்த மந்தபுத்தி விலகும். பூமியின் ஆகர்ஷண சக்தி மூளைக்கு நல்ல ரத்த போஷணையை அளிக்கிறது. எனவே மூளையிலுள்ள பகுதிகள், நரம்புகளெல்லாம், சுறு சுறுப்பெய்துகின்றன. விஷயங்களைச் சீக்கிரமாக கிரகிக்கவும், கிரகித்த விஷயத்தைச் சீக்கிரமாக வெளிப்படுத்தவும் சக்தி ஏற்படுகிறது. மூளை மந்தமானவர்களுக்கு வேண்டியதெல்லாம் மூளைக்கு அதிக ரத்தமே. அது சிரசாசனம் அளித்துப் பூர்த்தி செய்துவிடும்.

சிலருக்கு ஒரு விஷயத்தில் ஆழ்ந்து வேலைசெய்ய முடியாது. இது பல காரணங்களால் உண்டாகலாம். மூளையின் பலவீனம் என்று பொதுவாய்ச் சொல்லி விடலாம். ஆனால் அம்மூளை எதனால் அப்படி பலவீனம் அடைகிறது என்று தெரிந்து கொண்டால் அதை விலக்க வழியுண்டாவென்பதை அறியலாம். இக்கோளாறு அநேகமாய் நரம்பு பலவீனத்தினால் உண்டாகின்றது. இதன் கூட ரத்தக் குறைவும் சேர்ந்து கொள்கின்றது. ரத்தத்தில் போதிய சக்தியில்லாமலும் இருக்கலாம். இம்மாதிரி குறையெல்லாம் தானாகவே உண்டாகி விடாது. நமது ஆகாரப் பிசகினாலும் நடத்தைப் பிசகினாலும் நாமே உண்டாக்கிக் கொள்ளுவதே. ஆகாரத்தில் சத்துகள் போதிய அளவு இல்லாமல் இருந்தாலும் ரத்தம் சரியாயிருக்காது. நமது நடத்தையினால் நமது உயிருக்கு ஆதாரமான வீரியத்தை அதிகமாய்ச் செலவழிப்பதினாலும் நரம்புகள் பலவீனம் அடையலாம். எனவே முதலில் இதைத் தவிர்த்து நம் கட்டுப் பாட்டுக்குக் கொண்டு வரவேண்டும். இதைச்



“உங்கள் பையனுக்கு நன்றாய்க் குத்துச் சண்டை போடச் சொல்லிக் கொடுத்து விட்டேன். அவனிடம் யாரும் ஒன்றும் பண்ண முடியாது!”

“அதுசரி, அவனை விடக் குத்துச் சண்டையிலே கெட்டிக்காரனை ஒருவனிடம் அகப்பட்டுக் கொண்டால் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பையனுக்குச் சொல்லி வைத்திருக்கிறீர்களா?”

“ஓ, பேஷாய்! அதை உத்தேசித்துத் தான் உங்கள் பையனுக்கு வேகமாய் ஓடுவதற்கும் சொல்லிக் கொடுத்திருக்கிறேன்!”

கலையும், வைசிகலையும் கொண்டு இவைகளைச் சரிக் கட்ட முயற்சிக்கலாம். ஒருவாறு பலனும் ஏற்படலாம். எல்லாம் மருந்தைப் பிரயோகிக்கும் வரைக்கும்தான். ஆனால் ஒரு மனிதன் ஆயுள்வரை இம்மாதிரி மருந்துகளுடன் போராடிக் கொண்டிருக்க முடியுமா! இதுவேதான் வாழ்வின் லட்சியமா! இதிலிருந்து விடுதலை கிடையாதா! மனிதன் உயர மார்க்கமில்லையா! உண்டு. மனிதன் ஆயுள் உள்ள மட்டும் சுகமாக வாழ, மருந்தில்லாமல் வாழ, மருந்துக்குப் பணம் வேண்டுமே என்று திண்டாடாமல் வாழ வழியுண்டு. அது மாத்திரமல்ல! ஒரு மனிதன் நோயில்லாமல் மந்த புத்தியில்லாமல் வீரியத்துடன் வாழ்ந்தால் மட்டுமே போதாது. அவனை இன்னமும் மேலான பண்புக்கு அழைத்துச் செல்லும் மார்க்கம் வேண்டும். அது யோகாசனத்தில் தான் அமைந்திருக்கின்றது. அதிலும் சிரசாசனம் தான் இப்பண்புகளுக் கெல்லாம் மூல காரணம். நரம்புச் சக்கரங்களை யெல்லாம் கட்டியாளும் திறன் பிட்யூடரி கோளத்திற்குப் பிரத்தியேகமானது. சிரசாசனம் செய்வதால் பிட்யூடரி பலமடைந்து, தளர்ந்து இழந்த நரம்பு சக்தியை மீண்டும் அளிக்கின்றது. மூளைக்கும் ரத்தம் நன்கு பாய்வதால் மூளையும் நல்ல சக்தியை அடைகிறது. ரத்தத்திலும் நாம் சாப்பிட்ட சத்துக்கள் சரிவர சேர்கின்றன. எனவே சிரசாசனம் இவைகளுக் கெல்லாம் சிரசாய் அமைந்திருப்பதில் ஆச்சரியமென்ன!

அதி மேதாவித்தனம்! இதென்ன, இதுவும் ஒரு கோளாறு! என்று கேட்கலாம். இது கோளாறல்ல, கோளாறின் எல்லையை எட்டிப் பார்ப்பது. அதிமேதாவித்தனமும், பைத்தியமும் ஒரு எல்லைக் கோட்டில் சந்திப்பன. மேதாவித்தனம் அதிகமாக ஆக பயித்தியத்தின் எல்லையை நெருங்குவதாகும். சிறிது தவறினாலும் பயித்தியத்தின் எல்லையை மிதிக்க வேண்டிவரும். சிலர் அதற்குள்ளேயே கூடப் போய் விடுவார்கள். இதற்கு உதாரணமாக எத்தனையோ பேர்களைச் சொல்லலாம். நல்ல அறிவாளிகள் நிறைந்த குடும்பத்தில் மேதைகள் உள்ள குடும்பத்தில் இப்படிப் பயித்தியமான ஆட்களும் இருப்பதைப் பார்க்கிறோம். ஏன், அதிமேதாவிகள் கூடப் பைத்தியமாக மாறி விடுகின்றனர். சிலருக்குக் கணநேரத்தில் பைத்தியம் தட்டும். இவைகளெல்லாம் அதி மேதாவித்தனத்தினால் உண்டாகும் கோளாறுகளாகும்.

அப்படியானால், புத்திசாலித் தனமும், மேதாவிலாசமும் மிகவும் அபாயம் என்றல்லவா சொல்லுகிறீர்கள்! ஆகையால் மடத்தனமே மேல் போலத் தோன்றுகிறதே என்று கூறலாம். மேதை, அறிவு, ஞானம், புத்திசாலித்தனம் கட்டாயம் வேண்டியதே. ஆனால் அதைத் தாங்கக் கூடிய மூளை பலமும் வேண்டும். அப்படி மூளை பலமுடையவர்கள் எவ்வளவு மேதைகளானாலும், தாங்குவார்கள். மூளை நரம்புகள் பலமுடையவர்கள் எவ்வளவு தீட்சண்ய புத்திசாலிகளாய் இருந்தாலும் தாங்குவார்கள். ஆனால் சிறிது லேசாய் மூளைப் பலவீனமானவர்கள் இவைகளையெல்லாம் தாங்குவது கடினம். ஒரு விஷயம் ஆராய ஆராய, யோசிக்க யோசிக்க அவர்களது மூளையில் ரத்தம் நன்கு ஊடுருவிப் பாய்ந்து விஷய ஞானங்களைச் சேகரித்து உதவுகின்றன. இப்படி நாள் ஆக ஆக நரம்புகள் தேய்ந்தோ, வெடித்தோ பலவீனப்பட்டோ, மூளை பாகம் கெட்டோ அவர்கள் பைத்தியம்போல் ஆகி விடுகின்றனர். இம்மாதிரி ஆவதைத் தடுக்க வேண்டுமானால் மூளையை உபயோகிக்கும் எல்லோருக்கும் சிரசாசனம் செய்வதைத் தவிர மார்க்கம் இல்லை.

மூளைக்குப் பலத்தை எதனால் தரமுடியும்! எப்படித் தரமுடியும்! மூளைக்குப் பலம் இருக்கிறதா என்று பாரத்தைத் தூக்கிப் பார்க்க முடியுமா! அதற்குப் பலம் உண்டாக்கப் பாதம் ஹல்வாவை மூளைக்குள் திணிக்க முடியுமா! எல்லாம் ரத்தத்தின் மூலமாகத்தான் போஷணையும், பலமும் தரமுடியும். சிரசாசனத்தில் அவை கிடைக்கின்றன. ஆகையால், மூளையை அதிகமாய் உபயோகிக்கும் பேராசிரியர்கள், எழுத்தாளர்கள், கவிகள், வக்கீல்கள், நீதிபதிகள், கணக்கெழுதுபவர்கள், வர்த்தகர்கள், டாக்டர்கள், கலைஞர்கள் முதல் மாணவர்கள் வரை யாவரும் சிரசாசனம் செய்தால் என்றும் எப்பொழுதும் மூளை பலம் பொருந்தியவர்களாய் இருப்பார்கள். மற்றும் அவர்கள் செய்யும் தொழில்களுக்கும் இது அபிவிருத்தியையும் தெளிவையும் கொடுக்கும். இம்மாதிரி ஏதாவது, மூளைக் கோளாறுகள் உண்டாகும் என்ற பயமில்லாமல் வாழலாம்.

பிரமை, காரணமில்லாமல் பயப்படுதல் முதலியவைகள் பைத்தியத்தின் ஒரு பாகமாகத் தெரிந்தாலும் அது பைத்தியத்துடன் சேர்க்கையல்ல. மூளை அமைப்பில் ஒருவித லேசான உறுத்தல் ஆகும். அநேகமாய் சிறு கடுகளவு சதை வளர்ந்து மூளையை உராய்ந்தாலும் இம்மாதிரி உண்டாகும்.

ஒரு பெண்மணிக்கு அடிக்கடி யாரோ ஒரு முரட்டு மனிதன் வருவதாகவும், தன்னை நெருங்குவதாகவும் கண்டு பயப்படுவாளாம். இதன் காரணம் தெரியாமல் மூளை ஸ்பெஷலிஸ்டிடம் கொண்டு சென்றார்கள். அவர் மூளையின் பல

பாகங்களை மெலசான மின்சாரக் கம்பியினுல் தொட்டுப் பார்த்துக்கொண்டே வந்தார். இடது பக்கம் காதோரமுள்ள மூளையில் தொட்டதும் கையை மடக்கிக் கொண்டாளாம். 'ஏன் கையை மடக்குகிருய்' என்ருல் 'எனக்குத் தெரியாது. அது மடங்குகிறது' என்ருளாம். அதற்கு மேல் பக்கம் சிறிது தள்ளித் தொட்டதும் காலை மடக்கிஞளாம். அதுவும் தன்னையறியாமலேயே 'மடக்கப்பட்டது' என்று சொன்ஞளாம். எனவே இடது பக்க மூளை பாகம் உடலின் வலது பாகத்தை ஆட்சி புரிகின்றது என்பதையும், வலது மூளை பாகம் இடது பக்கத்தை ஆட்சி புரிகின்றதையும் தெளிவாக்குகின்றது. அப்படியே அவர் பல பாகங்களையும் ஆராய்ந்து வரும்போது ஒரு இடத்தில் தொட்டதும் "அதோ! அதே மனிதன், முரடன் வருகிறுன்! ஐயோ! நெருங்கி விட்டானே! பயமாய் இருக்கின்றதே" என்று அலறிஞளாம். டாக்டர் அந்த இடத்தை ஊன்றிக் கவனிக்கும்போது அந்த இடத்தில் உராயும்படியாக ஒரு துளி சதை வளர்ந்திருப்பதைக் கண்டார். அப் பெண்மணி சிறு வயதில் இம்மாதிரி யாரையாவது பார்த்துப் பயப்பட்டிருக்க வேண்டும். அது அப்படியே மூளையில் மற்ற விஷயங்களைப்போல பதிவாகி யிருக்கின்றது. ஆஞல் இந்த விஷயம் பதிவான இடத்தில் மட்டும் புதிய சதை உறுத்துவதால் அந்தப் பெண்மணிக்கு இம்மாதிரி பயங்கரக் காட்சி தோன்றிக் கொண்டிருந்தது. டாக்டர் அச்சதையை அறுத்து எடுத்து ஆபரேஷன் செய்து விட்டார். அப் பெண்மணிக்கு முன்போல அக் காட்சி வருவதில்லையாம். சாதாரணமாய் நம்மைப் போலவே இருக்கிருளாம். எனவே மூளையில் இம்மாதிரி சதை வளர்வதிஞலும் ஒருவித பயம் ஏற்படலாம். மூளை பலவீனத்தாலும் பிரமை-பயம் ஏற்படலாம். இம்மாதிரி பொதுவாய் மூளை பலவீனம் என்று சொன்ஞலும், அது பார்க்கப் போஞல் பிட்யூடரியும் தைராய்டின் பலவீனத்திஞல் ஏற்பட்ட மூளை பலவீனமாய் இருக்கும். சதை வளர்ந்து அதஞல் கோளாறு இருந்தால் அதற்கு ஆபரேஷன் தவிர வேறு மார்க்கமில்லை. ஆசனத்திஞல் அதைப் போக்க முடியாது. ஒன்றை மட்டும் வாசகர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இயற்கையாய் ஏற்கெனவே சற்றுத் தாறுமாருய் வளர்ந்துவிட்ட சதைகளையோ, புண் காயங்களால் ஏற்பட்ட உள் தழும்புகளையோ, எலும்புகளையோ, ஆசனங்களால் குணமாக்க முடியாது. சில பிறவிக் குறைகளையும் நீக்க முடியாது. கண் இல்லாதவர்களுக்குக் கண்ணையோ, கால் சூம்பினவர்களுக்கு நல்ல காலையோ, செவிடர்களுக்குக் காது கேட்கவோ, பல் இல்லாதவர்களுக்குப் பல்லையோ, உண்டாக்க முடியாது. பிறவியில் சரியாயிருந்து, பிறகு ஏற்படும் பல நோய்களைத் தடுக்க முடியும். முக்கியமாய்க் கோளங்களின் குறைகளைத் தீர்க்க முடியும். இதைவிட்டு எல்லாமே செய்து விடலாம் என்ருல் அது ஏமாற்று வித்தையாகும். சிலவற்றிற்கு ஆபரேஷன் இல்லாமல் ஆரம்பத்தில் கவனித்தால் ஆசனங்களால் நீக்க முடியும். சில வியாதிகள் முற்றி யாராலும் தீர்க்க முடியவில்லையென்ற நோய்களும் ஆசனங்களால் தீருகின்றன.

பிட்யூடரி, தைராய்ட் முதலிய கோளாறுகளிஞல் மூளைக் கலக்கம் இருந்தால் அதைச் சர்வாங்காசனம், சிரசாசனம் முதலியவைகளைச் செய்வதால் போக்கடிக்கலாம். (தொடரும்)

ராஜூவின் தந்தை



எல். வி. எஸ்

டிசம்பர் மாதத்தில் எனக்கு இரண்டு டைரிகள் வந்தன. அவை வந்த நிமிஷத்தி லிருந்து என் பிள்ளை ராஜூ, (அவனுக்கு வயது பன்னிரண்டிருக்கும்) "அப்பா, நேக்கு ஒரு டைரி அப்பா" என்று நச்சரிக்க ஆரம் பித்து விட்டான். நச்சரிப்பு என்றால் இவ் வளவு அவ்வளவு என்று சொல்லி முடியாது. ஆபீஸ் போகும்போது கேட்பான்; குளிக்கப் போகும்போது கேட்பான். நிற்கும்போது கேட்பான்; உட்காரும்போது கேட்பான். இன்ன வேளையில்தான் கேட்க வேண்டும், இன்ன இடத்தில்தான் கேட்க வேண்டும் என்ற வரைதுறை யெல்லாம் பார்க்க மாட் டான். எப்படியாவது அவன் காரியம் ஆனால் சரி. அவ்வளவுதான்.

இந்த டைரி விஷயத்தில்தான் இப்படி என்று எண்ணிவிடாதீர்கள். எதிலுமே அவன் அப்படித்தான். இப்படி ஒரு பிள்ளை இருந் தால் பெற்ற தகப்பனுக்குக் கோபம் வருமா வராதா? நீங்களே சொல்லுங்கள்! அதிலும் என் கோபம் உண்டே, ரொம்பக் கெட்ட கோபம்! அந்தக் கோபத்தில் நான் என்ன செய்கிறேன் என்பது எனக்கே தெரியாது. கண்மூக்குத் தெரியாமல் அடித்து விடுவேன்.

★

அன்றைக்குப் பாருங்கள். நான் ஏதோ வேலையிலிருந்தேன். ராஜூ வந்தான். "அப்பா என் சட்டைகள் எல்லாம் கிழிந்து போய் விட்டன. நாளைக்குப் பள்ளிக்கூடத்துக்குப் போட்டுக் கொண்டு போகச் சட்டையே இல்லை. இருபது ரூபாய் கொடுங்கள். நான் நாலு ரெடிமேட் சட்டைகள் வாங்கிக் கொள்கிறேன்" என்றான்.

"பணமும் இல்லை, ஒன்றுமில்லை. அப்புறம் ஆகட்டும்" என்றேன்.

"ஏன் அப்பா, நேற்றைக்கு ராத்திரிதானே நூறு ரூபாய், பத்து ரூபாய் நோட்டுகளாகப் பெட்டியில் கொண்டு வந்து வைத்தாய். நான்தான் பார்த்துக் கொண்டிருந்தேனே! இன்றைக்கு இல்லை என்கிறாயே" என்றான் வந்திருந்தவர் எதிரில்.

வந்திருந்தவர் யாராக இருக்கும் என்று கருதுகிறீர்கள்? என்னிடம் பத்து ரூபாய் கைமாற்றாக வாங்கிக் கொண்டு போக வந் திருந்தவர்தான். நானும் ஒரு நிமிஷத்துக்கு முன் அவரிடம் "என்னிடம் காலணா என் றால் காலணா இல்லை" என்று பொய் சொல்லி வைத்திருந்தேன். இந்த கைய தர்ம சங்கடமான நிலையில் ராஜூ வந்து இப்படிப் பேசினால் எனக்கு எப்படியிருக்கும்? நான் கோபம் அடைவதும் இயல்புதானே?

அந்தக் கோபத்தில் "நீ எங்கேடா பார்த்தாய்? அது யார் பணம் தெரி யுமா உனக்கு? உனக்குச் சட்டையா வேண்டும்? முதலில் உன் மேல் தோலை உரித்து விடுகிறேன்" என்று அடிக்கப் போனேன்.

வந்திருந்தவர், "ஸார், எனக்குப் பணம் கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை. பையனை ஒன்றும் பண்ணாதீர்கள், ஸார்! பாவம், அடித் தது போதும், ஸார்" என்று கெஞ்சினார்.

இவ்வளவு அடி உதை வாங்கியிருக்கிறானே, இவை மறுநாள் வரையிலாகிலும் அவனுக்கு நினைவில் இருக்கும் என்கிறீர்களா? — அது தான் கிடையவே கிடையாதே!

★

மறுநாளே, "அப்பா, கிரிக்கெட் மாட சுக்கு ஸீஸன் டிக்கெட் வாங்கப் பதினைந்து ரூபாய் கொடுங்கள்" என்பான்.

"என்ன கிரிக்கெட் மாட்சா?"

"ஆமாம், அப்பா! எங்கள் பள்ளிக் கூடத்தில் என் க்ளாஸ் பையன்கள் அத்தனை பேரும் வாங்கியிருக்கிறார்கள் அப்பா. எனக் குக்கூட வாங்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது அப்பா!" என்பான்.

"சரி, சரி, பார்ப்போம், போ!"



"ஒரு வாரமாகச் சங்குப் பிள்ளைக்கு இடுப்புப் பிடிப்புப்போலே இருக்கிறது. எங்கே போனாலும் குனிந்தபடியே போய்க் கொண்டிருக்கிறார்!"

"அதெல்லாம் ஒன்றுமில்லை. மனு ஷன் இரண்டணாக் காசை எங்கேயோ போட்டு விட்டார். அதைத்தான் இன் னும் தேடிக் கொண்டிருக்கிறார்!"

"எப்போ அப்பா?"

"ஆகட்டும் போ, பார்க்கலாம்."

"நீங்கள் பார்க்கிறதுக்குள்ளே டிக்கெட் ஆயிடும் அப்பா!" என்பான்.

அவ்வளவுதான்! என் பொறுமை எல்லை கடந்து விடும். நான் ருத்ராகாரமாகி விடுவேன். பிறகு பிரளயம்தான்!

இப்படி என் பிள்ளையை அடிப்பதும் வைவதும் திட்டுவதுமாகவே இருந்து வந்தேன். ஒரு நாள் எனக்குப் பச்சாத்தாபம் ஏற்பட்டது. ஆனாலும் நான் ராஜு விஷயத்தில் ரொம்பவும் கோபப்படத்தான் செய்கிறேன். அவன் எது கேட்டாலும் முடியாது என்று சொல்லி எரிந்து விழுந்து விட்டுப் பிறகு கொடுப்பானேன்? அவன் கேட்டவுடனேயே கொடுத்து விட்டால் என்ன குடி மூழ்கிவிடும்? அவன் மீது இனி கூடியவரையில் அன்பாக இருக்க வேண்டும் என்று தீர்மானித்தேன்.

இந்தத் தீர்மானத்தைக் கிரியாம்சையில் இப்பொழுதே கொண்டுவர வேண்டும் என்று தீர்மானித்தேன்.

"டேய் ராஜு இங்கே வா! நீ டைரி வேண்டும், டைரி வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தாயே, இந்தா இதை எடுத்துக் கொள்!" என்று கொடுத்தேன். அவன் முகத்தில் ஒரே மகிழ்ச்சி; குதூகலம்!!

பிறகு—அன்றுதான் ஜனவரி முதல் தேதி ஆனதால்—முதல் பக்கத்தில் அன்று நான் செய்து கொண்ட சங்கல்பத்தை எழுதி வைத்தேன்:

"இனி, நான் ராஜுவை அனாவசியமாகக் கடிந்து கொள்ளக் கூடாது. அவனிடம் கூடிய வரை அன்பாகப் பழக வேண்டும். அவன் மீது எரிந்து விழலாகாது."


அன்றிரவு நிம்மதியாகத் தூங்கினேன். பொழுது விடிந்து எழுந்திருந்தேன். ராஜு படுக்கையில் படுத்து நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தான். அவனுடைய முகத்தைப் பார்த்தபோது எனக்கு ஏனோ அவன் மீது அளவுகடந்த வாத்சல்யம் ஏற்பட்டது. அவனுடைய எத்தனை ஆசைகளைக் கெடுத்தோம். இனி, அவன் சினிமா போகவேண்டும் என்று விரும்பினால் உடனே அனுப்பிவைக்க வேண்டும். எப்படியாகிலும் அவன் அன்பைப் பெற்றாக வேண்டும் என்று தீர்மானித்தேன். பிறகு அவனைத் தழுவிக் கொள்ள வேண்டும் என்ற ஆசையுண்டாயிற்று. குனிந்தேன். அவன் படுக்கையின் பக்கத்தில் டைரியிருந்தது கண்ணில் பட்டது. அவன் அதில் என்ன எழுதியிருப்பான் என்று பார்க்க ஆவல் உண்டாயிற்று. புரட்டிப் பார்த்தேன். ஜனவரி 1-ம் தேதி இதழில் பின்வருமாறு எழுதியிருந்தான்:

"இனி அப்பாவை நச்சரித்து, எரிச்சல் உண்டாகும்படி நடந்து கொள்ளக் கூடாது."

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

Regd. No. M 4392

Registered as a newspaper in Ceylon



HBS. 6-X30 TM

இராஸ்மிக் லிமிட், லண்டனுக்காக இந்தியாவில் தயாரித்தது.